










# தமிழரசு


1-8-1988 ரூ. 1



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 86-வது பிறந்த நாளன்று (15.7.88) மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் ஆகியோர் விருதுநகரில் உள்ள காமராஜரின் நினைவில்லத்துக்குச் சென்று அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.







பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளன்று (15-7-88) சென்னை-அண்ணாசாலையில் உள்ள காமராசர் திருவுருவச் சிலைக்கு - ஆளுநரின் ஆலோசகர்கள் திரு ஜி. வி. இராம கிருஷ்ணா, திரு ஆ. பத்மநாபன், தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன், செய்தி - சுற்றுலாத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ் ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

## 9 மாதத்தில் ஐந்தாவது ஊதியக் குழு அறிக்கை

# அரசு அலுவலர்- ஆசிரியர்

# ஊதியக் குழு

தமிழ்நாட்டில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்கான ஊதியக் குழுவை அமைப்பதாக தமிழ்நாடு அரசு வாக்குறுதி அளித்தது. அதற்கேற்ப ஊதியக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஊதியக்குழுவில் மூன்று பேர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் சங்கங்கள் — ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றுடன் கடந்த ஜூலை 15ஆம் தேதி, 22-ஆம் தேதி ஆகிய நாட்களில் அரசுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி ஒன்பது மாதங்களுக்குள் தனது அறிக்கையை அளிக்கும்படி ஊதியக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான ஊதியம், ஒரு மாத சம்பளத் தொகை போனஸ் ஆகிய கோரிக்கைகளைப் பரிசீலிக்கும்படியும், தமிழக அரசின் நிதி ஆதாரங்களையும், வருவாய் வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு பரிந்துரை செய்யும்படியும், ஊதியக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழக அரசின் வரலாற்றில் நான்கு ஆண்டு இடைவெளியில் நியமிக்கப்பட்டுள்ள ஊதியக் குழு இதுதான். இது ஐந்தாவது ஊதியக் குழுவாகும்.**

தற்போதைய ஊதியக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு ஜி.ராமானுஜம், சென்னை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியாக இருந்தவர். பின்னர் மத்திய அரசு அலுவலர்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட நிர்வாக நடுவர்மன்றத்தின் தலைவராகச்சென்ற மாதம் வரை பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

தற்போதைய ஊதியக் குழுவின் செயலாளராக நியமனமாகியுள்ள திரு எஸ்.குருமூர்த்தி நிதித் துறையில் கூடுதல் தனிச்செயலாளராகப் பதவி வகிப்பதோடு நிதி-திட்டமிடுதல் துறைகளில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்.

மற்றொரு உறுப்பினரான திரு எம்.ரகுபதி தமிழக அரசின் அதிக நிர்வாக அனுபவமுடைய மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆவார். வருவாய் வாரிய உறுப்பினராகவும், கடைசியாக, சென்னைப் பெருநகர வளர்ச்சி ஆணைக் குழுவின் துணைத் தலைவராகவும் பதவி வகித்திருக்கிறார்.

குழு தனது பணியைத் தொடங்குவதற்குமுன் பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களை அறிய, வினாப்பட்டியலைத் தயாரித்து வெளியிடும். கடந்த காலங்களில் இத்தகைய நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

ஊதிய விகித நிர்ணயம் பற்றிய கடந்தகாலப் பின்னணி, கூடுதல் அகவிலைப்படி அளித்தது, இடைக்கால நிவாரணம் வழங்கியது, வேறு இதர சலுகைகள் வழங்கியது ஆகியவற்றையும் கவனத்தில் கொள்ளும்படி ஊதியக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய சம்பள விகிதம், ஓய்வுபெறும்போது பெறும் சலுகைகள் ஆகியவற்றையும் குழு கவனத்தில் கொள்ளும்.

அத்துடன், மாற்றியமைக்கப்படும் ஊதிய விகிதங்கள் காரணமாக ஏற்படக்கூடிய கூடுதல் செலவைச் சமாளிப்பதற்கு மாநில அரசின் நிதி ஆதாரங்கள், வாய்ப்புக் கூறுகள் எவ்வாறு உள்ளன, அவற்றை அதிகரிப்பதற்கு வழி என்ன என்பனவற்றையும் பரிசீலித்து, பரிந்துரைக்கும்படி குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமல் நடத்தப்பட்டதன் காரணமாக, களையப்பட வேண்டிய முரண்பாடு ஏதேனும் உள்ளதா என்பதையும்குழுகண்டறியும்.

இந்த ஆண்டு ஜூன் முதல் தேதியிலிருந்துஅமலுக்கு வரும் வகையில் பரிந்துரைக்க அரசு கோரியுள்ளது.

தமிழரசு

1-8-1988

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - ஆடி 17

மலர்: 19 இதழ் : 3

1-8-1988




**காமராஜர் மாவட்டத்தில்**

# மாவட்ட பெருந்திட்ட வளாகக் கட்டிடத் திறப்பு விழா

**கா**மராஜர் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட பெருந்திட்ட வளாகக் கட்டிடங்களின் திறப்பு விழா, பல்துறைப் பணிகள் விளக்க விழா ஜூலை 15 மாலை 6 மணி அளவில் நடைபெற்றன.

மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு ஹரி பாஸ்கர் வரவேற்றார்.

திட்டத்தலைமைப் பொறியாளர், மண்டல குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் ஆகியோர் அறிக்கைகள் படித்தனர்.

விருதுநகர், நகர்மன்றத் தலைவர் திரு ஆர்.சொக்கர் உரையாற்றும்போது, ''விருதுநகரில் புதிய பஸ்நிலையம் அமைப்பதற்கும், அங்காடிகள் வளாகம் உருவாக்குவதற்கும், திருமண மண்டபம் கட்டுவதற்கும் உலக வங்கியினிடமிருந்து 2 கோடி ரூபாய் கடன் வாங்கித் தந்த அரசுக்கு நான் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டதுடன், ''மேம்பாலம், காமராஜர் பைபாஸ் ரோடு ஆகியவற்றை விரைவில் உருவாக்கித்தர வேண்டும்'' என்றும் கேட்டுக்கொண்டார்.

விருதுநகர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு க.சுப்புராஜ் பேசுகையில், ''இந்த மாவட்ட வளாகக் கட்டிடத்தைத் திறந்து வைக்கும் நேரத்தில், இதற்கு அடிக்கல் நாட்டிய மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களை நினைவு கூரவேண்டும்'' எறறு குறிப்பிட்டுவிட்டு, ''விருதுநகர் ஒன்றியத்தில் 200 கிராமங்கள் உள்ளன; இவற்றில் 80 கிராமங்களில்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கிறது; ஏனைய கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு அரசு ஆவன செய் செய்யவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.


சிவகாசித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு என் சௌந்தரராஜன் பேசுகையில், ''குமாரசாமி ராஜா, காமராஜர் ஆக இரண்டு முதலமைச்சர்களைப் பெற்றெடுத்த பெருமை இந்த மாவட்டத்திற்கு உண்டு. 1984ல் இந்த மாவட்டத்தை உருவாக்கித் தந்த எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நன்றி'' என்று குறிப்பிட்டார்.

இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி. ராஜேஸ்வரன் உரையாற்றுகையில், குறிப்பிட்டதாவது:

''பாரதப்பெருநாட்டில் தமிழகத்திற்கு எனத் தனி வரலாறு உண்டு. அதில் பிரிக்கப்படாத இராமநாதபுர மாவட்டத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. வரலாறு படைத்த காமராஜரின் பெயரில் நமது மாவட்டம் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும். காமராஜர், ஏழை எளிய மக்கள் நலமோடு வாழ்கின்ற தமிழகத்தை உருவாக்கினார். உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு என்ற திட்டத்தைக் காமராஜர் கொணடு வந்தார். பாடப்புத்தகத்தில் காமராஜரின் வரலாறு இடம் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.''

விழாவுக்கு முன்னிலை வகித்த மாண்புமிகு மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு எம்.அருணாசலம் தமது உரையில் தெரிவித்ததாவது:

''காமராசர் மாவட்டத்தை உருவாக்கிய மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கி



றேன். அவர் விட்டுச் சென்ற சமுதாய நற்பணிகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதில் நாங்கள் அக்கறையும் ஆசையும் கொண்டுள்ளோம்.

''காமராஜர், பிறந்தபோது எளிய குடும்பத்தில், ஏழையாகப் பிறந்தார், மறைந்த போதும், ஏழையாகவே மறைந்தார். அவர் தனிமனிதர் அல்லர்; பல்வேறு தலைவர்களின் கூட்டுச் சேர்க்கையாக விளங்கினார். நாடிவந்த பதவிகளை - தேடிவந்த பதவிகளைத் துச்சமென மதித்தவர். ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு தருவதே அவரது இலட்சியமாகத் திகழ்ந்தது.

''அவர் பூகோள சாஸ்திரத்தைப் படித்தது கிடையாது. ஆனால் தமிழகத்தின் பூகோளத்தை அவர் நன்கு அறிவார். தமிழ்நாட்டில் எங்கெங்கே நதிகள் ஓடுகின்றன? எங்கெங்கே ஏரிகள் உள்ளன? மக்கள் எந்த முறையில் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதெல்லாம் அவருக்கு நன்கு தெரியும்.

''காந்தியடிகளின் ஆத்ம சிந்தனையாக-நேருவின் சோஷலிஸ பாணி கலந்த ரசவாதியாகத் திகழ்ந்தார் காமராஜர்.''

நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றிருந்த மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்:

''13 இலட்சம் பேர் கொண்ட இம்மாவட்டத்திற்குக் காமராஜர் மாவட்டம் என்ற புதிய ஏற்பாட்டைச் செய்து-புதிய பெயரைச் சூட்டிய-மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களை நாங்கள் என்றென்றும் மறக்க மாட்டோம். என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.''

''காமராஜரின் ஆட்சிக்காலம் சர்ச்சைக்கு அப்பாற்பட்ட பொற்காலமாகத் திகழ்ந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அது ஓர் அரசியல் கட்சியின் ஆட்சியாக இருந்தாலும், ஆட்சியின் முறை, அரசியலுக்கு அப்பால்-கட்சிக்கு அப்பால் - சர்ச்சைகளுக்கு அப்பால்-விவாதங்களுக்கு அப்பால் -இந்திய நாட்டுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தது.''

''இன்று புரட்சிகரமாகத் தெரியும் பல திட்டங்களை 25 ஆண்டுகளுக்கு முன்னரே நடத்திக்காட்டியிருக்கிறார் காமராஜர். அவர் உருவாக்கிய 'பஞ்சாயத்து ராஜ்யம்' தான் இன்று நமது நாட்டில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.''

''திட்டங்களின் பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற முறையில் தான், நமது பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி ஈடுபட்டு வருகிறார். தேசியவாதிகள்-தேச பக்தர்கள்-பெரியவர்கள்-ஒரே நோக்கத்தில் தான் சிந்திப்பார்கள்.''

''மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். ஏற்படுத்திய நல வாழ்வுத் திட்டங்களை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். அவை புதிய திட்டங்களல்ல; புரியாத திட்டங்களும் அல்ல'' காமராஜர் அறிமுகப் படுத்திய மதிய உணவுத் திட்டம்தான், எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டமாக விரிவு படுத்தப்பட்டது. காமராஜரின் சீருடைத்திட்டம், இலவசக் கல்வித்திட்டம் ஆகியவை எம்.ஜி.ஆரிலால் கல்லூரிவரை விரிவு பெற்றது. மக்களை நேசிக்கிற மனித நேயம் கொண்டவர்கள் ஒரே மாதிரியாகத்தான் சிந்திப்பார்கள்.''

''1964ல் புவனேஸ்வர் மாநாட்டில் காமராஜர் ஆற்றிய தலைமை உரையை நினைத்துப் பாருங்கள். ஜனநாயக சோஷியலிசம் என்ற புதிய தத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். ஒருபுறம் ஜனநாயகம்- ஒருபுறம் சோஷியலிசம் என்ற அற்புதமான வாசகத்தைத் தமது தலைமையுரையில் காமராஜர் குறிப்பிட்டார்.''

''அந்தத் தத்துவத்தை, ஒரு வாரத்துக்கு முன்பு சோவியத் நாட்டில் கோர்பசேவ், மாநாடு கூட்டித் தீர்மானித்திருக்கிறார்.''

''இந்த நாட்டில் சோசியலிசம் வேரூன்ற வேண்டுமென்றால், அது ஜனநாயக உள்ளடக்கத்தை - பரிமாணத்தை வெளிக் கொணர வேண்டும் ''என்று கோபர்சேவ் குறிப்பிடுகிறார்.

''பெருந்தலைவர் காமராஜர், சோவியத் நாட்டுக்குச் சென்று வந்ததனால் அவரது பாதிப்பு அந்த நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று நாம் கூறலாம்.''

பெருந்திட்டக் கட்டிட வளாகத்தைத் திறந்து வைத்த மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்தக் கட்டிட வளாகத்தை நான் திறந்து வைக்கிறேன் என்று

**47 ஆம் பக்கம் பார்க்க**

# மண்டேலாவின் சுதந்தர வேட்கை




டாக்டர் ஆ. பத்மநாபன் இ.ஆ.ப.

ஆளுநரின் ஆலோசகர்



நெடிய சுவர்கள்!
நெருங்க முடியாத இரும்பு வேலி!
தடுப்பு அரண்கள்!
தகர்க்க முடியாக் கோட்டை!
ஆழமான அகழிகள்
பாழும் சிறைக்குள் ஒரு புனிதன்!
அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு.....
உடம்பைத்தானே உன்னால்
அடைத்துப் போட முடியும்?
அவனது சுதந்தர தாகத்தை
உரிமை வேட்கையை
மனித குல ஆன்மாவைப்
பணிந்து போகா வீரத்தை
அடைத்துவிட முடியாதே!
தடுத்துவிட இயலாதே!
உன்கோட்டை மதில்களையும் தாண்டி அவை
எல்லையற்ற வானத்தையும்
ஏகாந்தக் கடலையும் மிஞ்சிவிட்டன!
கண்டங்களைக் கடந்து விட்டன!
விடுதலை வேட்கையின் முன்னால்
சிறைக்கூடம் எம்மாத்திரம்?
உரிமை வேட்கையில் உயர்ந்து நிற்கும்
மண்டேலாவும் பலகோடி மக்களும்
வேண்டுவது ஒன்றே;
அடிமைகள் அல்ல நாங்கள்!
விடுதலையின் கோட்டைகள்!
உரிமையின் அரண்கள்!
அதுவே எங்கள் வாழ்வும் வளமும்!



[தென் ஆப்பிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் 70-வது பிறந்த நாளை (ஜூலை 18) ஒட்டி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கவிதையின் தமிழாக்கம்.]

# பெருந்தலைவர் பிறந்தநாள் விழா

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 86வது பிறந்தநாள் விழா, அவர் பிறந்த விருதுநகரில் அரசின் சார்பில் ஜூலை 15ஆம் நாளன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

காமராஜர் வித்தியா சாலா வளாகத்தில் நடைபெற்ற இந்த விழா, காலை 9½ மணி அளவில், சிவகாசி காந்திமதி சகோதரிகளின் 'காமராஜர் கதை' என்னும் வில்லிசை நிகழ்ச்சியுடன் தொடக்கமாகியது.

அதைத் தொடர்ந்து தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் காமராஜர் வாழ்வும் பணியும் என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு. நா.கிருஷ்ணபாரதி வரவேற்றுப் பேசினார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்நாள், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன்னாள். சிந்தை கிளர்ந்தெழச் செய்யும் திருநாள். தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய நாடே பூரிப்படையும் பெருநாள்.

''இந்த நாட்டில் எத்தனையோ புண்ணிய சேத்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சேத்திரமும் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு காரணத்திற்காகச் சிறப்பிக்கப்படுகிறது. குறிப்பாக, காசி, மதுரையம்பதி, பழனி, இப்படிப் பல சேத்திரங்கள் இறைவனை அடிப்படையாக வைத்து-இறை அடியார்களை அடிப்படையாக வைத்துச் சிறப்புப் பெறுகின்றன; செல்வாக்குப் பெறுகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னும், லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னும் அத்தகைய இடங்களுக்குச் செல்வது புண்ணிய காரியம் என்று பக்த கோடிகள் கருதிவருகிறார்கள். அதுபோன்ற பெருமை தலைவர் காமராஜரால் இந்த விருது நகருக்குக் கிடைத்திருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

'மாபெரும் தலைவர்களை நினைத்துப் பார்த்து, அவர்கள் எதற்காக வாழ்ந்தார்கள், என்ன நோக்கத்திற்காக வாழ்ந்தார்கள், அவற்றில் எவை நிறைவேறியுள்ளன, அவை நிறைவேற நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதை எல்லாம் ஆய்வு செய்வதற்காகவே இந்த விழா!

''சமுதாயமும் நாமும் ஒன்று என்ற மனப்பான்மை மக்களிடம் இருக்க வேண்டும். சமுதாயத்தை விட்டு யார் விலகுகிறார்களோ, அவர்கள் சமுதாயத்திற்குக் கேடு செய்தவர்கள் ஆகிறார்கள்.

''காமராஜர் வாழ்ந்தார்; அவரால் நாடு வாழ்ந்தது. அதுதான் புனிதமான வாழ்க்கை. நாடு வாழ எவன் தியாகம் செய்கிறானோ, அதற்குப் பெயர்தான் தியாகம். நாட்டு நலன் முறையாகக் காப்பாற்றப்பட்டால்தான் தேசம் வளரும். காமராஜரின் கவலை அதுதான். தேசம்தான் பெரிது என்று எண்ணித் தேசத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தியாகி அவர்.

''அவர் கிராமங்களை நேசித்தார். கிராம மக்களுடன் மக்களாகப் பழகினார். கிராமப்புறத்தவர் பேசுவதுபோல் பேசினார். எதுகை மோனைகளை அவர் தேடிப்பார்த்துக் கொண்டிருக்கவில்லை; கிராமப்புற மக்களுடனேயே வாழ்ந்தார்.

''கிராமப் பஞ்சாயத்துகளின் தந்தை' என்று காமராஜரை அழைக்கலாம். அவர் காலத்தில் தான் ஊராட்சி ஒன்றியங்கள் தோன்றின. இந்த நேரத்திலே அரசுக்கு ஒரு வேண்டுகோள். காமராஜரின் பிறந்தநாள் விழாவை இனி வரும் ஆண்டுகளில் பஞ்சாயத்து தினமாக அல்லது ஆரம்பக்கல்வி தினமாகக் கொண்டாட வேண்டும்.

''அவர் மறைவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு நான் அவரைச் சந்தித்தேன். அப்போது கூட ''அந்த கிராமத்தில் பள்ளிக் கட்டடம் கட்டி முடித்தாச்சா'' என்று தான் கேட்டார். (இந்தச் செய்தியைச் சொல்லும்போது அடிகளாரின் குரல் தளதளத்தது; கண்களில் கண்ணீர் அரும்பியது.)

''காமராஜர் பிறந்த இந்த நன்னாளில் நாம் ஒவ்வொருவரும், ''என்னுடைய வாழ்க்கை நாட்டு வாழ்க்கைக்குப் பயன்படவேண்டும்; நாட்டு வாழ்க்கைக்கு எனது வாழ்க்கை அர்ப்பணிக்கப்பட வேண்டும்' என்ற சூளுரை ஏற்றுக்கொள்வோமாக''.

அடிகளாரின் உரை முடிந்தவுடன் செய்திமக்கள்தொடர்பு இயக்குநர்



அவர்கள் ஒரு விளக்கத்தை அளித்தார்.

''அடிகளார் அவர்கள் பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் பஞ்சாயத்து தினமாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அந்த உணர்வின் அடிப்படையில் தான் தமிழரசு ஜூலை 16ஆம் நாள் இதழை நாங்கள் பெருந்தலைவர் பிறந்தநாள் சிறப்பிதழாகவும், ஊர் வளர்ச்சிப் பணிகள் தொகுப்பிதழாகவும் கொணர்ந்திருக்கிறோம். அந்த இதழை தவத்திரு அடிகளார் அவர்கள் இப்போது வெளியிட வேண்டும்'' என்று இயக்குநர் அவர்கள் வேண்டிக் கொள்ள, தவத்திரு அடிகளார் ஒப்புக்கொண்டு இதழை வெளியிட்டார். பிரதியை எழுத்தாளர் மு. நமச்சிவாயம், ''பெரும் பாக்கியம்'' என்று சொல்லிப் பெற்றுக்கொண்டார்.

அடுத்து, 'ஏழைகளின் நண்பன் காமராஜர்' என்ற பொருளில் உரையாற்றிய திருமதி நாகலெட்சுமி தெரிவித்தார்:

''ஏழைக்குழந்தைகளுக்கு உணவுச் செல்வம், உடைச்செல்வம், படிப்புச் செல்வம் வழங்கி அவர்களுக்கு நண்பரானார். அரசியல் வாதிகள் குணம் என்ற செல்வத்தை இழந்து தவித்த நேரத்தில் அவர்களுக்கும் துணிவு, உயர்ந்த எண்ணம் ஆகிய பண்புகளை வழங்கி அவர்களுக்குப் நண்பராக விளங்கினார். பத்திரிகையாளர்களுக்கு அடிக்கடி பேட்டி கொடுப்பதன் மூலம் அவர்களது நண்பராக விளங்கினார்''.

'நாட்டுப்பணி' என்னும் தலைப்பில் உரையாற்றிய திரு க.ராமச்சந்திரன் குறிப்பிட்டார்:

''ஏழ்மை, வறுமை, கல்லாமை ஆகிய தீமைகளைப் போக்குவதற்குப் பிறப்பெடுத்த ஒரு தலைவர் காமராஜர். அவர் கோட்டையிலே அமர்ந்து ஆட்சி நடத்திக்கொண்டிருந்தாலும், அவரது சிந்தனை ஏழை மக்களின் குடிசையை நோக்கித்தான் இருந்தது.

திரு சொக்கு சுப்பிரமணியம் தமது உரையில் தெரிவித்ததாவது:

''காமராஜரின் வாழ்க்கை ஏட்டில் நான்கு வருடங்கள் மறக்க முடியாதவை ஆகும். 1936ல் காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக்கூட்டத்தில், சத்தியமூர்த்தி தலைவராகவும், காமராஜர் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். 1946ல் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே - படித்தவர்கள் பொறுப்பில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பரவியிருந்த நேரத்தில் - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பெற்றார். வறுமை, அறியாமை, நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கொள்கையை உடைய அவர், 1956ஆம் ஆண்டு, இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1963ல், எல்லோருக்கும் கல்வி என்ற இலவசக் கல்வித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்.

## நெஞ்சை நெகிழ வைத்த கோட்டு!

**பொதுவாக ஒரு நினைவு இல்லத்திற்குச் சென்றோமானால், அந்த நினைவில்லத்திற்குரிய நாயகர் பயன்படுத்திய கண்ணாடி, பேனா இப்படிப் பற்பல பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். காமராஜரின் நினைவில்லத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பொருள் என்னை வியப்பில் ஆழ்த்திவிட்டது. அங்கே ஒரு கோட்டு காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. அதன் கீழே, ''காமராஜரின் சோவியத் விஜயத்தின்போது குளிரினால் தாக்கப்படாதிருப்பதற்காக அவருக்குத் தைக்கப்பட்டு, பயன்படுத்தப்படாத கோட்டு இது'' என்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இதுபோன்ற தலைவர் வேறு எவரேனும் இருப்பார்களா என்பது சந்தேகமே!**

—மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரம்

'சமுதாய நலம்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் சொல் விளங்கும் பெருமாள் தெரிவித்ததாவது:

''ஒரு மனிதருக்கு, பிறக்கும் போது ஒரு பெயர், அவர் மறையும் போது ஒரு பெயர். பிறக்கும்போது ஜவகர்லாலாகப் பிறந்த ஒருவர், மறையும் போது ஆசிய ஜோதி என்ற பெயரைப் பெற்றார். பிறக்கும்போது மோகனதாஸாக இருந்தவர், மறையும்போது உலக உத்தமர் ஆனார். பிறக்கும்போது காமராஜராகப் பிறந்தவர், பின்னர் காலாகாந்தி, பெருந்தலைவர் என்ற பெயர்களை எல்லாம் பெற்றார். இத்தகைய சிறப்புப் பெயர்களைக் காமராஜர் பெற்றார் என்றால், அவர் வாழ்ந்த வாழ்க்கை அப்படிச் சிறந்து விளங்கியிருக்கிறது.

''அவர் சிறைவாசம் செய்தபோது விருது நகர், நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியை ஏற்றுக்கொண்ட ஒன்பதாவது நிமிடத்தில் அதனை ராஜினாமா செய்தார். அப்போது தமிழகம் விழித்தெழுந்து பார்த்தது, 'இப்படி ஒரு தூயவரா என்று!''

''பத்திரிகையாளர் காமராஜர்' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு மு.நமசிவாயம் தெரிவித்தார்:

''காமராஜர் இதே விருதுநகரில் ஞானம்பிள்ளை பொடிக்கடையில் அமர்ந்து, அங்கு பத்திரிகைகள் படிக்கப்படும்போது அதை ஆவலுடன் கேட்டு வந்தார்.

''நிருபர் மாரியப்பன் என்பவர் அவரது நண்பர்-அவருக்கு, பின்னணியிலிருந்து செய்திகளை எல்லாம் தயாரித்துக் கொடுப்பார் காமராஜர்.

''அவர் ஒரு பத்திரிகைக்கு அந்த நாளில் கட்டுரை அனுப்பினார். அது பத்திரிகையில் இடம் பெறவில்லை. வானொலி நிலையத்திற்கு ஒரு கட்டுரை அனுப்பினார். அதுவும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. இவை எல்லாம் பிற்காலத்தில் 'ஜெயபாரதம்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

''பத்திரிகையாளன் என்பவன் தனக்கு விளம்பரம் தேடிக்கொள்ள மாட்டான். பிறருக்கே விளம்பரம் தேடித்தருவான். காமராஜரும் அப்படித்தான், பிறருக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுத்தார். அவர் செயல் ஏர் உழவர். பத்திரிகைக் களஞ்சியம்.

''காமராஜர் பிறந்த இந்த மண், பெருமை பெற்ற மண். அவர் பிறந்த இந்த மண்ணை நான் வாழ்த்துகிறேன். போற்றுகிறேன்; வணங்குகிறேன். இந்த மண்ணை முத்தமிடுகிறேன்.''

நிகழ்ச்சியின் இறுதியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வெ.பரஞ்சோதி நன்றி கூறினார்.

காமராஜரின் 86 வது பிறந்த நாள் விழா வரலாற்றில் இடம் பெற்ற விழாவாகச் சிறந்து விளங்கியது என்றால் அது மிகையாகாது!

**—நமது செய்தியாளர்**

டாக்டர் வரதராஜுலு நாயுடு நூற்றாண்டு விழா:

# தென்னாட்டுத் திலகம்

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்



'**தெ**ன்னாட்டுக் காந்தி' என்னும் சிறப்புப் பெயர் காந்தி சகாப்தத்தின் தொடக்கத்திலே ராஜாஜிக்கு வழங்கப்பட்டது. அதற்கு முன்பு திலகர் சகாப்தத்திலே தென்னாட்டுத் திலகம் எனும் சிறப்புப் பெயர் பி. வரதராஜுலு நாயுடுவுக்குக் கிடைத்தது.

தமிழ்நாட்டின் வரலாற்றிலே நான்கு பெருந்தலைவர்கள் சிறப்பிடம் பெற்றிருக்கக் காண்கிறோம். அவர்கள்—டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, சி.ராஜகோபாலாச்சாரியார், திரு வி.கல்யாணசுந்தரமுதலியார், பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஆகியோராவர். இவர்களில், அரசியலில் ஈடுபட்டுக்காலத்தால் மூத்தவர் டாக்டர் நாயுடுவே ஆவார்.

1918ல், மதுரை மாநகரில், ஆங்கிலேயருக்குச் சொந்தமான 'ஹார்வி' பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அது, அரசியல் பிரச்சனையாக மாற்றுருப்பெற்றது.

தமிழ் நாட்டின் அரசியல் பிரச்சாரகர்களெல்லாம், மதுரையிலேயே முகாமிட்டு, நாள்தோறும் மாலை நேரத்தில் வைகையாற்றுத் திடலில் பொதுக்கூட்டத்திலே பேசி வந்தனர். அவர்களிலே டாக்டர் நாயுடுவும் ஒருவர்.

அந்நாளில் மதுரை நகரமானது பஞ்சாபிலே அமிர்தசரசிற்கு நிகராக விளங்கியது. டாக்டர் நாயுடுவின் பிரச்சாரமே ஆங்கிலேயரின் நெற்றிக் கண்ணைத் திறந்தது. ராஜநிந்தனைக்குற்றம் சாட்டி அரசு அவர் மீது வழக்குத்தொடுத்தது.

அப்போதுதான், அரசியலில் காலைக்கதிரவனாகத் தோன்றிக் கொண்டிருந்த சேலம் சி.ராஜகோபாலாச்சாரியார், நாயுடுவுக்காக வழக்கறிஞரானார்.

காந்தி சகாப்தத்திற்கு மூற்பட்ட காலமாதலால், தேச பக்தர்கள், தம் மீது அரசு தொடுக்கும் வழக்கிற்கு எதிர்வழக்காடும் வழக்கமிருந்தது. அதன்படியே 'ராஜாஜி'யை வைத்து, தொழிற்சங்கம் சார்பில் எதிர் வழக்காடப் பட்டது. அவ்வழக்கு, மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் நடைபெற்றது. வழக்கு விசாரணை நடவடிக்கைகள் வார்த்தைக்கு வார்த்தை பாரதப் பெருநாடு முழுதும் உள்ள நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டது. அதற்காகவே, வடபுலச் செய்தித் தாள்களின் நிருபர்கள் மதுரையிலே முகாமிட்டிருந்தனர்.

அதனால், மதுரையிலே பதட்டம் நிலவியதால், மாஜிஸ்திரேட் நீதிமன்றக் கட்டிடத்தின் மேல்மாடியில் பீரங்கி வண்டியை நிறுத்தி, ஆட்சி, மக்களை அச்சுறுத்தியது. ஒரு சமயம் நடந்த கலவரத்தை அடக்க ஆங்கிலேயர் ஆட்சி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இரண்டு பேர் பலியானார்கள்.

அந்தச் சரித்திரப் பிரசித்தி மிக்க விசாரணையின் முடிவில், டாக்டர் நாயுடுவுக்குப் பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. அவர், தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் மனுக் கொடுத்தார். அங்கு, புகழ் மிக்க வழக்கறிஞரான அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் ஆஜராகி, எதிர் வழக்காடினார். டாக்டர்

நாயுடுவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை ரத்து செய்யப் பட்டது.

டாக்டர் நாயுடு நாவன்மை மிக்க பேச்சாளர்; ஆவேசப் பேச்சாளர் அல்ல. ஆனால், கேட்போரின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் வேகம் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் இருந்தது. டாக்டர் நாயுடு மூன்றுமுறை சிறை சென்றிருக்கிறார்.

'தமிழ்நாடு' எனும் பெயரிலே சேலம் நகரில் வார ஏடு தொடங்கி, பின்னர் அதைச் சென்னைக்குக் கொண்டுவந்தார். பின்பு அந்தப் பெயரில் நாளிதழ் வெளிவந்தது. 'தமிழ்நாடு' வார இதழும் தொடர்ந்து நடத்தப்பட்டது. அவருடைய 'தமிழ்நாடு' நாளிதழானது நாட்டு மக்களிடையே விடுதலை வேகத்தை உண்டாக்குவதிலே பெரும் பங்கு வகித்தது.

'தமிழ்நாடு' பத்திரிகையிடம் ஒன்றுக்கு மேற்பட்ட முறை ஜாமீன் கேட்டது அன்றிருந்த அரசு.

அந்நாளில் பத்திரிகையில் ஏதேனும் ஆட்சேபகரமான செய்தியோ, கருத்தோ வெளியானால், ஒரு குறிப்பிட்ட தொகை ஜாமீன் செலுத்தி, அப்படிப்பட்டவை இனி வெளிவராதென உத்தரவாதம் கேட்பது அரசின் வழக்கம். உத்தரவாதத்தை மீறினால் ஜாமீன் தொகையைப் பறிகொடுக்க வேண்டியதாகிவிடும். 'தமிழ்நாடு' பத்திரிகை பலமுறை ஜாமீன் தொகையைப் பறிகொடுத்திருக்கிறது.

தமிழ்நாடு காங்கிரசின் தலைவராகவும், அகில இந்தியக் காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்த பெருமையாளர் டாக்டர் நாயுடு. தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டிக் காப்பதிலும் நாயுடு ஆர்வம் காட்டினார். ஆட்சிக்கு வரி கொடுக்க மறுத்துத் தமது 'மோட்டார்' வண்டியையே பறிமுதலாக விட்டவர் அவர்.

டாக்டர் நாயுடு அப்பழுக்கற்ற தேசிய வாதியாயினும், இந்து சமயத்தில் அவர் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். 1925ல், தமிழ்நாடு காங்கிரஸ் முன்னணித் தலைவர்களோடு கருத்து வேற்றுமை கொண்டு, காங்கிரஸ் பேரியக்கத்தை விட்டு வெளியேறினார். அதன்பின், அனைத்திந்திய இந்துமகாசபையின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அப்போது அச்சபையின் தலைவராக இருந்தவர் வீரசவர்க்கார்.

நாயுடு, நாயக்கர், முதலியார் என்னும் மூவேறு சாதிப் பெயர்கள் ஒரு காலத்தில் தமிழகத்து அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்தன. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கர், திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் ஆகிய மூவரையும் அப்பெயர்கள் குறித்தன. அதுபோலவே ஐயர், ஐயங்கார், ஆச்சாரியார் என்னும் சாதிப்பெயர்களும் தலைதூக்கி நின்றன. அப்பெயர்கள் சத்தியமூர்த்தி ஐயர், சீனிவாச ஐயங்கார், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மூவரையுமே குறிப்பிடுவதாக இருந்தன.

மக்கள் அவர்களையெல்லாம் சாதிப்பெயர்களால் அழைத்தாலும் அவர்களுடைய இதயங்களிலே எல்லோருக்கும் பொதுவான தேசியமே எதிரொலித்தது.

இந்திய சட்டசபைக்கான சேலம், வடஆர்க்காடு, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்குரிய பொதுத்தொகுதியில், 1934ல், டாக்டர் நாயுடு காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டார். அன்றைய தினம் காங்கிரஸ் இயக்கத்திற்கிருந்த செல்வாக்கில் வெற்றிவாய்ப்பு அவரைவிட்டு நழுவியது. பின்னர், அவர் காங்கிரசில் திரும்பச் சேர்ந்து 1952ல் சேலம் நகரத் தொகுதியில் போட்டியிட்டுப் பழைய பெரிய சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, அவர்கள் தனது துணைவியார் திருமதி ருக்மணி அம்மாள் அவர்களுடன்.**

டாக்டர் நாயுடு சமூக சீர்திருத்தத்திலும் ஆர்வம் கொண்டிருந்தார். காலத்துக்கொவ்வாத பழைய நம்பிக்கைகளைக் கைவிட்டு, தமிழ்ச் சமுதாயம் முன்னேற, தம்முடைய எழுத்தாலும் பேச்சாலும் முன்னேற்றக் கருத்துக்களை அவர் வலியுறுத்திவந்தார்.

சேலம் தந்த பெருந்தலைவர்களிலே சி.விஜயராகவாச்சாரியார், சி.ராஜகோபாலாச்சாரியார், பி.வரதராஜுலு நாயுடு மூவரும் அனைத்திந்தியத் தேசியத் தலைவர்களாகி, தம்மைப் பெற்றெடுத்த சேலத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள்.

பழைய சேலம் மாவட்டத்தில், ராசிபுரத்தில் 4.6.1887ல் பிறந்தவர் நாயுடு. ஆனால், பிற்காலத்தில் நீண்ட நெடுங்காலம் அவர் சென்னை நகரிலேயே வாழ்ந்தார். 22.7.1957ல், சென்னை மண்ணிலேயே மறைந்தார். ஆம், சரியாக 70 ஆண்டுக்காலம் பாரதத் திருநாட்டிற்கும், தமிழ்த்திருநாட்டிற்கும், இந்து சமுதாயத்திற்கும் தொண்டு செய்த வரலாற்றைத் தமிழர்களின் பெருஞ்சொத்தாக அவர் விட்டுச்சென்றார்.

அந்த மாவீரரின் நூற்றாண்டு விழா, 4.6.1987ல் முடிந்ததென்றாலும், முடிவுபெறாத புகழொளிவீசும் அவரது நினைவு என்றென்றும் தமிழர் நெஞ்சில் நிறைந்து நிற்கும். ●

# ஊரக வளர்ச்சிக்கு உதவும் ஒப்பிலாத் திட்டங்கள்!

'இந்தியா கிராமங்களில் வாழ்கிறது' என்றார் அண்ணல் காந்தியடிகள். கிராமங்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை உயர்த்தி, கிராம மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, வாழ்க்கையில் அவர்களுக்கு ஊக்கமூட்டும் பெரும்பணியை அரசின் ஊரக வளர்ச்சித் துறை நிறைவேற்றி வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் இத்தகைய முயற்சிகளுக்கோர் சிகரமாய் அமைந்தது.

கிராமத்தில் மொத்தத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த பின்பு, கிராமங்களின் அங்கமாக அமைந்துள்ள கிராமமக்களின் வாழ்க்கைநிலையை உயர்த்தும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மூவகைத் திட்டங்கள்**

வாட்டும் வறுமையை வழியனுப்ப-ஏழையர் வாழ்வை ஒளிமயமாக்க—

டாக்டர் எஸ். நாராயண்
**இ.ஆ.ப.,**
**அரசு ஆணையர் மற்றும் செயலர்,**
**ஊரக வளர்ச்சித்துறை**

எளியவர் முகத்தில் மகிழ்ச்சியையும் அகத்தில் நம்பிக்கையையும் உண்டாக்கும் விதத்தில், மைய அரசும், மாநில அரசும், இணைந்து சிறப்புத் திட்டங்களை உருவாக்கின. மக்களை வாழவைக்கும் அத்தகைய மகத்தான திட்டங்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் என்பனவாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமானது தனி நபர் குடும்பப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தீட்டப்பட்டது. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் கிராம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை.

வேளாண்மையை நம்பி வாழ்கின்ற கிராம மக்கள், வான் பொய்த்தாலும், வறட்சி வந்தாலும், வாட்டமின்றி வாழ்வதற்கு, துணைத் தொழில்கள் பெரிதும் உதவுகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வேளாண்மை, வேளாண்மையைச் சேர்ந்த தொழில்கள் மற்றும் இத்தொழில்களைச் செய்வதற்குத் தேவைப்படும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கிராமங்களில் உள்ள இளைஞர்கள் தங்களது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் தொழில்கள் செய்வதன் மூலம் செலவிட்டு, வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் தீட்டப்பட்ட 'கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டமும்' இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களும் இளம் பெண்களும் பல்வேறு பணிகளில் பயிற்சி பெற்று தங்களுக்குத் தாங்களே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை செய்கிறது. இத்திட்டத்திற்காக செலவிடும் தொகையில் பாதித் தொகையை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்குப்

**ஊரகப் பகுதிகளில் கறவை மாடுகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.**






பயன்படுத்த வேண்டும் எனவும், மூன்றில் ஒரு பங்கினை மகளிர்க்குப் பயன்படுத்த வேண்டும் எனவும், இதைப்போன்று, பயன் பெறும் குடும்பங்களில் 50 சதவீதம் ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் குடும்பங்களாகவும், மூன்றில் ஒரு பங்கு மகளிராகவும் இருக்கவேண்டும் எனவும், அரசு ஆணையிட்டுள்ளது.

இவ்வகையான கட்டாயக் குறிக்கோளினைக் கடந்த ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தியதன் மூலம், தகுதியுள்ள குடும்பங்களுக்கு வங்கிக் கடன் மற்றும் அரசு மானியம் கணிசமாக வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூபாய் 14.661 கோடியை அரசு மானியமாக வழங்கியதன் மூலம் 13.96 இலட்சம் குடும்பத்தினர் நிதி உதவி பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்பணிகளைத் தீவிரப் படுத்துவதன் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை 23 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம்.

இந்த நன்னோக்கத்தை ஒட்டி, கடந்த மூன்று ஆண்டுகளாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்பே பயன்பெற்ற குடும்பங்களுக்கு அதிகப்படியான உதவியும், அதே சமயத்தில் புதிய குடும்பங்களுக்குத் தேவையான உதவியும் வழங்கப்படுகின்றன. 1988-89-இல் 2.25 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ. 49 கோடி அளவிற்கு நிதிவழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.







### வேலைவாய்ப்புத் திட்டப் பலன்கள்

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் சமுதாயத்திற்கு என்றும் பயன்படும் சொத்துக்களை ஏற்படுத்துவதற்காகவும், புதிய சாலைகள், சிறிய பாசன ஆதாரங்கள், சமுதாயக் காடுகள் அமைத்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தருதல் போன்ற வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 183.70 கோடி செலவில் 18.65 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில்252.64 கோடி ரூபாய் செலவில் 16.11 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஏழை ஆதிதிராவிட மக்களுக்காக 1,27,500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

1988-89-இல் 69 கோடி ரூபாய் அளவிற்குநிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இதில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மக்களுக்கு 28200 வீடுகள் மற்றும் 5400 இதர வேலைகளும் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 57.80 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 26,700 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மற்றும் சாலை வேலைகள், கசிவு நீர்க்குட்டைகள், சிறிய பாசனத் திட்டங்கள், சுகாதாரக் கழிப்பிடங்கள் போன்ற 5000 இதர வேலைகளும் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கிராம மகளிருக்கு வாழ்வு

ஊரக வளர்ச்சியில் சமூகக் காடுகள் வளர்ப்பு இன்றியமையாத பங்கு வகிக்கிறது. சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் முழுவதும் கிராமப்புற ஏழைப் பெண்கள் பயன் பெறும் வகையில், சுமார் 42,000 பெண்களுக்கு 'மர உரிமைப்பட்டா' வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக 5,000 பாசனக் கிணறுகள் அமைத்துத் தருவதற்காக ''ஜீவன்தாரா'' எனப்படும் வளமான வாழ்வுக்கு வழி காட்டும் புதிய திட்டம் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டது. இதற்காக ரூ. 24.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சமுதாயத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், வேளாண்மையைப் பலன்தரும் முறையில் பாங்குறச் செய்வர் என்பது திண்ணம். கிராமங்களில் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பேணிக்காக்கும் பொருட்டு மக்கள் கூடும் பொது இடங்களிலும், தனியார் வீடுகளிலும், கழிப்பிடங்கள் அமைப்பதற்கு, ரூபாய் 65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பணி புரிவோருக்குக் கூலியாகப் பணம் மட்டுமல்லாமல் உணவு தானியங்களும் வழங்கப்படுகின்றன. இதனால் கிராமத்திலுள்ள ஏழை,எளிய மக்கள் வயிறார உணவுண்டு, மனமாரப் பணியாற்றும் நிலை வளர்ந்துள்ளது.

மேற்கண்ட திட்டங்களைத் தவிர கிராமத்திலுள்ள குடிநீர் ஆதாரங்களான கைப்பம்புகள் ஆழ்துளைக் குழாய்கள் மற்றும் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டிகள் ஆகியவற்றையும் ஊரக வளர்ச்சித் துறையே கவனித்து வருகிறது.

### புகையில்லா அடுப்பும் சாண எரிவாயுக் கலனும்

மகளிர் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கின்ற புகை இல்லாமல் சமையல் செய்வதற்காக வீடு தோறும் மேம்படுத்தப்பட்ட புகையில்லா அடுப்புகளை நிறுவுவதற்கும், மாடு மற்றும் மனை வசதியுள்ள குடும்பங்கள் சாண எரிவாயு சாதனங்களை அமைப்பதற்கும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் சிறந்த உதவி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் படைத்து வரும் சாதனையைத் தொடரும் வகையில் 1987-88-ஆம் ஆண்டிலும் தமிழகத்தில் 1,05,000 குறியீட்டிற்கு 1,55,482 என்ற அளவில் மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் அமைக்கப்பட்டு தமிழகம் தேசிய அளவில் முதன்மையாக வந்து சாதனை படைத்துள்ளது.

### வளமான திட்டங்களும் வளரும் கிராமங்களும்

பல்வேறு ஊரக வளர்ச்சிப்பணிகளால், கிராம சமுதாயம், புத்துணர்ச்சியையும் புதுப்பொலிவையும் பெற்றுத் திகழ்கிறது. அடிப்படை வசதிகளை அளித்து, கிராமப்புற வாழ்வை, பொருள் பொதிந்த, பொருளாதார நிலை மிகுந்த வாழ்வாக மாற்றியமைக்கும் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படுவதன் மூலம் கிராமங்கள் மென்மேலும் வளர்ச்சிபெறும் என்பதில் ஐயமில்லை. ●








இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 14-7-88 அன்று திறந்து வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் பாம்பன் பாலம் வேலை நடைபெறுவதை 14-7-88 அன்று ஆளுநர் திரு பி. சி. அலெக்சாண்டர் பார்வையிட்டார்.








விருதுநகரில் 15-7-88 அன்று, பல்துறைப்பணிகள் விளக்கக் கண்காட்சியினைத் திறந்து வைத்த மாண்புமிகு மத்திய அரசு உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை அரங்கில் காமராஜர் புகைப்படத் தொகுப்பைப் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சியாளர் திரு தீபக் ஜெயின், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி ஆகியோர் உடன் உள்ளனர்.

## படமும் செய்தியும்

ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆ. பத்மநாபன், ஆதிதிராவிட மாணவ - மாணவிகளுக்கான ''கம்ப்யூட்டர் பயிற்சித் திட்டத்''தை 14-7-88 அன்று சென்னை குரோம்பேட்டையில் துவக்கி வைத்தார்.



## கல்லல் ஒன்றியத்தில்

# ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் கல்லல் ஒன்றியம் 45 ஊராட்சிகளைக் கொண்டது. இவ்வொன்றியத்தில் 74,115 பேர் வசித்து வருகின்றார்கள். இதில் 10,556 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் 96 பேர் மலைசாதியினர், 39,723 பேர் பெண்கள்.

கல்லல் ஒன்றியத்தில் **தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் 1985-86-ல் 37 குழும வீடுகளும், இதர வேலைகள் 15-ம் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 8.96 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 42,112 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 2216 ஆதிதிராவிடர் பயன் பெற்றுள்ளார்கள்.**

1986-87-ல் 22 குழும வீடுகளும் இதர வேலைகள் 24-ம் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 4.92லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 31,162 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 1919 ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.



1987-88-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் 28 குழும வீடுகளும் இதர வேலைகள் 20-ம் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 7.80 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 34,610 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 2101 ஆதி திராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

1988-89-ஆம் ஆண்டுக்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 56 குழும வீடுகளும், சாலைகள் மூன்றும், பள்ளிக்கட்டிடம் ஒன்றும் கட்டுவதற்கு ரூ. 12.75 இலட்சத்திற்கு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1985-86-ம் ஆண்டில் 134 குழும வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு 4.60 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 21,612 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டதில், 2412 ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

1986-87-ல் 23 குழும வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு 10.01 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு 52,611 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டதில் 5616 ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

1987-88-ல் 60 குழும வீடுகள் கட்டப்பட்டு, ரூ. 7.19 இலட்சம் செலவு செய்யப்பட்டு, 36,146 மனித நாட்கள் உற்பத்தி செய்யப்பட்டு



அதில் 5416 ஆதிதிராவிடர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

1988-89-ல் 80 குழும வீடுகள் ரூ. 9.6 இலட்சத்தின் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

* * * * *

சமூகக் காடுகள் திட்டத்தில் 1988-86-ல் 2,24,000 கன்றுகள் உற்பத்தி செய்தும், 86-87-ல் 2,35,000 கன்றுகள் உற்பத்தி செய்தும் 86-87-ல் 289 ஹெக்டேர் நடவு செய்தும், 1987-88-ல் 117 ஹெக்டேர் நடவு செய்தும், மொத்தம் 7.28 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 7615 ஆதிதிராவிடர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

1988-89-ல் மக்கள் நாற்றங்காலில் 1,40,000 கன்றுகள் உற்பத்தி செய்து நட திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

* * * * * *

ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தில் 1985-86-ல் 400 பேர் பயனடைந்துள்ளார்கள். இதற்கு 5.26 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 222 பேர் ஆதி திராவிடர்கள், பெண்கள் 146.

1986-87-ல் 412 பேர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன் பெற்றுள்ளார்கள். 5.53 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 241 பேர் ஆதி திராவிடர்கள். பெண்கள் 138.

1987-88-ல் 635 பேர் பயன் பெற்றதற்கு, 10.57 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் 342 பேர் ஆதிதிராவிடர்கள். பெண்கள் 212.

1988-89-ல் சுமார் 600 பேர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 12 இலட்சம் மானியமாக வழங்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தில் நாச்சியாபுரத்தில் கோழிப்பண்ணை ரூ. 70,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. மேலும் கம்பனூரில் செம்மண் காடுகளைச் சுற்றி (வேளாண்மைப் பண்ணை) வேலி அமைப்பதற்கு ரூபாய் 15,000 செலவு செய்யப்பட்டுள்ளது.



# அறிவியல் ஆடித் தொழில் நிறுவனம்

**கல்லல்—**

தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட மாவட்டமாக விளங்கும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர்.

இன்று தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கும் வகையில் அங்கு ஒரு புதிய தொழில் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதுதான், அறிவியல் ஆடித்தொழில். அறிவியல் ஆடி அளக்கும் கருவிகளை இங்கே உற்பத்தி செய்கிறார்கள்.


கல்விக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக் கூடங்கள் போன்றவற்றிற்குத் தேவைப்படும் அறிவியல் ஆடிப் பொருள்கள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

இப்படி ஒரு தொழிற்சாலையை இங்கே உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் திரு வயி. லட்சுமணன் செட்டியார் உள்ளத்தில் எழுந்தது. இப்பணிக்கு உறுதுணையாகஇருந்து இதனை உருவாக்கிக் கொடுத்த பெருமைக்குரியவர் - காரைக்குடியில் அமைந்துள்ள மைய மின்வேதியியல் ஆய்வுக்கூடத்தில் பணியாற்றும் அறிவியல் ஆடித் தொழில் வல்லுநர் திரு ந. உமாபதி. அவர், மைய மின்வேதியியல் ஆய்வுக்கூட அனுமதியுடன் இத் தொழிற்கூடத்தில் தொழில்நுட்ப ஆலோசகராகப் பணியினை ஏற்றார்.

கிராம அறிவியல் குழுமத்தில் இத் தொழில் நிறுவனம் தன்னை ஓர் உறுப்பினராகப் பதிவுசெய்துகொண்டது. பின்னர் திட்ட அறிக்கையை அளித்து பாரத ஸ்டேட் வங்கியின் உதவியுடன் 1986-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

பிற்பட்ட பகுதியான இப் பகுதியில் வாழும் மக்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பதின்மூன்று

**பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் கல்லல் பகுதியில் அமைந்துள்ள அறிவியல் ஆடித் தொழில் நிறுவனம் நம் நாட்டிலேயே மூன்றாவதாகும். அறிவியல் ஆடி அளக்கும் கருவிகளை உற்பத்தி செய்யும் இந்நிறுவனம் தமிழ்நாட்டிலேயே முதலாவது தொழிற்சாலை ஆகும். ஊரகப் பகுதிகள் இன்று தொழில்வளம் படைத்தவைகளாக வளர்ந்து வருகின்றன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது கல்லல் அறிவியல் ஆடித் தொழில் நிறுவனம். ஊரக வளர்ச்சித் திட்ட அடிப்படையில் உதவி பெற்று வளர்ந்துள்ள இத்தொழிற்கூடம் பற்றிய விவரங்களை அளிக்கிறது இக்கட்டுரை.**



பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதல் ஆறுமாதம் பயிற்சிக்கு உரிய அனைத்துச்செலவினத்தையும் தொழில் நிறுவன உரிமையாளர் திரு லட்சுமணன் செட்டியார் ஏற்றுக்கொண்டார்.

இரண்டாவது மாதம், ஆறு மாதப் பயிற்சிக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அடிப்படையில், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்றுள்ள பெண்களில் ஆறு பேர் ஆதிதிராவிட வகுப்பினர்.

கல்லல் பகுதியில் இப்படியொரு தொழிற்சாலை அமையும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இதற்காகக் கண்ணாடிக் குழாய்கள் பம்பாயிலிருந்து வரவழைக்கப்படுகின்றன.

இதுபோன்றதொழிற்கூடம்தமிழ் நாட்டில் இதுதான் முதன்மையானது என்பதால், இதன் யந்திரங்களில் சிலவற்றை இத்தொழிற்கூடத்துக்கு ஏற்ப தயாரித்திருக்கிறார்கள்.

### தொழில் நிறுவனம் செய்யும் கருவிகள்

அறிவியல் ஆடி அளக்கும் கருவிகளுடன் கீழ்க்கண்ட கருவிகளையும் இந்த நிறுவனம் உற்பத்தி செய்கிறது. ஆக ஒட்டு மொத்தமாக,

1. ஆய்வுக் குழல்கள்
2. அளக்கும் சிறு கருவிகள் (Pipettes & Burettes)
3. அளக்கும் பெரும் கருவிகள். (Measuring Cylinders)
4. அறிவியல் ஆடிக்கருவிகள் அனைத்தும்
5. புதிய கருவிகள் அறிவியல் தேவையை முன்னிட்டு செய்தல்

### உருவாக இருக்கும் புதிய திட்டங்கள்

1. எளிய முறையில் ஆடித் துகள் வட்டடைகள் (Si ntered Discs)
2. உறுதியாக்கப் பெற்ற ஆடித் தகடுகள் (Glass Sheets)
3. தொழில் ஆடிக் கருவிகள் (Gauge Glasses)
4. பல வண்ண ஆடிகளின் கலைப் பொருள்கள் உருவங்கள். (Curios)
5. வெப்பதட்ப நிலைகளை அளக்கும் கருவிகள் (Thermometers, Mano Meters etc.)

இங்கே பயிற்சி பெற்ற அனைவரும் நிரந்தரமாக வேலைவாய்ப்பு பெற வசதி உள்ளது. தேவைப்படும் பொருள்களை அவரவர் வீட்டில் இருந்து செய்து கொடுக்க கருவிகள் அடங்கிய பெட்டி ஒன்றும் வழங்கப் பட்டுள்ளது. இப்பயிற்சியினால் விஞ்ஞான அறிவு வளர்ச்சியும் தொழில் திறனும் ஏற்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு ரூ. 20 முதல் ரூ. 30 வரை வருமானம் பெற வாய்ப்பு உள்ளது. இதனால் வறுமையில் அல்லல் உற்ற குடும்பத்தினர் வாழ்க்கையில் நம்பிக்கையையும் புத்துணர்வையும் பெற்றுள்ளனர்.


ஊரகப் பகுதிகளில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதற்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது இத் தொழிற்கூடம்.

இங்கு தயாராகும் பொருள்களுக்கு நல்லவிற்பனைச் சந்தையும் உள்ளது. எனவே இத்தொழிற்கூட வளர்ச்சியில் எந்தவிதஐயமுமில்லை.

ஊரகப் பகுதிகள் தொழில் வளமிக்கதாக அமைய அரசு பல்வேறு உதவிகளைச் செய்யும் இவ்வேளையில், திரு வயி. லட்சுமணசெட்டியார் போன்ற ஊரக வளர்ச்சியில் அக்கறைமிக்க தொழில் முனைவோர்களையும், காரைக்குடி மைய மின் வேதியியல் ஆய்வகத்தைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் திரு ந. உமாபதி போன்றோரின் நல்லெண்ணத்தையும் முயற்சிகளையும் பாராட்டுவது நமது கடமை ஆகும்.

மாமுலன்

ஊரக வளர்ச்சித் திட்டம்



# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறுமை ஒழிப்புப் போர்

**ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகளை முனைப்புடன் செயல்படுத்திவரும் மாவட்டங்களில் ஒன்றாகும் புதுகோட்டை மாவட்டம். இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேளாண்மைப் பெருக்குத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதை விளக்குகிறது இக்கட்டுரை.**

ப. செல்வம், இ.ஆ.ப.,
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**புதுக்கோட்டை.**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேளாண் பெருக்குத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் கிராமங்களில் வறுமை ஒழிப்புத் திட்டம் செயல் படுத்தப்படுகின்றது.


இத்திட்டங்களில், வேலையில்லா கிராமப்புற விவசாயக் கூலிக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு அமல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரகநிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மூலம் கிராமப்புறங்களில் அசையாச் சொத்துக்கள் உண்டாக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

இத்திட்டங்கள் மூலம் புதுக்கோட்டை மாவட்டம் எங்ஙனம் பயன் பெற்றுள்ளது என்பதனைக் காண்போம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனக் கண்மாய்களைமேம்படுத்துதல், கிடைக்கின்ற மழை நீரை எங்கெல்லாம் தேக்க முடியுமோ அங்கெல்லாம் கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளத்திட்டமிடப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில் 157 சிறுபாசன வேலைகள் முடிக்கப்பட்டன.

இதே போல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் ஓடும் வெள்ளாறு, எடையாறு, பாம்பாறு போன்ற ஆறுகளின் குறுக்கே கீழ்க்கண்ட அணை கட்டும் பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப் பட்டன:

1. இலஞ்சாவூர் அணைக்கட்டு.
2. வளையன் கண்மாய் அணைக் கட்டு.
3. வில்லினியார் அணைக்கட்டு.



கீமனக்கண்மாய் அணைக்கட்டு, பின்னங்குடி அணைக்கட்டு, எடையார் அணைக்கட்டு, கிளிகுடி அணைக்கட்டு, சேதுகண்மாய் அணைக்கட்டு வேலைகளும் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை 70 சிறுபாசன வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நிலத்தடி நீர் மறு ஊட்டம் திறம்படச் செய்வதன் பொருட்டு, இயற்கையாக உள்ள நீரோட்ட வழிகளின் குறுக்கே அணைகட்டி மழை நீரைத் தேக்கி,30 கசிவு நீர்க் குட்டைகள் அமைத்து, அவற்றிற்கு அருகில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் சாலைவசதிகள்இல்லாத குக்கிராமங்களுக்குச் சாலை வசதிகள் செய்து கொடுத்து, அக்கிராமங்கள் அருகில் உள்ள நகரங்களுடன் தொடர்பு கொள்ளவும் இத்திட்டங்களின்கீழ் திட்டமிடப்பட்டு செய்து முடிக்கப்பட்டன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகளை மேம்படுத்தும் வேலைகளும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் இணைப்புச் சாலைகள் அமைக்கும் வேலைகளும் மனித உழைப்பினைப் பயன்படுத்தி, செய்து முடிக்கப்பட்டன. இங்ஙனம் இத்திட்டத்தின்கீழ் சாலைகள் அமைக்கப்பட்டதால், பேருந்துகள் பெரும்பாலான கிராமங்களுக்குச் சென்று வருகின்றன. பல மைல்தூரம் நடந்து நகரங்களுக்கு வந்த மக்கள் இன்று பேருந்துகளில் சென்று வருவதை நாம் காணும் பொழுது, இத்திட்டங்களின் சிறப்பினை நினைத்துப் பெருமிதம் அடையலாம். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 208 ஊரகச் சாலை வேலைகளும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 44 சாலை வேலைகளும் முடிக்கப்பட்டு பேருந்துத்தடங்கள் ஏற்பட வழி வகுக்கப்படடுள்ளது.

## ஆதிதிராவிடர் குடியிருப்புகள் கட்டுதல்

நடப்பு நிதியாண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 530 வீடுகளும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 780 வீடுகளும், ஆதிதிராவிடர்கட்கு 15.8.88க்குள் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது. தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, புகை இல்லா அடுப்பு வசதி, கழிவறை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

மேலும் வீட்டுடன் இணைந்து தனியாகச் சமையல் அறை கட்டிக் கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும்ஒரு மின் விளக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் 25 சதவீதம் சமூக நலக் காடுகள் வளர்ப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள தரிசு நிலங்களில் புளி, வேம்பு, வாகை, இலவம்பஞ்சு போன்ற மரக்கன்றுகளும், குளங்களின் முன் கரையில் கருவேல், வெள்வேல் போன்ற மரக்கன்றுகளும், சாலை ஓரங்கள் மற்றும் குளக் கரைகளில் புளி, வேம்பு, நாவல், இலுப்பை போன்ற மரக் கன்றுகளும் நடப்படுகின்றன. அந்தந்த கிராம மக்களைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர்கள் மூலமே இப்பணிகள் செய்யப்படுவதால், நடப்பட்ட கன்றுகளைப் பராமரிக்கும் பணியில் சம்பந்தப்பட்ட கிராம மக்களுக்கும் ஊராட்சித் தலைவர்களுக்கும் அதிக பொறுப்பு ஏற்படுகின்றது.

இத்திட்டங்களின்கீழ் நடப்பட்ட கன்றுகளைப் பராமரிக்கவும், மரம் வளர்ந்தவுடன் அதன் பலன்களை அனுபவிக்கவும், மர உரிமம் மூலம் நபர் ஒருவருக்கு ஒரு ஏக்கர் வீதம் உரிமம் பெண் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. இவர்களில் 50 சதவீதம் ஆதிதிராவிடப் பெண்கள் ஆவர்.

அவர்களுக்குப் பராமரிப்புப்பணிகட்காக முதல் வருடம் மாதந்தோறும் ரூ. 60 வீதமும், இரண்டாவது மற்றும் மூன்றாவது வருடங்களில் மாதம் ரூ. 50 வீதமும் பணமும் உணவு தானியமுமாக ஊதியம் வழங்கப்படுகின்றது.

மேலும் இத்திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் 60 பழக்கன்றுகள் மற்றும் 'சூபாபுல் கன்றுகள் நடப்ட்டுகின்றன. அக்கன்றுகளைப் பராமரிப்பதற்காக மாதந்தோறும் ரூ. 40 சம்பந்தப்பட்ட ஆதிதிராவிட குடியிருப்புப் பயனாளிகளுககு வழங்கப்படுகின்றது.

## 'ஜீவன்தாரா' திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிடர்களுடைய நிலங்களில் இலவசமாகக்கிணறுகள் வெட்டித் தரத் திட்டமிடப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில், தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 40 கிணறுகளும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் 110 கிணறுகளும் பூதான் இயக்கம் மூலம் 120 கிணறுகளும், ஆதிதிராவிடர்கட்கு இலவசமாக வெட்டித் தரப்படும். ஒரு கிணறு 2 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப் பாசன வசதியளிக்கும். இதனால் சுமார் 600 ஆதிதிராவிடர் விவசாயிகள் இவ்வாண்டில் பயன் பெறுவர். ●

# இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்கள்

ஐக்கிய நாடுகள் சபை 1981-90 ஆகிய பத்தாண்டைக் குடிநீர்வடிகால் பத்தாண்டாக ( Decade ) அறிவித்துள்ளது. நமது இந்திய அரசும் இதனை ஏற்றுக் கொண்டு குடிநீருக்கு ஆறாவது மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நமது தமிழ்நாடு அரசும் இத்திட்டக் காலங்களில் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்து ஊரகக் குடிநீரில் தன்னிறைவு பெறவும், நகரங்களுக்குக் குடிநீர் வழங்குவதிலும் முனைப்பாகச்செயல் திட்டம் தீட்டியுள்ளது. எனினும், குறிப்பிட்ட ஒதுக்கீட்டில் எல்லாக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க இயலாத நிலையில் குறைந்த செலவில்குடிநீர் வழங்கும் நிமித்தம் மைய அரசுத் தொழில் நுட்பப் பணி மையங்களை நாடெங்கும் 55 மாவட்டங்களில் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் முன்னோடித் திட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து ரூ. 2 கோடி முன்பணமாக வழங்கித் திட்டம் செயல்பட 1986ஆம் ஆண்டு துவக்கப் பட்டுள்ளது.

**இராமநாதபுரம் மாவட்டம்**

இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்தில் ஒரு பின் தங்கிய மாவட்டம். அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படுகிறது. இம் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரே நதி வைகை. இதுவும் பல காலங்களில் வறண்டு விடுகிறது. சில இடங்களில் 6 முதல் 7 மீட்டர் ஆழத்திலேயே உப்புநீர் வந்து விடுகிறது. அதற்கு மேலுள்ள குடிநீர், மழை நின்று இரண்டு மூன்று மாதங்களுக்குள் வற்றி விடுகிறது. ஆகவே வருடத்தில் பல மாதங்கள் நீர் கிடைப்பது அரிதாகி விடுகிறது. இமமாவட்டம் 15.3.1985-ல் தோற்றுவிக்கப்பட்டது. இது ஆறு வட்டங்களையும், 11 ஒன்றியங்களையும் உள்ளடக்கியது. 444 ஊராட்சி மன்றங்களைக் கொண்டுள்ளது. இம்மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை10,22,570 2001-ம் ஆண்டு மக்கள் தொகை 11,06,816 ஆகப் பெருகும் என எதிர் நோக்கித் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.


மைய அரசு, இராமநாதபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக நீர் ஆதாரமே இல்லாத 496 குடியிருப்புகளுக்குக் குடிநீர் முழுமையான அளவு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக ரூ. 2 கோடி முன்பணமாகத் தொழில் நுட்பப் பண் மையத்திற்கு வழங்கியுள்ளது.

இந்த முன்னோடித் திட்டம் தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மைய நிலத்தடி நீர் ஆய்வு வாரியம், உள்ளாட்சி மன்றங்கள், மைய அறிவியல் மற்றும் தொழில் ஆய்வகம் மற்றும் பல அரசு நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கின.

அதன் பின் நீர் ஆதாரம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சுமார் 210 குடியிருப்புகளுக்கு நீர் ஆதாரம் ஏற்படுத்தியுள்ளது. மீதமுள்ள 286 குடியிருப்புகளுக்கு நீர் ஆதாரம் ஏற்படுத்தும் பணி 1988ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 66 குடியிருப்புகளில் குடிநீர் வழங்கும் பணி முடிவடைந்துள்ளது. 1988-89ஆம் ஆண்டு 236 குடியிருப்புகளிலும், எஞ்சியுள்ளவை 1989-90ஆம் ஆண்டிலும் முடிக்கப் படுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வாரியம் 3 கோட்டங்களை இம்மையத்தின் கீழ் அமைத்துள்ளது.

**மைய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வகம்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், கமுதி ஆகிய தாலுக்காக்களில் மத்தியப் பகுதிகளில் பெரும்பாலும் 6 மீட்டர் முதல் 7 மீட்டர் ஆழத்திற்கு மேல் கிடைக்கும் தண்ணீர் உப்பு நீராக இருக்கிறது. எனவே இந்தப் பகுதியில் உப்பு நீரைத் தண்ணீராக்கும் திட்டங்களை 20 இடங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ஒரு லிட்டர் தண்ணீரில் மொத்த உப்புக் கரைசல் 5000 மி.கி.லிருந்து 10,000 மி.கி. வரை இருந்தால் உகந்ததாகும். இவ்வாறு இந்தப் பகுதி



களின் தண்ணீரின் தன்மையைக் கணித்து 15 உப்பு நீரை நன்னீராக்கும் திட்டங்களைத் தீட்டி அதற்குரிய ஒப்புதலும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேலும் 5 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட உள்ளது. மைய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வகம் உப்பு நீரை நன்னீராக்க ஒரு நடமாடும் உப்பு நீக்கி இயந்திரம் அளித்து உதவ முன் வந்துள்ளது. கூடிய விரைவில் இந்த இயந்திரத்தைப் பெற்று இத்திட்டம் செயலாக்கப் படும்.

தொழில் நுட்பப் பணி மைய ஆலோசகர் 7.3.88 அன்று ஐதராபாத்தில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் நீர் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்று இந்தப் பகுதியில் அமைப்பதற்கு ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ.1.50 இலட்சம் அனுமதி வழங்கியுள்ளார். அதன்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மைய நில நீர் வாரியம் இதுவரை இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் பின்னலாங்கோட்டையில் ஒன்றும், மங்களக்குடியில் ஒன்றும் அமைத்துள்ளது. இத் தண்ணீரின் தன்மையானது குடிக்க உகந்ததாகும். மங்களக்குடியில் அமைந்துள்ள ஆழ்துளைக்கிணற்றின் நீர்கொடு திறன் சுமார் ஒரு நிமிடத்திற்கு 2,500 லிட்டர் ஆகும். ஆகவே இந்த ஆழ்துளைக் கிணற்றைப் பயன்படுத்தி திருவாடானை ஒன்றியத்தில் உள்ள அதிகப் பட்சமான கிராமங்களுக்கு தண்ணீர் வசதி அளிக்க ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தால் 55 குடியிருப்புக்களில் உள்ள சுமார் 20,000 மக்கள் பயன்பெறுவார்கள்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பொறியாளர் பணித்துறை**

தமிழ்நாடு வேளாண்மைப்பொறியாளர் துறை நீர்க் குட்டைகள் அமைக்க ரூ. 35 இலட்சங்களுக்கு (50 இடங்களில்) மதிப்பீடு தயாரித்து மைய அரசு ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது.

தென்னிந்திய திருச்சபையின் தொழில் நுட்ப மற்றும் வாய்வழிப் பயிற்சிக்கழகம், கிராமியத்தொழில் நுட்ப முன்னேற்றக் கழகத்தின் நிதி உதவியுடன் 15 குடியிருப்புகளுக்கு வழிமுறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு ஊரணியினை சீர் செய்யும் திட்டத்தை மேற்கொண்டு, இரு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதிப் பணிகளும் 1990ஆம் ஆண்டிற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசீய நிலப் பௌதிகவியல் ஆய்வகம்**

மாவட்ட அளவிலான நீர் ஆதாரம் கண்டுபிடிக்கும் குழுவின் கூட்டம் 16.2.88இல் நடந்தது. அந்தக் குழு திருவாடானை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஒன்றியங்களில் 11 இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பரிந்துரை செய்துள்ளது.

முதற்கட்டமாக தேசீய நிலப் பௌதிகவியல் ஆய்வகம் திருவாடானை ஒன்றியத்தில் 10 ஆழ்துளைக்கிணறுகளுக்கும் கமுதி, முதுகுளத்தூர் ஒன்றியங்களில் 14 குழாய்க் கிணறுகளுக்கும் பரிந்துரை செய்துள்ளது.

1987ஆம் ஆண்டு 247 கைப் பம்புகள் அமைக்கும் பணிகள் பாதுகாப் பருவ நிலைத் திட்டத்தில் எடுத்துமுடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | கிராமக் குடியிருப்புக்கள் | 149 |
| 2. | பேரூராட்சி | 56 |
| 3. | நகராட்சி | 42 |

1988ஆம் ஆண்டு இரண்டாவது கட்டப் பணியில் 70குழாய்க் கிணறுகள் எடுக்கப்பட்டு இதுவரை 29 குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. மீதிப்பணிகள் ஜூன் 1988க்குள் முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்தின்கீழ் மேலும் 50 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன. இவையன்றி கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மணல் மேடான பகுதியில் நீர் சுரப்புக் கிணறுகள் அமைக்கும் பணி 20 இடங்களில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு 6 கிணறுகளின் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

வழிமுறையாக இம் மாவட்டத்தில் பயன்படுத்தி வரும் ஊருணிகளை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ள 28 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தகவல்

**உ.ல. இரவீந்திரன்**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)**

**இராமநாதபுரம்.**

**பரிந்துரை செய்யப்பட்ட நீர் ஆதாரங் களும் நீர் ஆதாரங்கள் உருவாக்கப் பட்டவைகளின் மொத்த விவரங்கள்**

| பரிந்துரைக்கப்பட்ட நீர் ஆதாரங்கள் | | | | நீர் ஆதாரங்கள் உருவாக்கப்பட்டவை. | | | | நல்ல நீர் ஆதாரம் | | | | நீர் ஆதாரம் உருவாக்கப்பட வேண்டியவை. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆழ்குழாய்க் கிணறு | குழாய்க் கிணறு | நீர் ஊடுருவல் | திறந்தவெளிக் கிணறு | ஆழ்குழாய்க் கிணறு | குழாய்க் கிணறு | நீர் ஊடுருவல் | திறந்தவெளிக் கிணறு | ஆழ்குழாய்க் கிணறு | குழாய்க் கிணறு | நீர் ஊடுருவல் | திறந்த வெளிக் கிணறு | ஆழ்குழாய்க் கிணறு | குழாய்க் கிணறு | நீர் ஊடுருவல் | திறந்தவெளிக் கிணறு |
| 31 | 72 | 45 | 2 | 24 | 33 | 14 | 2 | 21 | 32 | 14 | 2 | 10 | 40 | 31 | |




# நலம் தரும் இந்திய முறை மருத்துவம்

"எனக்கு ஆயப்பாக்கம் கிராமுங்க. வயல்ல விவசாயம் செஞ்சுகிட்டு இருக்கிறப்ப காலெல்லாம் அரிப்பு வந்தது. கொசுக்கடிபோல இருந்துச்சு. அப்புறம் படைபோல வந்து, என்ன சொறிஞ்சாலும், தீராதுங்க. கத்தியப் போட்டுக்கூட சொறிஞ்சு பார்த்தேங்க. தற்கொல பண்ணிக்கலாம்னுகூட தோணுச்சி. அவ்வளவு தூரம் அரிப்பு என் உயிரை எடுத்தது.

''திண்டிவனம், செங்கல்பட்டெல்லாம் போய் இங்கிலீஷ் மருந்து சாப்பிட்டுப் பாத்தேன். ஒண்ணும் குணமாகலே. 10 மாதம் கஷ்டப்பட்டேன். இங்க வந்து வைத்தியம் பார்த்தேன். மருந்துகொடுத்தாங்க, கடல்ல் குளிக்கச் சொன்னாங்க. வறுத்த உப்பு, சுட்டபுளிய சாப்பிடச் சொன்னாங்க, பத்தியமெல்லாம் இருந்தேங்க. இப்ப பாருங்க ஒரு மாசத்துலே முக்கால்வாசி குணமாயிட்டது. நான் எப்படி நல்லா ஆனேன்னு எனக்கே ஆச்சரியமாயிருக்குங்க'' என்று உள்ளத்துடிப்போடு விவரிக்கிறார் 40 வயதான திரு சம்பத்.

சென்னை கணக்கு தணிக்கை அலுவலகத்தில் பணிசெய்து ஓய்வு பெற்ற 68 வயதான திரு கிருஷ்ண மூர்த்தி ''எனக்கு தூசு, குப்பை நெடியெல்லாம், ஒத்துக்கொள்ளாமல் மிகவும் சிரமப்பட்டேன். (Dust Allergy) என்று கூறினார்கள். அலோபதியில் சிகிச்சை செய்து கொண்டேன். ஒன்றும் பயனில்லை. தற்காலிக குணம்தான் தெரிந்தது. எனது நண்பர் ஒருவர் கூறியதன் பேரில் இங்கு வந்து சித்தமருத்துவத்தை மேற்கொண்டேன். இரண்டே மாதத்தில் பூரண நலம் பெற்று விட்டேன். எந்தவித மூச்சுத் திணறலோ இரைப்போ இப்போது கிடையாது. இங்கு தரப்படும் சிகிச்சை முறைகளும் மருத்துவமனையின் சூழலும் என் நோய் நீங்கப்பெரிதும் காரணம்'' என்று நன்றி உணர்வோடு கூறுகிறார்.

''நடந்தால் தாங்க முடியாத வலி, படுத்தால் சற்றுப்பரவாயில்லை. இப்படி 6 ஆண்டுகள் தாங்க முடியாத இடுப்புவலியால் பாதிக்கப்பட்ட திருமதி சந்திரா, வலியின் கொடுமை பொறுக்க முடியாமல் ஒரு முறை தற்கொலை செய்து கொள்ளக்கூட முயன்றுவிட்டார். தனியார் மருத்துவமனையில் சேர்ந்ததில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறி அதற்கும் நாள் குறித்து விட்டார்கள். ஆனால் ஆபரேஷனைத் தவிர்க்க வேண்டி இங்கு வந்து சிகிச்சை மேற்கொண்டபின் அவரது உடலில் எந்தக்குறையும் இல்லை. வாழ்க்கையில் மறுபிறப்பே கண்டதுபோல் மகிழ்ச்சியில் திளைக்கிறார் திருமதி சந்திரா.

திருப்பதியைச் சேர்ந்த 58வயது திரு ஆளவந்தார் இம்மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்து சிகிச்சைபெற்றவர். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர். நடக்கமுடியாது. பேச்சு கிடையாது இங்கு வரும்போது அவருக்குச் சுய நினைவே இல்லை. அலோபதி சிகிச்சைமுறை இவரைக் கைவிட்டபின் இங்கு வந்து ஆயுர்வேத முறையில உள் மருந்து, எண்ணெய் தடவுதல், உடற்பயிற்சி போன்ற சிகிச்சைகளால் இரண்டே மாதக் காலத்தில் 80 சதவீத அளவில் நலம் பெற்றுவிட்டார்.

இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்டு ஆயுர்வேதம் மூலம் நலம் பெற்று இன்று நன்றாக நடக்கும் 2½ வயது ஸ்ரீதேவி, யுனானி வைத்திய முறையால் மஞ்சட்காமாலை நோயிலிருந்து விடுபட்ட திருமதி லெட்சுமி, கை, கால்களில் மூட்டு வீங்கிமிகவும் அவதிப்பட்டு ஓமியோபதி வைத்தியம் மூலம்பூரண குணம் பெற்ற மதுரையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி, மேலும் வெண் குட்டம், குடற்புண் இப்படி பல்வேறு நோய்களால் துன்பப்பட்டு, துயரப்பட்டு, இறுதிப் புகலிடமாய் வந்துசேர்ந்து நலம் பெற்றோர், இன்று நன்றி உணர்வோடு நினைத்துப்பார்ப்பது அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையின் சேவையை.

இவர்களுக்கு மட்டுமல்ல நோய் நொடி தாக்கப்பட்ட எண்ணற்றோர்க்கு மறுவாழ்வுதந்துவருகிறது இம்மருத்துவமனை. பொதுவாக நவீன மருத்துவத்திற்குச் சென்று குணமடையாத பல நோயாளிகள் இம்மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைபெற்று நலமடைந்து வருகின்றனர்.

இம்மருத்துவமனையில் சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி ஆகிய மருத்துவமுறைகளில் சிகிச்சைகள் தனித்தனியே அளிக்கப்படுகின்றன.



இந்திய மருத்துவத் துறையின் இம்மருத்துவமனையில் உள் நோயாளிகளாகவும், புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்படுகின்றனர். 1970-ஆம் ஆண்டு 100 படுக்கை வசதிகளைக் கொண்டு செயல்பட்ட இம்மருத்துவமனை இன்று 209 படுக்கை வசதிகளைக் கொண்டதாக வளர்ந்துள்ளது. சித்தா, ஆயுர்வேதா, யுனானி முறை மருத்துவத்திற்கு முறையே 100, 60, 49 படுக்கைகள் உள்ளன.

**சிகிச்சை முறைகள்**

சித்த மருத்துவத்தில் வாத நோய்கள், கீல்வாத (மூட்டு) நோய்கள், தோல்நோய்கள், ஈரல் நோய்கள் ஆகியவற்றுக்கும், ஆயுர்வேத மருத்துவத்தில் பக்கவாதம், ஏகாந்த வாதம், அதகாலவாதம், சந்திகத வாதம், கடிவாதம், ஆகியவற்றுக்கும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

யுனானி மருத்துவத்தில் மஞ்சக்காமாலை, பக்கவாதம், கீல்வாதம், யானைக்கால், இரைப்பைப்புண், மகோதரம், இளம்பிள்ளைவாதம், வெள்ளைநோய், இதயத்துடிப்புக் கோளாறு, ஆகிய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஆஸ்துமா, வெண்குட்டம், ஒற்றைத்தலைவலி, மூளை எலும்பு அழற்சி, அடிநா சதைவளர்தல், ஆகிய நோய்களுக்கு ஓமியோபதி மருத்துவமுறை மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இம்மருத்துவமனையில் 12.1.86 முதல் வர்ம மருத்துவமுறை தொடங்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சித்த மருத்துவ சிகிச்சையில் முக்கியமான ஒன்று வர்மா எனப்படும் முறை. வர்ம முறை சிகிச்சையின் சிறப்பு என்னவென்றால் விரல் முனைகளைக்கொண்டு உடலின் முக்கியப் பகுதிகளில் முறையாக மசாஜ் செய்வதன்மூலம் எவரும் வலியிலிருந்து நிவாரணம் பெறலாம். வர்ம முறை சிகிச்சையில் மூலிகைகளும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. இம்முறையில் பயன்படுத்தப்படும் தைலங்கள் சில அபூர்வ மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

வர்ம மருத்துவமுறை மூலம் பக்கவாதம், இளம்பிள்ளைவாதம், ஒற்றைத்தலைவலி, கண்டவாதம், இடுப்புவாதம், கீழ்வாதம், நாட்பட்ட நரம்பு நோய்கள், எலும்பு நோய்கள், கண்நோய்கள், மூளை நோய்கள், வர்மநோய்கள், காயகல்பம், தூக்கமின்மை ஆகியவற்றுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி மருத்துவமுறைகளுக்குத் தேவையான மருந்துகள் செய்யும் மருந்துசெய் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய அரசின் உதவியால் மருந்து செய் நிறுவனம் இயந்திரமயம் ஆக்கப்பட்டு மருந்து தயாரிப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது.

நோய்க்கணிப்பு வழிகளைப் பெருக்கவும், ஆய்வுக்குத் துணையாகும் பொருட்டும், 19.4.82 முதல் இங்கு நோய்க்குறி ஆய்வியல் உயிர்வேதியியல், நுண்கதிர் ஆகிய பகுதிகள் இயங்கி வருகின்றன.

**சித்த மருத்துவம்**

வட இந்தியாவில் ஆயுர்வேத மருத்துவத்திற்கென்று பல்கலைக்கழகம் உள்ளது. யுனானி, ஓமியோபதி முறைகள் உலகின் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சித்த மருத்துவம் தமிழ்நாடு அளவில் நின்றுவிட்டது. சித்த மருத்துவத்தின் பயனை இந்தியாவின் மற்ற பகுதிகளில் வாழ்வோரும் பெற தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சித்தமருத்துவம் மிகப்பழமையானது. இந்நிலப்பரப்பில் தோன்றிய மனித இனம், என்று தாவர இனங்களை உணவாகப் புசிக்க ஆரம்பித்ததோ, அன்றே தமிழ் மருத்துவமாகிய 'சித்த மருத்துவம்' தோன்றியது என அறிவியலார் கூறுகின்றனர். ஏனெனில் உணவே மருந்து, மருந்தே உணவு என்ற கொள்கையுடையது சித்தமருத்துவம். எடுத்துக்காட்டாக நாம் நாள்தோறும் பருகும் இரசம் அகட்டு வாயகற்றியாகும்.

சித்த மருத்துவத்தால் தீர்க்கமுடியாத நோய்கள் இல்லை. ஆனால் அத்தனையும் அறிந்த சித்த மருத்துவர்கள், தற்போது இல்லை. அறுவை மருத்துவம், வர்ம மருத்துவம், தொக்கணம், எனப் பல சிறப்பு முறைகள் சித்த மருத்துவத்துல் உண்டு. காலப்போக்கில் பல படையெடுப்புகளின் காரணமாகவும், நாகரீக மாற்றங்களின் காரணமாகவும் சித்தமருத்துவம் மறைக்கப்பட்டிருந்தது. ஆனால் இம்மருத்துவம் காலத்தால் அழிக்க முடியாதது. அதனால் தான் இன்றும் நிலைத்திருக்கிறது.

வாசமுனி, மச்சமுனி, போகர், இடைக்காடர், அகத்தியர், உரோமரிஷி, கமலமுனி, திருமூலர் போன்ற சித்தர்கள் தங்கள் அறிவாற்றலால் அக்காலத்திலேயே 4,448 நோய்கள் எனக் கண்டுபிடித்துள்ளார்கள். ஒவ்வொரு நோய்க்கும், தனிப்பெயர் குறிகுணங்கள், நாடி நடை அனைத்தும் விளக்கப்பட்டுள்ளன.

**புதிய கட்டடங்கள்**

தொக்கணம் என்ற முறையில் சிகிச்சை அளிப்பதற்காக அகநோயாளிகள் பிரிவு அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் கட்டப்பட்டுள்ளது. வர்மம் முறையில் சிகிச்சை அளிக்கும் பகுதிக்கு கட்டடம் கட்டப்பட உள்ளது. மேலும் தண்டையார் பேட்டையில் அரசு சித்தமருந்தகம் ஒன்றும் கட்டப்பட உள்ளது.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இஆப அவர்கள் கட்டப்பட இருக்கும் கட்டடங்களுக்குஅடிக்கல்நாட்டினார். மேலும் கட்டி முடிக்கப்பட்ட அகநோயாளிகள் பிரிவையும் திறந்து வைத்தார். இதற்கான விழா 15.6.88 அன்று



நடைபெற்றது. முன்னதாக, மருத்துவமனையின் எதிர்ப்புறம் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையை ஆளுநரின் ஆலோசகர் சுற்றிப்பார்த்தார். மூலிகைப் பண்ணையில் வில்வம் மற்றும் அசோக மரக்கன்றுகளை ஆலோசகர் நட்டார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையின் ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு ஏ.கே. விஜயபானு, இ.ஆ.ப., அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்.

இத்துறையின இயக்குநர் தி.கே. இளங்கோவன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஸ்ரீராம தேசிகன் என்பவர் சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்த 'சரஹசம்ஹிதா' என்ற மருத்துவ நூலின் இரண்டாம் பாகத்தை ஆலோசகர் வெளியிட்டார்.

பின்னர் தமது உரையில் ஆலோசகர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''இத்துறை நவீனமாக வந்ததல்ல. படிப்படியாக முன்னேற்றமடைந்து இந்த அளவு உருவாகி உள்ளது. மூலிகைப்பண்ணையைச் சுற்றிப்பார்த்தேன். நல்ல மூலிகைகளெல்லாம் வளர்க்கப்படுகின்றன.

''சித்தர்கள் நிறையப் பாடிச்சென்றுள்ளார்கள். ஆனால் நமக்கு அதில் ஒரு சிலதான் கிடைத்துள்ளன. திருமந்திரத்தில், பாடல் வடிவில் மருத்துவமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. கணவன் மனைவி வாழ்க்கை முறை எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்றுகூட எழுதி வைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

''சரஸ்வதி மகால் நூலகத்தில் எண்ணற்ற ஓலைச்சுவடிகள் உள்ளன. இவற்றை ஆராய்ச்சி செய்து நூல்களாகக் கொண்டுவர சித்த வாரியம் முயலவேண்டும். சாதாரண கல் இருந்தால் கூட வெளிநாட்டில் அது குறித்து ஆராய்ச்சி செய்கிறார்கள். நம் நாட்டில் இது போன்ற மூலிகைகளின் பயன்கள் குறித்துத் தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்

''சித்த வைத்தியம் பெரிதா, ஓமியோபதி பெரிதா, யுனானி பெரிதா எனபதல்ல பிரச்னை. மக்களுக்கு எந்தவகை மருத்துவத்தில் நம்பிக்கை உள்ளதோ அதன்மூலம் அவர்களைக் குணப்படுத்த வேண்டும்.

''ஒரு காலத்தில் பென்சில் என்றால், ஜெர்மன் பென்சில் என்பார்கள். பட்டாசு என்றால் ஹாங்காங் பட்டாசு என்பார்கள், சாதாரண ஊக்கு, பொத்தான் என்றால் கூட இங்கிலாந்து ஊக்கு, பொத்தான் வேண்டும் என்பார்கள். அதுபோல மருத்துவம் என்றால் ஆங்கில மருத்துவம் தான் வேண்டும் என்பார்கள். அந்த அளவிற்கு ஆங்கில மருத்துவத்தின்மீது மோகம் இருந்தது. ஆனால் இப்போதெல்லாம் அது குறைந்து விட்டது.

''சித்த மருத்துவ நூல்கள் நிறைய வரவேண்டும். சித்தமருத்துவத்தின் பயன்களை மக்கள் அடையவேண்டும். இதுபோன்ற நூல்களை வெளிமாநிலங்களுக்கும் அனுப்ப வேண்டும். மருத்துவர்களை மாநிலங்களுக்கிடையே பரிவர்த்தனை செய்து கொள்ளும் முறை வர வேண்டும். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், இந்தியமுறை மருத்துவத்திற்கென 15 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும். சித்த மருத்துவ வல்லுநர்கள் பலர் தனிப்பட்ட முறையில் மருத்துவ மனைகள் அமைத்துச் செயலாற்றுகிறார்கள். அரசில் பணிபுரியும் மருத்துவர்களும், தனியே செயலாற்றும் மருத்துவர்களும் அவ்வப்போது கூடி தமது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

''தற்போது வெளியிட்ட நூலின் விலை ரூ. 253 என்றார்கள். இந்நூலை மலிவுப் பதிப்பாக வெளியிட்டு அனைவருக்கும் பயன்படும்படி செய்யவேண்டும். தமிழ்நாட்டில் சித்த மருத்துவத்திற்கென தனிப் பல்கலைக் கழகம் தேவை என்றார்கள். ஆனால் அதற்குமுன் அடிப்படைத் தேவைகளை நாம் உருவாக்க வேண்டியுள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் இணை இயக்குநர் டாக்டர் கே.வி. வைத்தீஸ்வரன் நன்றி கூறினார்.

செலவில்லாமல், அதிகச் சிரமமில்லாமல் நிரந்தரமான நோய் நீக்கும் நல்ல சிகிச்சை முறை இந்திய மருத்துவமுறை. இம்மருத்துவத்தில் பின விளைவுகள் ஏதுமில்லை ( Side effects ) நவீன மருத்துவம் தராத நல்வாழ்வை இந்திய முறை மருத்துவம் தருகிறது என்பது பெரும் உண்மை.

**வி. இராவணன்**

# பழுவூர்த் தளிச்சேரி

டாக்டர் இரா. கலைக்கோவன்


திருச்சி சயங்கொண்டம் சாலையில், திருச்சியிலிருந்து ஐம்பத்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பழுவூர். சோழப் பெருவேந்தர்களின் தொடக்கக் காலப் பெருமைகளுக்குத் தோள் கொடுத்த தொல்குடியினராய்ப் பழுவேட்டரையர்களைச் சொல்லலாம். முதலாம் ஆதித்தனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் தலைகாட்டும் இந்தச் சிற்றரச மரபு, முதலாம் இராசராசனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக்குப் பிறகு வரலாற்று வெளிச்சத்திலிருந்து முற்றிலுமாய் மறைந்து விடுகிறது. ஆதித்தனுக்கும் இராசராசனுக்கும் இடைப்பட்ட இந்த நூற்று இருபத்தைந்தாண்டு கால இடைவெளியில் பழுவூர், பழுவேட்டரையர்களின் ஆட்சியில் மகிழ்ந்திருந்தது.

குமரன் மறவன், குமரன் கண்டன் என்னும் இரு உடன்பிறந்தவர்களின் ஆட்சியுடன் பழுவூர் வரலாறு தொடங்குகிறது. இவர்களும் இவர்களுக்குப் பிறகு வந்த இளையோர்களுமாய்ப் பழுவூரில் அதியற்புதமான ஐந்து அழகுக் கோயில்களை எடுத்துள்ளனர். இங்குள்ள கல்வெட்டுகளில் பெரும்பழுவூர், அவனிகந்தர்வபுரம், சிறுபழுவூர் என்று முப்பிரிவுகளாய் உணர்த்தப்படும் பழுவூர் ஆட்சி மண்டலம், இன்று, மேலப் பழுவூர், கீழையூர், கீழப் பழுவூர் என்ற மூன்று சிற்றூர்களாய்ச் சுருங்கிச் சிதறியுள்ளது. மேலப் பழுவூரில்தான் கண்டன் மறவன் எடுத்த திருத்தோற்றமுடையார் கோயில், இன்று மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலாய்ப் பெயர் மாற்றம் கொண்டு அமைந்துள்ளது. கீழையூரில், ஒரே மதிலுக்குள், அவனிகந்தர்வ ஈசுவரகிரகம் என்ற வளாகத்துள் இரண்டு கலைக் கோயில்கள், தென்வாயில் ஸ்ரீகோயில், வடவாயில் ஸ்ரீகோயில் என்ற கல்வெட்டுப் பெயர்கள் காலப் போக்கில் கரைந்துபோக, அகத்திசுவரமாகவும், சோழீச்சரமாகவும் பெயர் மாறி, நினைவுச் சின்னங்களாய் வருவோர்க்கும் போவோர்க்கும் விழிவிருந்து படைத்துக்கொண்டிருக்கின்றன. கீழப் பழுவூரில் மறவன் கண்டன் எடுப்பித்த ஆலந்துறையார் திருக்கோயில், இன்று வடமூலேசுவரர் கோயிலென்ற விளங்காத பெயருடன் மக்களின் இலேசான அரவணைப்பில் இதமாய் மகிழ்ந்து நிற்கிறது.

இந்தத் திருக்கோயில்களில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவை முழுமையான ஆய்வு மேற்கொண்டதில் பல புதிய செய்திகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. **அவற்றுள் ஒன்றுதான் இது நாள் வரையும் வரலாற்றுலகிற்கு வெளிப்படாதிருந்த பழுவூர்த் தளிச்சேரி.**

தமிழகம் தலைநிமிர்ந்து கொண்டாடும் காலத்தால் அழியாத கலைக் கோயிலாம் ராஜராஜேசுவரத்தை எழுப்பிய முதலாம் இராசராசனால் தஞ்சை மண்ணிலே ஆடற்கலை அழகியர்க்கென்று அமைக்கப்பட்ட வாழிடத்தைத்தான் தளிச்சேரி என்று தஞ்சைக் கல்வெட்டுகள் தொடர்ந்து அழைக்கின்றன. இது போல் தளிச்சேரிகள் தமிழகத்தில் முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட காலத்திலேயே இருந்தமைக்கும் தஞ்சைக் கல்வெட்டுகளே சான்றாகின்றன. திருவாரூர்ப் பெரிய தளிச்சேரியிலிருந்து வந்து

அவனி கந்தர்வ ஈசுவரக் கிரகம் நுழைவாயில் கோபுரம்



தஞ்சைக் கோயிலில் பணிக்கமர்ந்த ஆடற்பாவையர் பெயர்களைப் பட்டியலிடுகிறது ராஜராஜேசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு. வரலாற்றில் இதுநாள் வரையிலும் தஞ்சைத் தளிச்சேரியும், திருவாரூர் பெரிய தளிச்சேரியும் மட்டுமே கொண்டாடும் பெயர்களாய் வழங்கி வந்துள்ளன.


டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றுப் பேரவையின் அண்மை ஆய்வுகள் பழுவூரிலும் இது போல் ஒரு தளிச்சேரி பாங்குற அமைந்திருந்த உண்மையை வெளிக் கொணர்ந்துள்ளன. வடவாயில் ஸ்ரீகோயில் கருவறையின் கிழக்குப் புறச் சுவரிலுள்ள முதலாம் இராசராசனின் பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இத்தளிச்சேரி குறிப்பிடப்படுகிறது. இக் கல்வெட்டு, மைய அரசின் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டிருந்த போதும் இதன் சுருக்கம் மட்டுமே கல்வெட்டறிக்கையில் வெளியாகியுள்ளது. இச் செய்திச் சுருக்கத்தில் தளிச்சேரி பற்றிய குறிப்பு இல்லை. அதனாற்றான் இக்கோயிலைப் பற்றி எழுதிய எந்த ஆய்வாளரும் இத்தளிச்சேரி பற்றிய உண்மையை எழுதாது போயினர்.

பழுவூரில் இருந்த பகைவிடை ஈசுவரத்துத் தேவனார் மகளார் கரிய வீரநானி என்பவர், வடவாயில் ஸ்ரீகோயில் இறைவன் திரு முன்னில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்காக நிலக்கொடை தந்தார். இந்த நிலத்தின் எல்லைகளைக் குறிப்பிடும்போது, 'பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரி வட சிறகில் நக்கன் பெற்றமை பங்குக்கு மேற்கு' என்று கல்வெட்டு சுட்டிக் காட்டுகிறது. பகைவிடை ஈசுவரத்தில் அல்லது பகைவிடை ஈசுவரத்தையொட்டி தளிச்சேரியொன்று இருந்தமை இதனால் புலப்படுகிறது. இத்தளிச்சேரியும் தஞ்சைத் தளிச்சேரி போலவே பல பிரிவுகளுடன் விளங்கியதை 'வட சிறகு' என்ற சொற்கள் மெய்ப்பிக்கின்றன. இந்தப் பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரியின் வடசிறகில் இருந்த ஆடலரசியாக நக்கன் பெற்றமை குறிப்பிடப்படுகிறார். இங்கிருந்த ஆடல் அழகியருள் பலர் இறைவனுடைய மக்களாகக் கல்வெட்டில் குறிக்கப்படுவது சிறப்புக்குரிய செய்தியாகும். வீரநானிகூட கல்வெட்டில் 'பகைவிடை ஈசுவரத்துத் தேவனார் மகளார்' என்றே குறிப்பிடப்படுகிறார்.

பகைவிடை ஈசுவரத்துத் தளிச்சேரியில், பழுவூர்க் கோயில்களில் ஆடல் நிகழ்த்திய பாவையர் பலரும் குடியிருந்தனர். இவர்களுள் ஒன்பதின்மரை முதலாம் இராசராசன் தஞ்சைக்கு வரவழைத்துத் தான் எழுப்பிய பெரிய கோயிலில் ஆடற் பணிக்கமர்த்தியதைக் கல்வெட்டுகளால் அறிகிறோம். பழுவூர்ப் பகைவிடை ஈசுவரத்து நக்கன் ஆடவல்லான், நக்கன் பழுவூர், நக்கன் ஆதித்தி, நக்கன் வானவன் மாதேவி, நக்கன் அரிகுலகேசரி, நக்கன் அரியாள் ஆகிய அறுவருடன், பழுவூர் அவனிகந்தர்வ ஈசுவரகிரகத்தைச் சார்ந்த நக்கன் துண்டி, நக்கன் பொற்கேசி, நக்கன் பெற்ற திரு ஆகிய மூவரும் தஞ்சையில் குடியமர்ந்தனர். இப்படி ஒன்பது பேரைத் தஞ்சைக்கு அனுப்புமளவு பழுவூர்த் தளிச்சேரி ஆடற்கலையில் தேர்ந்த அழகியரைப் பலராய்க் கொண்டிருந்தது.

பழுவூர்க் கல்வெட்டுகளில், பல ஆடலரசியர்களின் பெயர்கள் கொடையாளர்களாகச் சூட்டப்படுகின்றன. நக்கன் அய்யாறடிகள், நக்கன் மானதிரி, அவர் மகள் நக்கன் கண்ட பிராட்டி. நக்கன் குமரக்கன், நக்கன் மரிய அரங்க பிரான் என்பார் அவனிக்கந்தர்வ ஈசுவர கிரகத்து இறைக்கோயில்களுக்கு விளக்கெரிக்கவும், வேறு பலவற்றிற்குமாய்ப் பொன்னையும், நிலத்தையும் வாரி வழங்கியிருக்கிறார்கள். இரண்டு கல்வெட்டுகள் இக்கோயில் ஆடலரசியர் இருவரை 'இத்தளி கூத்தப்பிள்ளை' என்று உரிமையோடு, பெருமைப்படுத்தி அழைக்கின்றன.

இவற்றுள் ஒன்று, தற்போது மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் என்று அழைக்கப்படும் திருத்தோற்றமுடையார் கோயிலின் தெற்குப்புறச் சுவரிலிருந்து படியெடுக்கப்பட்டுள்ளது. பெரும் பழுவூரிலிருந்த பகைவிடை ஈசுவரத்து மகாதேவர்க்கு, திருத்தோற்றமுடையார் கோயிலைச் சேர்ந்த கூத்தப்பிள்ளை நக்கன் கிடந்த பெருமாள் விளக்கொன்று வைத்த செய்தியைத் தரும் இக் கல்வெட்டை இப்போது கோயிலின் சுவரில் காண முடியவில்லை.



**தளிச்சேரி கல்வெட்டு காணப்படும் வடவாயில் ஸ்ரீகோயிலின் கருவறைக் கிழக்குச் சுவர்.**

அவனி கந்தர்வ ஈசுவர கிரகத்துக் கூத்தப்பிள்ளையான நக்கன் அய்யாறடிகள், வடவாயில் ஸ்ரீகோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்கத் தேவதானமாக நிலக்கொடையளித்ததைக் கூறும் இன்னொரு கல்வெட்டு இக்கோயிலின் வடபுறச் சுவரில் காணப்படுகிறது.

ஆடலழகியர்களைக் குறிக்கும் கல்வெட்டுகள் போலவே கூத்து நிகழ்ச்சிகளையும், கூத்துக் கலைஞர்களையும் வெளிப்படுத்தும் சில கல்வெட்டுகளும் பழுவூர்க் கோயில்களில் காணப்படுகின்றன. திருஆலந்துறையார்த் திருக்கோயிலில் உள்ள கோப்பரகேசரியின் ஆறாம் ஆட்சியாண்டுக்கல்வெட்டு, ஐப்பசித் திங்களில் விஷு விழாவின்போது இங்கு நடைபெற்ற சாக்கைக் கூத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அடலையூர்ச் சாக்கை என்னும் கூத்துக் கலைஞர் சாக்கைக் கூத்தின் மூன்று அங்கங்களை இக்கோயில் விழாவில் நடத்தி மக்களை மகிழ்வித்தார். அவருக்கு அரைக் கழஞ்சு பொன்னும், உடைகளும், மூன்று கலம் நெல்லும் தரப்பட்டன. மூன்றாம் குலோத்துங்கனின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பழுவூர்ச் சாக்கைக்கூத்தன் நாராயணன் பட்டன் என்பாரை அடையாளம் காட்டுகிறது. இவர் சிறுபழுவூர்ப் பெருங்குறிப் பேரவையின் உறுப்பினராக இருந்த சிறப்பு, ஆடற்கலைக்கு அக்காலத்தில் அளிக்கப்பட்ட பெருமையைப் புலப்படுத்துகிறது.

அவனிகந்தர்வ ஈசுவர கிரக வளாகத்திலுள்ள தென்வாயில் ஸ்ரீகோயிலில் காணப்படும் இரண்டாம் இராசேந்திரனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று ஆடற்கலைக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட குடும்பமொன்றை அடையாளம் காட்டுகிறது. சந்தான குணசீலன் என்னும் ஆடற்கலைஞரின் பிள்ளைகளான குணசீலன் சந்திரசேகரனான மூவேந்த சிகாமணி நிருத்த விழுப்பரையரும், இவர் தம்பி சந்திரசேகரனான மூவேந்த சிகாமணி நிருத்த விழுப்பரையரும், இக்கோயிலில் ஆடற்கலைஞர்களாகவும், ஆடல் கற்றுத் தந்த அறிஞர்களாகவும் தொண்டாற்றினர். இவர்தம் தொண்டினைப் போற்றி இக்கோயில் பதிபாத மூலப்பட்டுடைய ஈச்சாச்சார்ய தேவகன்மிகள், நட்டுவக் காணியாக நிலக்கொடை தந்து தங்கள் மகிழ்வையும், கடப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

சிற்பக் கலையின் அற்புதங்களாய் கோயில்களை எழுப்பிய பழுவேட்டரையர்கள், ஆடற்கலையையும் கண்ணாய்ப் போற்றிக் கருத்தாய் வளர்த்ததைப் பழுவூர்த் தளிச்சேரிக் கல்வெட்டும், ஆடல் நிகழ்வுகளை அம்பலப்படுத்தும் பிற கல்வெட்டுகளும் தெளிவாய் உணர்த்துவது போலவே, இங்குள்ள சில சிற்பங்களும் எடுத்துக் காட்டுகளாய் இலங்கிப் புகழ் வளர்க்கின்றன.

தென்வாயில் ஸ்ரீகோயிலின் மகர தோரண ஆடல் தோற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. வினிவிருத்தக் கரணரும், ஊர்த்வஜாநு கரணரும் சிவபெருமானின் சிறந்த ஆடல் வடிவங்கள். இவை தவிர, வடவாயில் ஸ்ரீகோயிலின் கொடுங்கையை அடுத்துள்ள பூதகண வரிசையின் பொருளார்ந்த வடிவங்களும், பழுவூர் ஆடற்கலையில் அரசோச்சியமைக்கு ஆதார சுருதிகளாய் அமைந்துள்ளன.

வரலாற்றுக் கடலோரம் வந்து மோதும் சான்றலைகள் பல நேரங்களில் சிதறித் துகள்களாக நுரை பூத்து மடிவதுண்டு. ஆனால் பழுவூர்ச் சான்றுகள் அப்படியல்ல. காண்பார்க்கும். படிப்பார்க்கும். பழுவூரின் தளிச்சேரியையும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே அங்கு நிலவிய கலை வளர்ச்சியையும், ஆடற்கலையின் அருமையான கலை நுணுக்கச் சிறப்புகளையும் எடுத்தோதும் கல்வெட்டுகளும், சிற்பங்களும், அழியாச் சான்றுகளாய் இன்றளவும் நின்று நிலவி, பழுவூரைத் தமிழகத்துக் கலை வரலாற்றின் தலையாயதொரு தனியிடத்தில் அமர்த்தியுள்ளன எனில் அது மிகையாகாது.

---

## மாவட்ட வளர்ச்சியில் மதுரையின் சாதனை



தமிழ்நாட்டில் உள்ள அத்தனை மாவட்டங்களிலும், இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றியதில் முதலிடம் பெற்ற பெருமையுடையது மதுரை மாவட்டம்.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 10.29 இலட்சம் மனித சக்தி நாட்கள் என்ற இலக்கையும் தாண்டி 11.49 இலட்சம் மனித சக்தி நாட்கள் இம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. இலக்கில் இது 111 சதவிகிதம் அதிகமாகும்.


சிறு தொழில்கள் அமைக்கும் திட்ட இலக்கு 350 என்றிருப்பினும் 694 என்ற வகையில் அதிக சாதனை புரிந்து 198 சதவிகிதம் முன்னணியில் உள்ளனர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு வீடுகட்டித் தரும் திட்ட இலக்கு 250; ஆனால் மதுரை மாவட்டத்திலோ 2,210 பேருக்கு வீடு கட்டித் தந்து 884 சதவிகிதம் வெற்றி பெற்றுள்ளனர்.

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு 80 வீடுகள் கட்டித் தரும் இலக்கில், 3,154 வீடுகள் கட்டப்பட்டு, 3,945 சதவிகிதம் என்ற அளவில் சாதனை புரிந்திருக்கிறார்கள்.

கிராம இல்லங்களில் நான்காயிரம் புகையில்லா அடுப்பு அமைப்பது இலக்கு; ஆனால். 12,510 புகையா அடுப்புகள் அமைத்துத்தந்து 313 சதவிகிதம் சாதனை புரிந்துள்ளார்கள்.

இப்படிப் பதின்மூன்று அம்சங்களில் அரசு நிர்ணயித்த இலக்குகளில் நூறு சதவிகிதத்திற்கு மேல் மதுரை மாவட்டத்தில் சாதனை புரிந்திருக்கிறார்கள். மூன்று அம்சங்களில் வீதாச்சார இலக்குகளை நிறைவேற்றிருக்கிறார்கள்.



# ஒருமைப்பாட்டு உணர்வில் உருகிநின்ற கவியரசர் கண்ணதாசன்

**கவியரசு கண்ணதாசன் அவர்களின் 62-வது பிறந்த நாளை (24-6-88) யொட்டி இக்கட்டுரைத் தொடர் வெளி யிடப்படுகிறது.**

1965ஆம் ஆண்டில், நேருவின் முதலாவது நினைவு நாள் கவியரங்கம் நடைபெற்றது. அதிலே கலந்து கொண்ட கவியரசரின் கவிதையின் ஒரு பகுதி;

இன்று தலைவன் ஏற்றிவைத்த கொள்கைகளை
மன்றத்தே சொன்னால் மரணம்பொய் யாகிவிடும்
அமைதி! உயிர்களுக்குள் அன்பு! இனங்களிலே
சமதர்மம்! நடுநிலைமை! சத்தியத்தில் பற்றுவைத்தல்
மதங்களுக்குள் ஓர்மை, மனிதர்க்குள் தெய்வநிலை
புதுநோக்கு! புதுப்பாதை! பூமலர்ந்தாற் போல் மலரும்
மறுமலர்ச்சி! மக்கள் மக்களையே ஆளுகின்ற
அருளாட்சி என்ற அனைத்தும் பொருளாக்கி
மேகமென நின்றார்க்கு வேறென்ன உயிர்வேண்டும்
சாவு உடலுக்கே தத்துவத்திற் கில்லையன்றோ
காவல் தலைவன் கற்றுவந்த வித்தையிலே
சாவும்பொய் யானதற்குச் சரித்திரம் சாட்சி சொலும்

1965ல் 'படைவீரர் தினம்' கொண்டாடப்பட்டது. அதன் தொடர்பாக நடைபெற்ற கவியரங்கில் கவியரசர் பாடிய கவிதை 'ஓ தியாக தீபங்களே' என்பதாகும்.

அன்னையின் நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்தது
அறிந்ததும் தங்கடன் ஏற்று
தன்னையீன் றாளத் தாயையும் காதல்
தாரமும் ஓர்வழிநீத்து
முன்னையெந் நாட்டின் முனைந்துவந் துற்றார்
முகத்திரை, கிழிப்பனென் றார்த்து
இன்முகங் காட்டி எழுந்தனிர்க் கெங்கள்
இதயத்தின் உருகிய வாழ்த்து

எனத் தொடங்கிய கவியரசர்

ஒன்றுதான் தேசம்! ஒன்றுதான் சிந்தை!
ஒன்றுதான் நாம்சொலும் வார்த்தை!
ஒன்றுதான் நோக்கம்! ஒன்றுதான் பார்வை!
ஒன்றுதான் நாம்செலும் பாதை!
இன்றுநான் சொன்னேன்! இப்பெருந் தியாகம்
ஏற்பவர் யாவரும் மக்கள்
அன்றிஓர் நாட்டை அழைப்பவர் மாக்கள்
அன்னியக் கள்ளியின் பூக்கள்

என ஒருமைப்பாட்டு உணர்வைக் கொட்டிக் கவிதையை முடிக்கிறார்.

சுதந்திர நாட்டில் சுபிட்சங்கள் எப்போது பெருகும் என்பது குறித்துச் சொல்லவந்த கவியரசர் 'சுதந்திரம் என்ன' என்ற தலைப்பில் ஒரு கவிதை தீட்டினார்.

'பாராய் பைங்கிளி பாரத நாட்டின்
வீர சுதந்திரம் விளைத்த பயிர்களை'

எனத் தொடங்கிய அந்தக் கவிதையின் ஒரு பகுதி வருமாறு:

குற்றம் மக்கள் குணத்தில் அன்றி
அரசில் இல்லை! அனைவர் மனமும்
ஒருசே ராவிடில் உயர்வும் இல்லை!
வண்டி மாடுகள் வழியிற் பிரிந்தால்
வண்டி கிடக்கும் மாடுதான் நடக்கும்
வறுமை நாட்டில் வந்ததேன்! மக்கள்
உரிமைத் திமிரால் உழைக்கா ததுதான்.

1966ல் சென்னையில் இளைஞர் பேரணி ஒன்று நடைபெற்றது. அதிலே கலந்துகொண்ட வீரர்கள் பாடுவதற்காக ஒரு பாடலை எழுதினார் கவியரசர். ஒருமைப்பாட்டு உணர்வு ததும்பி வழிந்த அந்தக் கவிதையின் சில பகுதிகள்:

எழுகவே! எழுகவே! எழுகவே
எண்ணிறந்த வயது கொண்ட
இளைய பாரதம் நிமிர்ந்து.....(எழுகவே)

**புலவர் தமிழ்ப்பித்தன்**

... ...

உழவர் கைக்குத் துணைபுரிந்து
பயிர்வளர்க்க எழுகவே!
ஒன்று தேசம் ஒன்று என்று
உரிமை கொண்டு எழுகவே

பாகிஸ்தான் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது அதைக் கண்டித்துச் சென்னையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. அதில் கவியரசர் பாடிய கவிதை நமது இந்திய ராணுவ வீரர்களின் வெற்றிச் சரிதத்தை விரித்துரைப்பதாக அமைந்தது. ஒருமைப்பாட்டு உணர்வை ஒவ்வொரு மனிதரின் உள்ளத்திலும் விதைத்து வைத்தது. 'நாடு பகைவர்க்கோ' என்னும் தலைப்புள்ள அக்கவிதையின் சில பகுதிகள்:

தாகூர் வடித்துவைத்த தாய்வணக்கப் பாப்பாடி
லாகூரை நோக்கி நமதுபடை முன்னேற்றம்.
சிந்துவி லோர்சேனை; சியால்கோட்டில் மறுசேனை
சந்துவழிப் பகைவந்த ஜம்முவிலோர் பெரும் சேனை
வந்துவிளை யாடவந்த வஞ்சகரை நாள்முழுதும்

பந்துவிளை யாடுதல்போல் பாய்ந்து விளையாடு
தம்மா

சீனர்படையெடுப்பை அடித்தளமாக வைத்து உருவாக்கிய **இரத்தத் திலகம்** என்ற படத்தில் அற்புதமான கருத்தை வெளியிட்டார்.

போர்வீரன் ஒருவன் இமயப்பனிமலையின் அருகில் படுத்துக் கண்துயில்வதாகவும், அவனது கனவிலே பாரதத்தாய் தோன்றியதாகவும், அவள் கண்கலங்கி நின்றதாகவும், அதற்குக் காரணம் என்னஎன்று வீரன் கேட்பதாகவும், காரணத்தை பாரதத்தாய் எடுத்துச் சொல்வதாகவும், 'அஞ்சாதே தாயே! நாட்டைக் காப்பதற்கு ஓர் அன்புமகன் இருக்கிறார்' என்று சொல்லி அவர்தான் நேரு என்று சுட்டிக்காட்டுவதாகவும், அந்தச் சேதி கேட்டு பாரதத்தாய் அகமகிழ்ந்ததாகவும் தெரிவித்து அந்தப் போர்வீரன் பாடுவதாக எழுதியிருந்தார் கவியரசர். சுவையான அந்தப் பாடலின் சில பகுதிகள்:

பனிபடர்ந்த மலையின் மேலே
படுத்திருந்தேன் சிலையைப் போலே
கனிகொடுத்த மாலை போலே
கன்னிவந்தாள் கண்முன் னாலே

குனிந்துநின்ற முகத்தைப் பார்த்தேன்
குங்குமப்பூ நிறத்தைப் பார்த்தேன்.
கனிந்துநின்ற கன்னம் பார்த்தேன்
கண்ணீரின் சின்னம் பார்த்தேன்.

கலங்கினேன்-துடித்தேன்
அம்மா—அம்மம்மா....

... .... ....

அன்னை உரைத்த மொழி
அத்தனையும் கேட்டிருந்தேன்
பின்னர் மனதில்
பெருந்துணிவு மோதிவர

வீரமுண்டு தோள்களுண்டு
வெற்றிகொள்ளும் ஞானமுண்டு
சாரமிக்க தர்மம் உண்டு
தர்மம்மிக்க தலைவன் உண்டு

அன்பு நிறைந்தமகன், அருள் நிறைந்த கருணை மகன்
பண்பு நிறைந்த மகன்-பழநாட்டின் மூத்தமகன்
இருக்கின்றான் தாயே ஏங்காதே என்றுரைத்தேன்
அன்னை சிரித்தாள்
அடடாவோ அச்சிரிப்பில்
முன்னைத் தமிழ்மணமே
முளைத்தெழுந்து நின்றதம்மா.

நாட்டைக் காக்க வேண்டும் என்ற உணர்வை அனைவருக்கும் போதிக்கும் வகையில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த **நாடோடி** என்னும் திரைப்படத்தில் இரு குரலிசைப் பாடல் ஒன்றினை எழுதினார். அது வருமாறு:

ஆண்: நாடு-அதை நாடு-அதை
நாடா விட்டால் ஏது வீடு?

பெண்: நாடு-அதை நாடு-அதை
நாடா விட்டால் ஏது வீடு?

ஆண்: பாடும் பொழுதெல்லாம் அதையேபாடு
மானம் பெரிதென்று வாழும் பண்பாடு

பாலைவனம் என்றபோதும் நம்நாடு
பாறைமலைகூட நம் எல்லைக்கோடு

பெண்: வானும் குலமாதர் முகம் பார்த்ததில்லை
வஞ்ச நினைவெங்கள் மனம் பார்த்ததில்லை

ஆண்: வீரர்விழி தாழ்ந்து நிலம் பார்த்ததில்லை
வெற்றித் திருமாது நடைபோடும் எல்லை!

பசி என்று வருவோர்க்கு விருந்தாகுமாறும்
பகைவர்முகம் பார்த்துப் புலியாகச் சீறும்

நிலத்தில் உயிர்வைத்து உரிமை கொண்
டாடும்

எதிர்த்து வருவோரை-உரமாகப்போடும்

1947ல் இந்திய நாட்டிலிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தான் இந்தியாவுக்குப் பற்பல வகைகளில் தொல்லைகளைத்தொடர்ந்து தந்து வந்தது. 1963ல் இந்தியாவின்மீது படையெடுத்தது. பின்னர் சமாதானத்துக்கு வந்தது; தாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

அதன் பின்னர் 1971ல் கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த கிழக்கு வங்கத்தில் முஜிபூர் ரகுமான் எழுப்பிய புரட்சிக் குரலை எதிர்த்து பாகிஸ்தான் அவரைச் சிறையில் வைத்தது. லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஒருகோடிக்கு மேற்பட்ட கிழக்கு வங்க மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தனர். இந்திய அரசு மனிதாபிமான உணர்வுடன் அகதிகளுக்கு முகாம்கள் அமைத்துத்தந்து, உணவு, மருத்துவ உதவி ஆகியவற்றை அளித்து அவர்களுக்காகப் பலகோடி ரூபாய்களைச் செலவு செய்தது.



அந்தச் சூழ்நிலையில் வங்கதேச நிலைகுறித்தும் முஜிபுர் ரகுமான் குறித்தும் கவியரசர் கவிதை தீட்டினார். வங்க தேசமே என்ற தலைப்புள்ள அக்கவிதையின் ஒரு பகுதி:

வங்க தேசமே என்ன உல்விதியோ!
வாழ நினைத்தால் இதுதான் கதியோ.

சிங்கமெனத் துடித்தெழுந்தான் முஜிபுர் ரகுமான்
திமிர்கொண்ட ராணுவத்தை எதிர்த்து நின்றான்
வங்கமக்கள் அனைவருமே அவன்பால் நின்றார்
மன்னவனைப் பாரதம் தான் காக்க வேண்டும்.

வங்க மக்களுக்கு இந்தியா உதவி செய்வதைப் பார்த்து ஆத்திரம் அடைந்த பாகிஸ்தான் இந்தியாமீது போர்தொடுத்தது. இந்தியா எதிர்த்துப் போரிட்டது; வென்றது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலமும் அகதிகள் நிவாரணத்திற்காக நிதி அளித்தது. தமிழகம் 1972ல் 6 கோடி ரூபாய் நிதியை அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் அளித்துத் தனது கடமையை நிறைவேற்றியது.

வங்க தேசம் உருவாவதற்குக் காரணமாக இருந்த பிரதமர் இந்திராகாந்தியைக் கவியரசர் போற்றிப் புகழ்ந்தார். 'இந்தியா என்றால் இந்திராதான். இந்திரா என்றால் இந்தியாதான்' என்று சொன்னார். இந்தக் கருத்தைக் கவிதையிலே தீட்டினார். 'இந்தியா இந்திராவே' என்ற தலைப்புள்ள அந்தக் கவிதையின் தொடக்கம் இதுதான்.

இந்திய மலைகள் தோறும்
இந்திரா பேர்கேட்டாயா?
இந்திய நதிகள் எங்கும்
எதிரொலி கேட்கின் றாயா?
இந்தியக் கடல்கள் முற்றும்
இயங்கிடும் இசைகேட் டாயா?
இந்தியா இந்தி ராவே
இந்திரா இந்தி யாவே



கவிதையின் அடுத்த சில பகுதிகள் இதோ:

நல்லரச மைத்தான் மக்கள்
நலனெலாம் சமைத்தான்; அன்று
கொல்புலி அனையா ளாகி
கொடுத்தனள் வங்கம் வாழ!
வல்லரசு சென்றே இந்த
வையத்தில் பரத நாட்டை
நில்லென வைத்தாள் எங்கள்
நிகரிலா ஜவஹர் செல்வி

பலகோடிக் கால்கள் செல்லும்
பாதையும் ஒன்றே கண்டோம்
பலகோடிக் கண்கள் பார்க்கும்
பார்வையும் ஒன்றே ஆனோம்
விலைகோடி கொடுத்தோ மேனும்
வெற்றிமேல் வெற்றி கண்டோம்!
சிலைகோடி வைத்தாற் கூட
செல்விக்கு ஈடா காது

நமதொரு மைப்பா டாலே
நாட்டையே ஒன்றாய்க் காண்போம்.
இமயமே! குமரிக் காற்றே
இந்தியா இந்தி ராவே!

1973ல் வெளிவந்த **'ராஜபார்ட் ரங்கதுரை'** என்னும் படத்திற்கு எழுதிய பாடல்களில் ஒன்றில் ஒருமைப்பாட்டு உணர்வைப் பொழிந்திருக்கிறார் கவியரசர்.

'தம்பி என்று நம்பிஅவன் உன்னை வளர்த்தான்'' எனத் தொடங்கும் பாடலின் இறுதியில்

பலகோடி உள்ளங்கள் வாழ்கின்ற நாடு
பதினாறு மொழிபேசும் அழகான வீடு
இனச் சண்டை மொழிச் சண்டை கூடாது-இங்கு
எல்லோரும் ஒருதாயின் மக்களல்லவோ-நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னரல்லவோ.

எனக் குறிப்பிட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு இன்னும் நம்மிடையே வாழ்ந்துவரும் பெருமக்கள் பலரை நாம் பார்த்து வருகிறோம். அத்தகைய பெருமகன் ஒருவரைப் பாத்திரமாக்கி வெளிவந்த **'நாம் பிறந்த மண்'** என்னும் படத்தில் கவியரசர் எழுதிய பாடல் ஒன்று நாட்டுப் பற்றை வலியுறுத்த உதவுகிறது. மக்களில் பலர் சுதந்திரத்தின் பெருமையை அறியாதுள்ளனர் என வருந்தும் முதிய விடுதலைப்போர் தியாகி பாடுவதாக அமைக்கப்பெற்ற அந்தப் பாடல்:

நான்யார் அறு நான்யார்-அன்று
நாட்டில் இருந்த நாற்பது கோடியில் நான யார்?

வானில் பறக்கும் மணிக்கொடியோடு
அடிபட்டவன்-உயர்
வந்தே மாதரம் என்றத னாலே
உதைபட்டவன்
ஆண்டுகள் தோறும் அந்நியன் காலில்
மிதிபட்டவன்-இந்த
அனுபவம் வருமென அறியாமல்
சிறைபட்டவன்

விடுதலை என்னும் வேள்வித் தீயில்
கருகியவன்-உயர்
வீர சுதந்திரம் வந்தது கண்டு
உருகியவன்

இந்தக் கதாபாத்திரம் உருகிநின்றது போலவே, கவியரசர் கண்ணதாசனும் ஒருமைப்பாட்டு உணர்வில் உருகிநின்றார். இன்றும் நமது உள்ளத்தில் நீங்காது நிலைத்து நிற்கிறார்.

— முற்றும்

# போதை மருந்துகளை ஒழிக்கப் போர் தொடுப்பது அவசியம்

ந. இளங்கோ,

உயிரினங்களில் உயர்ந்தவன் மனிதன். மனிதன் பெறும் சிறப்புகள் பல. அறிவு நலத்தாலும் பொருள் வளத்தாலும் செல்வாக்கும் வந்து சேரும். ஆனால் அத்தனைச் செல்வாக்கும் செல்லாக் காசாகிவிடும் அவன் ஒழுக்கந் தவறி இழுக்குத் தேடிக்கொண்டால். மனிதனை ஒழுக்கந்தவறச் செய்வதில் பெரும் பங்கு வகிப்பவை போதைப் பொருட்களாகும்.

**போதை வெறியர் (*DRUG ADDICT*) என்றால் யார்?**

போதைப் பொருளையே உயிராகக் கொண்டு, அதை நாடியும் தேடியும் அலைந்து, அது இல்லாவிட்டால் இருக்கவே முடியாது என்ற அளவுக்குப் போதைப் பொருளையே சார்ந்து வாழ்கிற ஒருவரே போதை வெறியர் என உலகச் சுகாதார நிறுவனம் இலக்கணம் கூறுகிறது.

**போதை மருந்துண்ணுதல் என்றால் என்ன?**

இடைவிடாமல் தொடர்ந்தோ அல்லது இடைவெளி விட்டோ மருத்துவ வரன்முறைகளுக்கு மாறுபாடான வகையில் மருந்துப் பொருட்களை அளவுக்கு மீறி உட்கொள்ளுதல் என்பதே போதை மருந்துண்ணுதல் எனப்படும் என உலகச் சுகாதார நிறுவனத்தின் வல்லுநர்குழு 1969இல் வரையறுத்துக் கூறியுள்ளது.

**போதை மருந்துகளுக்கு இளைய சமுதாயம் அடிமைப்படுவது எப்படி?**

1. தேர்வுக் காலங்களில் 35 சதவிகித மாணவர்கள் இரவு நேரங்களில் விழித்திருப்பதற்கும், கவலைகளை மறப்பதற்கும் ஆம்ஃபிடெமின் மாத்திரைகளை விழுங்க ஆரம்பிக்கிறார்கள். இவர்களில் பலர் அடுத்த கட்டமாக கஞ்சா, சரஸ் ஆகிய போதைப் பொருட்களுக்கு அடிமையாகிவிடுகிறார்கள்.

போதை மருந்துக்கு அடிமையாகும் இளைஞர்களுக்கு வேறு பொழுதுபோக்கு எதுவுமே இருப்பதில்லை. நேரத்தை என்ன செய்வது என்று புரியாமல் தவிக்கும் இவர்கள் தவறான கூட்டத்தில் சேர்ந்து, பிறகு போதை மருந்துகளுக்கு அடிமையாகிறார்கள்.

2. குடும்பத்தில் பெற்றோரிடையே குழப்பம் ஏற்பட்டு பாசம் இல்லாத நிலையில், தங்களுக்கு உலகில் பிடிப்பே இல்லாதது போல் உணரும் இளைஞர்கள் கவலையை மறக்க உதவுகிறது என்ற எண்ணத்தில் போதைமருந்துகளுக்கு அடிமையாகிறார்கள். தற்காலிகமாக ஏற்படும் ஒரு மாற்றத்தை-வானத்தில் பறப்பதுபோன்ற நிலையை எதிர்பார்த்துப் பின் விளைவுகளைப் பற்றிக் கவலைகொள்ளாமல் உண்கின்றனர்.



3. ஒரு துறையில் தோல்வி ஏற்படும்போது அந்தத் தோல்வியைப் பற்றிக்கவலைப்படாமல் மற்றொரு துறையில் கவனம்செலுத்தி வெற்றி பெற முயல வேண்டும். அங்ஙனம் வாழ்வில் வெற்றிபெற முடியாதவர்களும் போதை மருந்துகளுக்குத் தங்களை அடிமையாக்கிக் கொள்கிறார்கள்.

4. பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ருத்ரன் அவர்கள் ஒரு புதுமையான விளக்கம் தருகிறார்:

''மனிதர்கள் குழந்தைப் பருவத்தில் பால்குடித்து வளருகின்றார்கள். படிப்படியாக உணவில் மாற்றம் ஏற்படுகிறது. ஆனால் குழந்தைப் பருவத்தில் நா உணர்ந்த சுவை, நிலைபெறுகிறது. தங்கள் நா தேடும் சுவையைக் கொடுப்பதற்காகப் பல் வேறு வழிகளை மனிதர்கள் நாடுகின்றனர். அதன் காரணமாகச் சிலர் அதிகம் சாப்பிடுகிறார்கள். வயிறு நிறைய வேண்டும் என்பதில்லை. ஏதேனும் சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் போதும் என்னும் நிலை. இவற்றாலெல்லாம் நிறைவு ஏற்படாதவாறு சிகரெட், மது, கஞ்சா, ஹீராயின் என்று போதை மருந்துகளை நாட ஆரம்பித்திருக்கிறார்கள்'' என்று தம்முடைய ஆய்வின் முடிவாக டாக்டர் ருத்ரன் அவர்கள் கூறுகிறார்.

**தீமை அறிந்தவர்களும் தீய்ந்து போகும் கொடுமை**

போதை மருந்துகளினால் ஏற்படும்பயங்கரப்பின் விளைவுகளைப் பற்றி நன்கு அறிந்த மருத்துவக் கல்லூரி மாணவர்களில் 35 சதவீதம் பேர் போதைப் பொருட்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். ''கடுமையான இதயவலி மற்றும் அறுவைச் சிகிச்சைகளின் போது தவிர்க்க முடியாமல் உபயோகப்படுத்தப்படும் 'பெத்தடின்' 'மார்பின்' ஆகிய மருந்துகள் பெரும்பாலும் மருத்துவக்கல்லூரி மாணவர்களால் பயன்படுத்தப்படுகின்றன என்பதை மறுக்க முடியவில்லை'' என்று கூறுகிறார்கள் மருத்துவப் பேராசிரியர்களாகப்பணியாற்றும் பல டாக்டர்கள்.

**சில போதை மருந்துகளும் அவற்றால் ஏற்படும்கொடிய விளைவுகளும்**

போதைப் பொருட்களில் 90 சதவிகித இடத்தை ஹீராயின் தான் பிடித்துக்கொண்டுள்ளது. போதைப் பிரச்சினையில் முதலிடம் வகிப்பது இதுதான்.

பொதுவான மரணப்பட்டியலை விட ஹீராயின் உண்போரின் மரண விகிதம் மூன்று மடங்கு அதிகமாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் ஏற்படுகிற மரணங்களில் ஆண்டுதோறும் 15 சதவீதம் மரணம் மதுவினால் ஏற்படுகிறது. ஆயிரத்துக்கு 16 பேர் ஹீராயின் வீரர்களாக உள்ளனர் என வேறொரு ஆய்வு தெரிவிக்கிறது.

ஹீராயின் என்ற போதைப் பொருள், வாசனை எதுவுமில்லாத தூய வெள்ளை நிறத் தூள். கசப்

பாக இருக்கும். அதைச் சர்க்கரையுடன் சேர்த்து வேறு சில கலவைகளையும் சேர்த்தால் அது நிறம் மாறி 'பிரவுன்' வண்ணமாகிறது. அதனால் அதற்குப் பிரௌன் சர்க்கரை (Brown Sugar) என்று பெயர் தரப்பட்டுள்ளது.

ஹீராயின் மற்ற போதைப் பொருட்களைப் போலவே வாய் வழி உட்கொள்ளலாம் அல்லது ஊசி மூலம் உட்செலுத்தலாம். அதைப் புகைக்கவும் முடியும். உடல் வேதனையாலோ மனவேதனையாலோ அவதியுறுவோரில் தாங்கும் சக்தி குறைந்தோர் தஞ்சம் புகுவது ஹீராயினிடம் தான். பெரும்பாலோர் நண்பர்கள் மூலம் இதனை அடைகிறார்கள். இளைஞர்கள் பலர் இதனைப் பயன்படுத்தும் பெரியோரைப் பின் தொடர்கிறார்கள். நகர்ப்புறங்களில் மதுவகைகளைப் பயன்படுத்தும் நடுத்தர வர்க்கக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள் ஹீராயின் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஹீராயினால் ஏற்படும் உடல்நலக்கேடுகள் சிக்கல்மிக்கவை. உயிருக்கே ஊறு விளைவிப்பவை. சிலர் இதன் வீரியம் குறையத்தக்க வகையில் கலப்பட அளவில் பயன்படுத்திக்கொண்டே வந்துவிட்டு, திடீரென ஒரு நாள் வீரியமிக்க கலப்படமற்ற ஹீராயினைப் பயன்படுத்திவிட்டால் அதற்கு முன்னர் தாங்கிப் பழகாத காரணத்தால், ஊசிமூலம் உட்சென்ற சில வினாடிகளிலேயே மரணமடைய நேர்கிறது.

### பெத்தடினும் எல்.எஸ்.டியும்

பெத்தடின் சாதாரணமாக மருத்துவர்களால் 50 முதல் 100 மில்லிகிராம்வரை ஊசிமூலம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இதை நான்கு மணிக்கு ஒரு முறை 1000 மி.கி. வரை உபயோகிப்பவர்களும் உண்டு. இதேபோல் மார்பின் 8 மி.கி. கொடுத்தாலே நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். இதையும் பெத்தடின் போலவே பலர் போதைக்காக மிகவும் அதிகமான அளவு ஏற்றிக் கொள்கிறார்கள்.

முதலில் தேர்வு சமயங்களில் இரவு நேரங்களில் விழித்திருப்பதற்காக ஆம்ஃபிடெமின் மாத்திரைகளில் ஆரம்பித்துப் பின்னர் படிப்படியாக காம்போஸ், கார்டினால், லார்காக்டில், பெத்தடின், மார்பின் என்று போதை அதிகமாகத் தரக்கூடிய மாத்திரைகளைச் சாப்பிட ஆரம்பிக்கிறார்கள். இது கடைசியில் எல்.எஸ்.டியில் கொண்டுபோய் விடுகிறது. இதற்குப் பிறகு இதிலிருந்து மீளுவது சிரமம்.

### போதை மருந்து அடிமைகள் அனுபவிக்கும் கொடுமைகள்

போதையாளர்களின் ஆயுட்காலம் மற்றவர்களின் ஆயுளை விடக் குறைவு. இதைப் பயன்படுத்தும் ஆண், பெண் இருபாலருக்கும் குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பு குறைகிறது. போதைப் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வாந்தி, குடிகாரர்களுக்கு ஏற்படும் நடுக்கம் போன்ற நோய்க்குறிகள் ஏற்படுகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் மனநிலைக் கோளாறுகள் மிகப் பல. அவர்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கது. போதையாளர் ஒருவர் தன்னுணர்வுடன் இருக்கும் நேரம் முழுவதும் அவரது எண்ணம் முழுவதும் ஹீராயினைச் சுற்றியே, அதை வாங்குவதற்குப் பணம் சேகரிப்பது பற்றியே வட்டமிடுகிறது. ஹீராயின் சாப்பிடாவிட்டால் உடலில் நடுக்கம் ஏற்படுமே என்ற அச்சத்தோடு,அதைத் தவிர்க்க வேண்டும் என்ற வேகத்தில் அதை வாங்குவதற்குப் பணம் தேடுவதில் முழு மூச்சாய் இறங்கிவிடுகிறார் ஹீராயின் வாங்க அவர் செய்கின்ற காரியங்கள் அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் சங்கடங்களை உருவாக்கி விடுகின்றன. தன்னை நேசிப்பவர்களிடமே திருடத் தொடங்கிவிடுகிறார். தன் மனைவியைக்கூட, பணயம் வைத்து விடக் கூடிய அளவுக்குப் போய்விடுகிறார். குடிப்பழக்கம் மன வளர்ச்சியைக் கெடுத்துக் குணநலனை அழித்து விடுகிறது.

போதைப் பொருளைப் பயன்படுத்தும் இளைஞர்கள் கல்வியை மறக்கிறார்கள்; வாழ்வில் வசந்தத்தை இழக்கிறார்கள்; எதிர்கால வாழ்வைச் சூன்யமாக்குகிறார்கள்; மரணத்தை நாடி ஓடுகிறார்கள்.

போதைப் பொருளின் மனத்தை மாற்றும் விளைவுகள் அதைப் பயன்படுத்துகிறவரின் ஆசைக் கனவுகளின் ஆர்வத்தின் அளவு, அவர்



உட்கொள்ளுகிறபோது இருக்கிற சூழ்நிலை, போதைப் பொருளின் தன்சக்தி ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது. அப்போதைப் பொருளின் விளைவு ஆளுக்குத் தகுந்தபடியும் மாறுபடுகிறது. ஏனென்றால் பொதுவாக வெளியில் தெரியாத ஒவ்வொருவருடைய தனி இயல்புகளையும் போதைப்பொருள் வெளிப்படுத்துகிறது.

போதைப் பொருள் உட்சென்றவுடன் ஒருவரது கட்டுப்பாட்டு உணர்வு குறைகிறது அல்லது மறைகிறது. அதை உட்கொள்பவர்களில் ஒருவர் கோபத்தை வெளிப்படுத்துகிறார். ஒருவர் கேளிக்கையில் ஈடுபடுகிறார். மற்றொருவர் குழப்பமடைகிறார். இப்படி ஆளுக்கு ஆள் போதைப் பொருளின் விளைவு வேறுபடுகிறது; விபரீதப்படுகிறது.

### சமுதாயத்தைச் சீரழிக்கின்றனர் போதைப் பொருள் அடிமைகள்!

போதை அடிமைகள் கட்டாயம் போதை தருவனவற்றை உட்கொண்டு தீர வேண்டும் என்ற நிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். போதைப்பொருளைப் பெறுவதற்காக எந்த வழியையும் கையாளுகிறார்கள். எப்படியாவது அதனை அடைய முயற்சி செய்கிறார்கள். அவர்களின் அறநெறி உணர்வு மங்கிவிடுவதால் தமது போதைப் பொருளைப் பெறுவதற்கு வழிமுறைகளைக் கையாளவும் அவர்கள் தயங்குவதில்லை.

தமது குடும்பத்தினரிடமே பலாத்காரத்தைக் கையாளுகிறார்கள். தோராம்ஜி என்ற குடிகாரர், தன் தாயையே 26 முறை கத்தியால் குத்திக் கொலை செய்திருக்கிறார். போதைப் பொருட்களை வாங்குவதற்காக, போதை அடிமைகள் தங்கள் வீட்டிலேயே திருடத் தொடங்குகிறார்கள்.

போதைப் பழக்கம் சமுதாயக் கேடுகளையும் விளைவிக்கிறது. குடும்பம் நிலை குலைகிறது; உறவுகள் முறிகின்றன. குடும்பத்துக்கு உரிய வகையில் உதவுவது இல்லை. பொறுப்பான கடமைகளை நிறைவேற்றுவது இல்லை.

போதையினால்தான் சாலையில் விபத்துக்கள்; தொழில் ஆலையிலும் விபத்துக்கள்; அத்துடன் சட்டரீதியான சங்கடங்கள் வேறு;

வேலையில் திறமை குறைகிறது; வேலைக்கு ஒழுங்காகச் செல்வதும் இல்லை. தொழிலில் கவனமில்லை; ஈடுபாடு இல்லை. சிந்தனையில் தளர்ச்சி; செயலில் தடுமாற்றம்

உள்ளம் சோர்வுறுகிறது; உடல் காய்கிறது.

**போதை மருந்துகளிடமிருந்து இளைஞர்களை மீட்க பெற்றோரும் சமுதாயமும் ஆற்ற வேண்டிய கடமை**

போதைப் பொருட்களால் ஏற்படுகிற பிரச்சினை ஏனோதானோ என்று அலட்சியப்படுத்தக் கூடிய வகையில் நம்மைவிட்டு ஒதுங்கிக் கிடக்கிற ஒன்று அல்ல. நம்மோடு அன்றாடப் பிரச்சினையாக ஒன்றிவிட்ட ஒன்றாகும்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பெற்றோரும் சமுதாயமும் செய்யத்தக்கது என்ன?

''வெளியில் சுற்றித்திரிந்து கெட்டுப் போனவர்கள் திரும்பி வந்து ஒண்டிக்கொள்வதனால் ஏற்படுகிற விபரீத விளைவுகளைத் தாங்கிக் கொள்கிற, சமாளித்துத் தீரவேண்டிய இடிதாங்கியாக இருப்பது குடும்பமே'' என்கிறார் ஆல்வின் டாப்ளர் என்ற அறிஞர்.

மாற்றங்களுக்கிடையேயெல்லாம் மாறாக ஒன்றாக மனிதனை ஈர்த்து நிற்பது குடும்பம் ஒன்றுதான். எனவே எந்தச் சூழ்நிலையிலும் மனிதனைத் தொடர்ந்து ஈர்த்து நிற்கிற குடும்பம் ஒன்றுதான், குடிப் பழக்கத்தையும் மற்ற போதை மருந்துப் பழக்கத்தையும் ஒழித்திட உதவத் தக்கவைகளில் முக்கியமான ஒன்றாகும்.

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே அம்மைபோன்ற நோய்களிலிருந்து காப்பாற்றத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. அதேபோல போதைப் பழக்கம் வராதபடி தடுப்பதற்கு எந்தவிதத் தடுப்பு ஊசியும் நம்மிடம் இல்லை. காலப் போக்கில் குழந்தைகளிடம் பெற்றோர் காட்டும் அன்பு, அவர்களுக்கு ஊட்டுகின்ற உணர்வுகள், ஊக்கம் ஆகியவற்றின் மூலந்தான் போதை மருந்துப்பழக்கத்திற்கு ஓர் எதிர்ப்புச் சக்தியை உருவாக்க முடியும்.

தம்முடைய குழந்தைகள் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற வேண்டும் என்று பெற்றோர் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் ஏதாவது ஒரு துறையில் சிறந்து நின்றாலும் அதனைப் பாராட்டி ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்த வேண்டும். மற்றவர்கள் தம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்களோ அப்படியே குழந்தைகள் வளர்கிறார்கள். திறமை மிக்கவன் என்று ஒரு சிறுவனைப் பற்றி மற்றவர்கள் நினைத்துப் பாராட்டினால் அவன் அப்படியே வளர்கிறான். உதவாக்கரை என்று மற்றவர்கள் நினைத்துப் புறக்கணித்தால் அவன் அப்படியே மாறுகிறான். தன் வேதனையை மறக்க, போதை மருந்துகளை நாடி விடுகிறான். எனவே எவரையும் புறக்கணித்தல் கூடாது.

இன்றைய சூழ்நிலையில் பிள்ளைகளுக்குச் செலவிடப்பெற்றோரிடம் பணம் இல்லை என்பதல்ல. பிள்ளைகளைக் கவனிக்கப் பெற்றோர்க்கு நேரமில்லை என்பதுதான். இயந்திரமாக இயங்கித் தமது தொழிலையும், வேலையையுமே கவனித்து வருகிற பெற்றோர், பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்குவதில்லை. பணத்தையும் பண்டங்களையுமே ஒதுக்குகிறார்கள். போதை மருந்துப் பழக்கம் வறுமையால் உருவாவதைவிடச் செல்வச் செழிப்பிலேயே அதிகம் உருவாகிறது. பிள்ளைகளைக் கவனிக்க நேரம் ஒதுக்கி அன்பு காட்டிப் பேணுவதற்குப் பதில் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய்விடுகிறார்கள்.

**பெற்றோரிடம் பழகும் வாய்ப்பற்ற குழந்தைகள் அன்புக்கும் உறவுக்கும், நட்புக்கும் வீட்டில் ஆள் இல்லாமல் வெளியாரிடம் செல்கிறார்கள். 14 வயது முதல் 16 வயது வரை உள்ள குழந்தைகள் சுற்றுச் சூழலுக்கு எளிதாகப் பலியாகிவிடும் இயல்பு கொண்டோராவர். பழகுவோரின் பழக்க வழக்கங்களுக்குப் பலியாகிவிடுகின்றனர்.**

சில குடும்பங்களின் பழக்க வழக்கங்கள் குழந்தைகளைப் பாதித்து விடுகின்றன. வரம்புமீறிய உரிமை வழங்கிவிடும் குடும்பத்துக் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டு விடுகின்றனர். சில குடும்பங்களில் பெற்றோர் குடிப்பதும், புகைப்பதுமாக இருந்தால் சிறுவயதிலேயே குழந்தைகளும் அப்பழக்கத்தை மேற்கொண்டுவிடுகின்றனர். அந்த வயதில் இருக்க வேண்டிய அச்ச உணர்வுகள், அடக்க உணர்வுகள் ஏதுமின்றி இப்பழக்கத்தினை மேற்கொண்டு விடுகின்றனர். எனவே இத் தீய பழக்கங்களை நீக்கப் பெற்றோர் உதவ வேண்டும்.

மூன்று முக்கிய வழிமுறைகளைப் பின்பற்றி நின்றால் முற்றிலும் விடுதலை பெறலாம்.

1. போதைப் பொருட்களைப் பற்றிச் சமுதாயம் முழுவதுமே நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். போதை மருந்துப் பழக்கத்தின் தன்மைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் இவற்றின் தன்மைகளைத் தெரிந்திருந்தால்தான், தம் குழந்தைகள் சோதனைக் கட்டத்தில் இதில் ஈடுபடும்போதே



கண்டுபிடித்துத் தடுத்து நிறுத்த முடியும். வேடிக்கைக்காகப் போதை மருந்துகளைத் தொடுகிற சிறுவர்கள் பின்னர் வெறியர்களாக மாறிவிடுவர். இதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துத் தடுக்க வேண்டும்.

2. போதைப் பொருட்களை இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் கொடுப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். போதைப் பொருட்களைக் கடத்தி வந்து விற்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்க மலேசிய நாட்டு அரசு சட்டம் செய்து வைத்துள்ளது. நம் இந்திய நாட்டிலும் போதைப் பொருட்களைக் கடத்துவோர், விற்போரைத் தடுப்பதற்கும் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். இதற்குச் சமுதாய நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

3. தம் குழந்தைகள் போதை மருந்துகளுக்கு அடிமைப்பட்டிருப்பது தெரிந்தால் மற்றவர்கள் இழிவாகக் கருதுவார்களே என்ற அச்சத்தால் பல பெற்றோர்கள் அதனை மறைக்க முயல்கிறார்கள். மாறாக இப்படிப்பட்ட குழந்தைகளை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு தடுப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை எல்லோரும் இணைந்து மேற்கொள்ளவேண்டும்.

போதையாளரைத் திருத்துவதில் குடும்பம், பள்ளி, சமுதாயம் அரசு என எல்லா அமைப்புகளும் ஈடுபட வேண்டும். நாடு கடுமையான சட்டங்களை இயற்ற வேண்டும்; அதை முறையாக நிறைவேற்ற வேண்டும்.

நாடும் மக்களும் ஒன்றுபட்டுப் போதைப் பொருட்களை ஒழித்திடுவோம்; போதையாளர்களைத் திருத்திடுவோம்; புதிய சமுதாயத்தை உருவாக்கிடுவோம்! ●



## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# வறட்சிக்கு இலக்காகும் பகுதியில் வளம் சேர்க்கும் பணிகள்

புதுக்கோட்டை மாவட்டம், வறட்சிப் பகுதிகளையும், மலைப் பாங்கான மேட்டுப்பகுதிகளையும் நிரம்பப்பெற்ற ஒரு மாவட்ட மாகும். இம்மாவட்டத்தில் நன் செய் நிலப்பகுதிகளின் செழிப்பு சிறுபகுதியில்தான் உள்ளது. பெரும் பாலான இடங்கள் புன்செய் நிலப் பகுதியாகும். வருண பகவான் மனது வைத்தால்தான் பசுமையும் செழிப்பும் பார்வையில்படும். இம்மாவட்டம் வற்சியின் கோரப் பிடியில் பல தடவைகள் சிக்கித் தவித்து இருக்கிறது.

வறட்சியால் பாதிப்புறும் மக்க ளின் வாட்டத்தைப் போக்க, மத்திய அரசு புதுக்கோட்டை மாவட் டத்தை வறட்சிப்பகுதியாக அறி வித்தது. மேம்பாட்டுத் திட்டங் களுக்கும், வறட்சியைப் போக்கும் பணிகளைச் செய்யவும் வேளாண் மைப் பொறியியல் துறையானது இம்மாவட்டத்தில் 1982-83-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இத் துறையின் மூலம் கீழ்க்கண்ட வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் புன்செய் நிலங் களில் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

(1) சமதளக் கூரை அமைத்தல்

(2) உழுவை இயந்திரம்கொண்டு உழவு செய்தல்

(3) பண்ணைக் காடுகள் அமைத் தல்

(4) தடுப்பணைகள் கட்டுதல்

(5) கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல்

(6) விவசாயத்துக்குச் சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

(7) முடிவுற்ற ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிப்பு செய்தல்

**குழாய்க் கிணறு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் புதுக் கோட்டை மாவட்டத்தில் புதுக் கோட்டை, கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம் ஆகிய ஒன்றி யங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சமு தாயக் குழாய்க் கிணறுகள் விவ சாயத்துக்காக அமைக்க அரசாங் கத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாக மானிய மாக நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தில் நிலத்தடி நீர் ஊற்று ஆய்வு நடத்தி குழாய்க் கிணறுகள் அமைக்க இடம் தேர்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப் பட்ட இடத்தில் நில உரிமையாள ரிடம் குழாய்க் கிணறு அமைக்க வும் மோட்டார் ரூம் கட்டவும், 5 சென்ட் நிலம் இனாமாக அரசுக்கு எழுதி வாங்கப்படுகிறது. குழாய்க் கிணறு அமைக்கும் இடம், அதிகப் படி நிலப்பரப்பு பயனடையும் வகையிலும், அதிக எண்ணிக்கையில் சிறு, குறு விவசாயிகள் பயனடை யும் வகையிலும் தேர்வு செய்யப் படுகிறது. குழாய்க் கிணறு அமைக் கும் பிரேரணை மாவட்ட் ஆட்சித் தலைவரிடம் ஒப்புதல் பெற்று, குழாய்க் கிணறு அமைக்கும் பணி துவக்கப்படுகிறது. குழாய்க் கிணற்றுப் பணி முடிந்ததும், பம்பு ரூம் கட்டி, மின் இணைப்பு பெற்று, நீர்மூழ்கி மோட்டார் பம்ப் அமைத்து, பயனடையும் நிலங்கள் வரையறை செய்யப்படுகின்றன. பின்னர் அதில் பயனடையும் உழவர்களைக் கொண்ட நீர்ப் பாசனச் சங்கம் அமைக்கப்பட்டு, மேற்படி குழாய்க் கிணறு நீர்ப் பாசனச் சங்கத்துக்கே உடமை யாக்கப்படுகிறது. சங்கத்தின் மூலம் அதன் உறுப்பினர்கள் விவசாயத் துக்குத் தண்ணீர் பெற்று, அதற் குரிய கட்டணத் தொகையை சங் கத்துக்குச் செலுத்துகிறார்கள்.

சங்க உறுப்பினர்களுக்கு தண்ணீர் முறையாகப் பாய்ச்சிட, சங்கத்தின் மூலம் ஒரு நீர்மூழ்கி இறைவை ஓட்டுநர் நியமிக்கப்படுகிறார் இவர் சங்க உறுப்பினர்களுக்கு முறை யாகத் தண்ணீர் பாய்ச்சி, வாடகைக் கட்டணம் வசூல் செய்து, சங்கத்தில்

செலுத்துகிறார்.

நீர்ப்பாசனச் சங்கச் செயலாளர் அந்தந்த மாதம் வசூலானபணத்தை ஆபரேட்டருக்கு ஊதியமாக ரூ. 10 சதம் தொகையைக் கொடுத்த பின், மீதிப்பணத்தை உதவிச் செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்ட அலுவலகத்தில் செலுத்துகின்றார். குழாய்க் கிணறுக்குண்டான மின் கட்டணம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் உதவிச் செயற்பொறியாளர் (வேளாண்மைப்பொறியியல் துறை) அலுவலகம் மூலமாகச் செய்யப்படுகின்றன. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1982-விருந்து 87 வரை இதுவரையிலும் இத்துறையின் மூலம் 52 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. 1987-88-ம் ஆண்டிற்கு 12 ஆழ்குழாய்க் கிணறுகள் அனுமதிக்கப்பட்டு பல்வேறு நிலையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1985-86-விருந்துதான் சங்கங்கள் அமைக்கப்பட்டு தண்ணீர் இறைவைப் பணி துவக்கப்பட்டு, தண்ணீருக்கு வாடகை வசூல் செய்ய ஆரம்பிக்கப்பட்டது. 1987-88 மார்ச் மாதம் முடிய தண்ணீர் வாடகைக் கட்டணம் வசூல் விபரம்:

| | ரூபாய் |
|---|---|
| தண்ணீர்க்கட்டணம் வாடகை வசூல் | 5,16,336.47 |
| மின் கட்டணம் மற்றும் பராமரிப்புச்செலவு | 1,95,210.00 |
| நிகர லாப இருப்பு | 3,21,126.47 |

இத்திட்டத்தின் மூலம் 1988 மார்ச் வரை கூடுதலாக 2,850 ஏக்கர் புஞ்சை நிலப்பரப்பு விவசாயத்துக்குக் கொண்டு வரப்பட்டு உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் ஏக்கம் தீர்க்கப்பட்டுள்ளது. குழாய்க் கிணறுகளிலிருந்து நாள் முழுவதும் தண்ணீர் சப்ளை இருப்பதால் சுமார் 5,092 சிறு, குறு உழவர் பெருமக்கள் பயனடைகிறார்கள். தங்களுடைய நிலங்களிலும் இத்தகைய நீர் ஊற்று உள்ளதா என்று வியந்துபோய் உள்ளனர்.

தற்பொழுது அப்பகுதிகளில் எங்கு நோக்கினும் பச்சைப்பசேல்என்னும் மரகதப் போர்வை போர்த்தினாற்போல் பசுமை, பார்க்கும் கண்களுக்கோ குளுமை. இந்தக் குழாய்க் கிணறு திட்டப்பணிகளை நேரடியாகப் பார்வையிட்ட மத்திய அரசு உயர்நிலை அதிகாரிகளும், தமிழக ஆளுநரின் ஆலோசகர், வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பலரும் அவை, நல்லமுறையில் இயங்குவதைப் பாராட்டியுள்ளார்கள்.

**புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிருஷ்ணபட்டியில் அமைக்கப்படும் ஆழ்குழாய்க்கிணறு.**



## மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

இத்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை, கறம்பக்குடி, கந்தர்வகோட்டை, திருவரங்குளம் ஆகிய ஒன்றியங்களின் பகுதிகளில் 1984-85-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவினைப் பயனடையும் விவசாயிகளிடமிருந்து 25 சதம் மானியமாகவும், 75 சதம் கடனாகவும் மேற்படி கடன் தொகை வட்டியுடன் 10 வருட தவணையில் வசூல் செய்யப்படுகின்றது. ஆனால் தடுப்பணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், ஆகிய பணிகள் முழுமையாக மானியமாக செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளகோவிலூர், கணபதிபுரம், மங்கனூர், சம்மட்டி விடுதி, மாங்கோட்டை, தொண்டமானூரணி, கருப்பட்டிபட்டி, களபம், கிழாத்தூர், வண்ணாரப்பட்டி, கல்லுக்காரன்பட்டி, ஆதிரான்விடுதி, வெள்ளாள்விடுதி, ஆயிப்பட்டி, வளங்கொண்டான்விடுதி, குழந்தை விநாயகர் கோட்டை, துவார், ஆத்தங்கரை விடுதி, பாச்சிக்கோட்டை ஆகிய பகுதிகளில் சமதளக்கரை அமைத்தல் பணிகள் 4290-17-1 எக்டர் பரப்பிலும், டிராக்டரைக் கொண்டு உழவுப் பணிகள் 2967-48-0 எக்டர் பரப்பிலும், பண்ணைக்காடுகள் அமைத்தல் பணிகள் 228-47-5 எக்டர் பரப்பிலும், கசிவு நீர்க்குட்டைகள் 6 இடங்களிலும், தடுப்பணைகள் 24 இடங்களிலும் செய்யப்பட்டுள்ளன. இலவசக் கன்றுகள் 2 லட்சம் வினியோகிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக இதுவரை செய்துள்ள செலவு ரூ. 33,96,237.05 ஆகும். இதில் கடனாக ரூபாய் 20,810,62.74, மானியமாக ரூபாய் ரூ. 13,16,174.00 வழங்கப்பட்டுள்ளது. இதனால் 2,468 உழவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

1988-89-ஆம் ஆண்டிற்காக, புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த புத்தாம்பூரிலும், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த கோமாபுரத்திலும், திருவரங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த தெட்சினாபுரத்திலும் மண்வளப் காப்புத் திட்டப்பணிகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்களால் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் வறட்சியின் கோரப்பிடியிலிருந்து மெல்ல, மெல்ல மீட்கப்பட்டு வருகிறார்கள். வருங்காலத்தில் புதுக்கோட்டையில் வறட்சிப்பகுதிகளே இல்லை எனும் அளவுக்கு, நிலத்தடி நீரைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் மகத்தானதொரு நிலையை அடைய அரசுத்துறையினர் ஆற்றிவரும் பணிகளில் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மைப்பொறியியல் துறையினரின் பங்குகுறிப்பிடத்தக்கது.

**ஆ. கோபாலன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)**
**புதுக்கோட்டை மாவட்டம்**



# காராளன் கிணறுகள்

**புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்தில் அமைந்திருக்கும் பழமை வாய்ந்த காராளன் கிணறுகள் இப்பொழுது ஆழப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளன. வறட்சியான பகுதியில் அமைந்துள்ள கிணறுகளில் எப்பொழுதும் நீர் ஊறிக்கொண்டே இருக்கிறது.**

புதுக்கோட்டை மாவட்டப் பகுதி சங்ககாலத்தில், பாண்டியர், சோழர், பின்னர், பல்லவர், முகமதியர் மற்றும் விஜயநகர மன்னர்களால் ஆளப்பட்டு, கடைசியாக 1640-ஆம் ஆண்டு தொண்டைமான் மன்னர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. தொண்டைமான் பரம்பரையில் 9 மன்னர்கள் புதுக்கோட்டையை சமஸ்தானமாகக் கொண்டு ஆண்டுவந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டப் பகுதி கி.பி. 1453 முதல் 1940-ஆம் ஆண்டுவரை 12 தடவைகள் வறட்சியினால் ஏற்பட்ட பஞ்சத்தால் வாட்டப்பட்டு வந்துள்ளது. மழையின்றி, குடிக்க நீர் இன்றி, மக்கள் கால்நடைகளுடன் குடும்பம், குடும்பமாக உயிர்வாழ, பிழைப்பு தேடி அலைந்த காட்சிகள் பல தடவைகள் நிகழ்ந்து இருக்கின்றன. மக்களின் துன்பங்களைப்பார்த்த தொண்டைமான் மன்னர்கள், மக்களை ஓரளவிற்காவது பஞ்சத்தின் கொடூரங்களில் இருந்து மீட்க வேண்டும் என்ற எண்ணத்தில், கிணறுகள், குளங்களை வெட்டியும், தூர் எடுத்தும் நிவாரணப்பணிகளைச் செய்தனர். இத்தகைய காலக் கட்டங்களில் வெட்டி, தூர் எடுத்து ஆழப்படுத்தப்பட்டவைகள்தான் புதுக்கோட்டை நகரிலேயே, குடிநீருக்காக அமைக்கப்பட்ட மிகப்பெரிய குளமான புதுக்குளமும், பல்லவன் குளமுமாகும்.

## காராளன் கிணறு

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை சமஸ்தானத்தில், குறிப்பாகத் தற்பொழுது உள்ள அன்னவாசல் ஒன்றியப்பகுதியில் காரர்ள வேளாளர்கள் எனும் மரபினர் அவர்களது விவசாயத்திற்காக கிணறுகள் தோண்டி நல்ல நீர் ஊற்றுக்களைப் பெற்று வற்றாத நிலையில் பயன்படுத்தி வந்தனர். இதைக் கேள்வியுற்ற தொண்டைமான் மன்னர்கள் அந்தக் காராள வேளாளர்களைக் சொண்டு வற்றாத நீர் ஊற்று உள்ள பகுதிகளைக் கண்டுபிடித்து, கிணறுகள் வெட்டி, மக்களின் வாட்டத்தைப் போக்கினர். இந்தக் கிணறுகளுக்குத்தான் காராளன் கிணறு என்று பெயர் ஏற்பட்டது.

நவீன கருவிகள் கொண்டும், பல்வேறு பட்ட அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளின் முன்னேறிய யுக்திகளைக் கையாண்டும் கிணறுகள் தோண்டப்படும் தற்கால முயற்சிகள்கூட சில சமயங்களில் தோல்வியை அடைகின்றன. ஆனால் மன்னர்கள் ஆண்ட அக்காலத்தில் இருந்த காராள வேளாளர்கள், மண்ணின் தன்மை மற்றும் ஊற்றின் தன்மையைக் கண்டறிந்து, வற்றாத நீர் ஊற்றுகளைக் கண்டுபிடித்து, கிணறுகள் அமைத்த அவர்களது புவியியல் அறிவையும் திறமையையும் எவ்வளவு போற்றினாலும் தகும். ஆனால், கால வேகத்தில் காராளன் கிணறுகள் இடிந்தும், தூர்ந்தும் போனதால், அவை பற்றிய விவரங்கள், மக்களின் மனதிலிருந்து மெல்ல மெல்ல மறைந்து போயின. பின்னர் வருவாய்த்துறை ஆவணங்களிலிருந்தும், அந்தந்தக் கிராமங்களில் வாழும் வயதான பெரியவர்களிடமிருந்தும் அவைகள் பற்றிய விவரம் அறிந்து கொண்டு அவர்கள் கூறியவாறு அக்கிணறுகள் இருந்த இடங்களைப் பார்க்கும்போது சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கிணறுகளில் கருங்கல்லிலேயே ஏற்றக்கால்கள் செய்து நீர்இறைக்கப்பட்டதை அறிகின்றோம்.

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் 1983-ஆம் ஆண்டு முதல்,

இந்த ஆண்டுவரை செயல்படுத்தப்பட்டு வந்த வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 12 காராளன்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகள் ஆழப்படுத்தப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும், அப்பகுதி மக்களின்குடிநீர்ப் பிரச்சினை மற்றும் விவசாய நீர்ப் பாசனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வூராட்சி ஒனறியத்தைச் சேர்ந்த மேலூர் ஊராட்சி, அண்ணா நகரில் நூறு ஆண்டுகள் பழமையானதும், முழுவதும் தூர்ந்தும், கிணறு இருந்ததற்கான அடையாளமே இல்லாதும் இருந்த காராளன் கிணறு தேர்வு செய்யப்பட்டு, ரூ. 41,665 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டும், ஆழப்படுத்தப்பட்டும், சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிநீருக்கும், பாசன வசதிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அம்மன்பேட்டை கிராமத்தில் ஒரு காராளன் கிணறு கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 40,946 மதிப்பீட்டிலும், மதியநல்லூர் கிராமத்தில் உள்ள கிணறு ரூ. 35,441 மதிப்பீட்டிலும், வடுகபட்டியில் உள்ள செவ்வக வடிவ காராளன் கிணறு கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 29,423 மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்பட்டு, தொடர்ச்சியாக 4 மணி நேரத்திற்கு அவைகள் தண்ணீர் வழங்குகின்றன.

வடுகப்பட்டி ஊராட்சியில் உள்ள காராளன் கிணறு ரூ. 29,423 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 8.5 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. புல்வயல் ஊராட்சி காந்துப்பட்டி கிராமத்தில் காராளன்கிணறு ரூ. 24,461 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 7.2 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர் விநியோகம் கிடைக்கிறது. கோதண்டராமபுரம் ஊராட்சியில் குறுக்கப்பட்டி காராளன் கிணறு ரூ. 29,887 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 10ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது.

சத்தியமங்கலம் ஊராட்சியில் உள்ள உடையாளிப்பட்டி கிராமத்தில் உள்ள காராளன் கிணறு ரூபாய் 35,774 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 5.25 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதி கிடைத்துள்ளது. வெள்ளனூர் கிராமத்தில் உள்ள காராளன் கிணறு ரூ. 32,092 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு தற்பொழுது 4.50 ஏக்கர் நிலப்பரப்பு பாசனம் பெறுகிறது. குடிநீரும் பொதுமக்களுக்குக் கிடைக்கிறது. விளத்துப்பட்டி ஊராட்சியில் உள்ள ஊரப்பட்டி கிராமத்தில் ரூ. 12,613 மதிப்பீட்டில் காராளன் கிணறு புதுப்பிக்கப்பட்டு 4.50 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசனம் கிடைக்கிறது.

பூங்குடி கிராமத்தில் உள்ள காராளன் கிணறு ரூ. 35,000 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 6 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன நீரும், குடிநீரும் வழங்குகிறது. அன்னவாசல் நகரப்பகுதியில் ஏழு ஏற்றக்கேணி என்ற காராளன் கிணறு ரூ.60,000 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 25 ஏக்கர் பாசனம் பெறுகிறது. இக்கிணற்றில் உள்ள வற்றாத நீர் ஊற்றால் ஏழு ஏற்றங்கள் போட்டு நீர் இறைத்தும் வற்றாத ஊற்று இருந்ததால், இதற்கு ஏழு ஏற்றக்கேணி என்று காரணப் பெயர் ஏற்பட்டது. இது 17 மீட்டர் அகலம் உள்ளது. கீழக்குறிச்சி ஊராட்சிப் பகுதியில் பிராம்பட்டி கிராமத்தில் உள்ள காராளன் கிணறு ரூ.30,000 மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு 4 ஏக்கர் நிலப்பரப்புக்கு பாசன வசதி கிடைத்துள்ளது.

காராளன் கிணறுகள் அனைத்துமே சுமார் 10 மீட்டர் ஆழம் உடையவை ஆகும். அனைத்துக் காராளன் கிணறுகளும் தொடர்ந்தாற்போல் 4 மணி நேரத்துக்கு மோட்டார் பம்ப் செட் மூலம் தண்ணீர்வழங்குகின்றன.இத்தகைய வற்றாத நீர் ஊற்றுப் பகுதிகளைப் பார்த்து, தற்கால அறிவியலாரும் வியந்து போற்றுகிறார்கள். புதுக்கோட்டை, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியப்பகுதி மக்கள், காராளன் கிணறு மூலம் பெரியகுறையான குடிநீர்ப்பிரச்சினையைத்தீர்த்ததோடு அல்லாமல் விளைநிலத்திற்கும் தண்ணீர் வசதி செய்த புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்களையும், இக்கிணறுகளைக் கண்டுபிடித்து அமைக்கக் காரணமான காராள வேளாளர்களையும், இவைகளைப் புதுப்பித்துக் கொடுத்து நல்ல முறையில் இயங்கச் செய்த தமிழக அரசையும் நன்றியறிதலோடு பாராட்டுகிறார்கள். ●


# காலணித் தயாரிப்பு



பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் கல்லல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 50 ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்களில் உள்ள படித்த பெண்களுக்குக் காலணி தயாரிக்கும் தொழிலில் இரண்டு மாதம் பயிற்சி தரப்பட்டது. பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ.200 ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.

படித்த பெண்கள் வேலை வாய்ப்பு இன்றி கிராமங்களில் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். தமிழக அரசின் இலவசக் காலணி வழங்கும் திட்டம் கடந்த ஆண்டு அறிமுகமானதை ஒட்டி, ஆதி திராவிடப் பெண்களுக்குக் காலணி தயாரிப்பதில் பயிற்சி கொடுக்கும் திட்டம் சமூக நலத் துறையினரால் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கு வேண்டிய நிதி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மழையையே நம்பி இருக்கும் விவசாயத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இன்றி வருமானம் இல்லாமல் அவதியுற்றுக் கொண்டிருந்தனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப் புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு முறையில் காலணி தயரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சி பெற்றதனால் ஒரு நாளைக்கு ரூபாய் 15 கூலி பெறுகின்றனர். இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 50 குடும்பங்களில் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இக் குடும்பங்கள் நல்ல வருமானம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றன.





# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி
உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான
சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை
வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# கண்டனூர்-புதுவயல் குடிநீர்த் திட்டங்கள்

கண்டனூர் பேரூராட்சியின் மக்கட்தொகை 1981-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 6128 ஆகும். இப்பேரூராட்சியின் மக்கட்தொகை 1996-ஆம் ஆண்டில் 9500 எனவும் 2011-ஆம் ஆண்டில் 12,000எனவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மக்கட்தொகைக்கு 1996 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 6.80 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் தேவைப்படும் எனவும், 2011-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 8.54 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் தேவைப்படும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

கண்டனூர் பகுதிக்குத் தேவைப்படும் குடிநீரை 200 மி.மீ. விட்டமும், 84 மீட்டர் ஆழமும் கொண்ட ஆழ்துளைக் கிணற்றிலிருந்துபெற்று, 17.50 குதிரைத்திறன் கொண்ட நீர் மூழ்கி மின்விசை நீரேற்றியைக் கொண்டு, 500 மீட்டர் நீளத்திற்கு 150 மி.மீ. விட்டமுள்ள சிமெண்டு குழாய் மூலம் கண்டனூரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 3.0 இலட்சம் லிட்டர்கள் கொள் அளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றப்படும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து 14.50 கி.மீ. நீளம் கொண்ட பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் 17 பொதுக்குழாய்கள் அமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ள கண்டனூர் குடிநீர்த்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 23.25 இலட்சங்களாகும். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 19-3-1985 நாளது ஆணை எண். 177-இல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டுத் தொகையில்75 சதத்தை பேரூராட்சிக்கு மானியமாக தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. மீதி 25 சதம் மட்டுமே பேரூராட்சி கடனாக ஏற்றுத்திருப்பிச் செலுத்த வேண்டும்.

## புதுவயல் குடிநீர்த் திட்டம்

புதுவயல் பேரூராட்சியின் மக்கட்தொகை 1981-ஆம்ஆண்டின் கணக்கெடுப்பின்படி 6304 ஆகும். இப்பேரூராட்சியின் மக்கட்தொகை 1966-ஆம் ஆண்டில் 6600 எனவும், 2011-ஆம் ஆண்டில் 11,000எனவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம்மக்கட்தொகைக்கு 1996 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 7.33 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் தேவைப்படும் எனவும், 2011-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 10 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் தேவைப்படும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

புதுவயல் பகுதிக்குத் தேவைப்படும் குடிநீரை 200 மி.மீ. விட்டமும்,முறையே 116 மீ. மற்றும் 114 மீ. ஆழமும் கொண்ட இரண்டு ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து பெற்று, ஒவ்வொரு கிணற்றிலும் 7.5 குதிரைத்திறன் கொண்ட நீர் மூழ்கி மின்விசை நீரேற்றியைக் கொண்டு,600 மீ. நீளத்திற்கு 110 மி.மீ. விட்டமுள்ள பி.வி.சி குழாய் மூலம் புதுவயலில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள3.50 இலட்சம்லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிற்கு நீரேற்றப்படும். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து 16.80 கி.மீ. நீளம் கொண்ட பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் 15 பொதுக்குழாய்கள் அமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளபுதுவயல்குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ. 26.83 இலட்சங்களாகும். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 19-3-1985 நாளது ஆணை எண். 177-இல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 75- சதத்தைப் பேரூராட்சிக்கு மானியமாக தமிழக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. மீதி 25 சதம் மட்டுமே பேரூராட்சி கடனாக ஏற்று திருப்பிச் செலுத்த வேண்டும். இக்குடிநீர்த் திட்டங்களை மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் 29-5-88 அன்று திறந்து வைத்தார்.

**எம். அண்ணாமலை,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.**

# கொசுத் தொல்லையைப் போக்க நவீன இயந்திரம்!

பருவ மழைக் காலம் நெருங்கி வருவதால் மாநகராட்சி, நகரத்தில் கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்த ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்த சென்னை மாநகராட்சி ரூ. 1.65 இலட்சம் செலவில் லீக்கோ தெர்மல் ஃபாகிங் இயந்திரம் (வெப்பப் புகை போடும்) ஒன்றை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

இதை இயக்கிப் பயன்படுத்திப் பராமரிக்க வல்ல தொழில் நுட்பத் திறமையை மாநகராட்சிப் பணியாளர்கள் பயிற்சி மூலம் பெற்றுள்ளார்கள். இந்த இயந்திரம் எரிபொருள்எண்ணெயுடன்கொசுக் கொல்லி மருந்துப் புகையை அடர்த்தியாக வெளியே கக்கும். இப்புகை மூடுபனிபோல வானில் படர்ந்து, காற்றுள்ள திசையில் விரைவாக நகர்ந்து கொசுக்களைக் கொல்லவல்லது.

இப்புகை கொசுக்களைக் கொல்லுமே ஒழிய, மனிதர்களுக்கோ, விலங்குகளுக்கோ வளர்ப்புப் பிராணிகளுக்கோ தீங்கெதுவும் செய்யாது. எனினும் புகை போடும்பொழுது பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் உள்ள உணவுப் பண்டங்களை மூடி வைத்தல் நலம். ஒரு மணி நேரம் இந்த இயந்திரத்தை இயக்க ரூ. 800 செலவாகிறது.



# சான்றாக விளங்கும் சாதனைகள்

சமூக நலக்காடுகள் வளர்ப்புத்திட்டத்தின் கீழ்-பசும் பொன் முத்துராமலிங்கம் மாவடடம்,கல்லல வட்டாரம், கல்லல் ஊராட்சியைச் சேர்ந்த நடுவிக்குளம் கண்மாயில் சுமார் 13 ஏக்கர் நிலத்தில் கருவேல் கன்றுகள் 1985-86இல் நடப்பட்டுள்ளன. மேற்படி மரங்களை 13 ஆதி திராவிட நலிந்த குடும்பங்களுக்குக் குடும்பத்திற்கு 326 மரக் கன்றுகள் வீதம் பிரித்துக் கொடுத்து,மர உரிமங் களும் ( Iree Permit ) காரைக்குடி வட்டாட்சியர் அவர்களிடமிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உரிமம் பெற்ற 13 குடும்பத்தினரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களே. விவசாயக் கூலியையே நம்பி இருப்பவர்கள். இவர்களில் இலங்கையில் இருந்து வந்தவர்களும் உள்ளனர். அடிக்கடி வறட்சிக்கு இலக் காகும் இம்மாவட்டத்தில் விவசாய வேலைகளும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நடைபெறுவதில்லை. அதனால் குடும்பங்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் போதிய வருமானம் இன்றி அல்லல் உற்றன

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் மரங்கள் நட்டுப்பிரித்துக் கொடுத்ததனால்,இக் குடும்பத் தில் உள்ளவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் இக் குடும்பங்கள் மரம் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் அதிக உற்சாகம் காட்டிச் செயல்படுவதன் வாயிலாக, 5, 6 ஆண்டுகளில் மரங்களை வெட்டி விற்பனை செய் வதன் மூலம் நல்ல வருமானம் (ரூ. 2000 முதல் 25,000 வரை) பெற்று வறுமையை விரட்டக் கூடிய நிலையை அடைவர்கள் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.



## ஒரு நிரந்தரத் தொழில் வாய்ப்பு

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தட்டச்சுப் பயிற்சி நிலையம் அமைக்க செல்வி பா. ஜெயலட்சுமிக்கு இருமுறை கடன் வழங்கப்பட்டது.

இதற்கு முன்பு குடும்பத் தலைவனை இழந்த இக் குடும்பம் புயலில் சிக்கிய பட்கு போல் தத்தளித்துக் கொண்டிருந்தது. இந்நிலையில் மேற்படி குடும்பத்தில் தட்டச்சுப் பயிற்சி பெற்ற செல்வி பா.ஜெயலட்சுமி என்பவர் கல்லல் ஊர் நல அலுவலரை அணுகி வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று குடும்ப வருமானத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினார். அவர் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு செம்பனூர் பாண்டி யன் கிராம வங்கி மூலம் தட்டச்சு இயநதிரம் வாங்கு வதற்கு மானியத்துடன் கூடிய கடன் வசதி 1984-85இல் செய்துகொடுக்கப்பட்டது. மேற்படி கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தியதும் இரண்டாவது தடவையாக ரூபாய் 7,000,1987-88இல் வழங்கப்பட்டது. கடன் வசதி யினால் இரண்டு தட்டச்சுப் பொறிகள் வாங்கிவைத்துக் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் இதர பள்ளிகள் அலுவலகங்களுக்கு அறிக்கைகள் தயார் செய்வதன் மூலம் ஒரு நிரந்தர வேலை வாய்ப்பும் போதிய வருமானமும் (ரூபாய் 15 முதல் 20 வரை) கிடைத்து குடும்பம் நிம்மதியாக நடப்பதற்கும்வழிவகை கிட்டியது.



## சாண எரிவாயு

கல்லல் ஒன்றியத்தைச் சேர்ந்த வேப்பங்குளம் கிராமத்தில் விவசாயி வேல்சாமி என்பவரின் மனைவி வள்ளி; அவரது குடும்பத்தில் விறகு வைத்து அடுப்பு எரித்துச் சமையல் செய்து வந்தனர். அவர்களுக்கு ஊர் நல அலுவலர் சாண எரிவாயுக் கலன் அமைப்பதால் ஏற் படும் நன்மைகளையும் பலன்களையும் எடுத்து விளக்கி யதும், இக்கலனை அமைக்க ஒப்புக்கொண்டார்.

கடந்த ஆண்டு 1987-1988ஆம் ஆண்டு இவருக்கு அரண்மனை சிறுவயல் பாண்டியன் கிராம வங்கி மூலம் 6 க.மீ. கொள்ளளவு உள்ள கலன் அமைக்க கடன் வசதி ரூபாய் 10,000- மானியம் ரூபாய் 2,860 பெற்று கலன் அமைத்துள்ளார். இதனால் வீணா கும் சாண எரிவாயுவைச் சமையலுக்குப் பயன்படுத்த வும், மாதம் ரூபாய் 150 முதல் 250 வரை விறகுக்கு ஆகும் செலவு தொகை மீதப்படுத்தப்பட்டும் நன்மை அடைந்துள்ளார்கள். சாணக் கரைசலில் இருந்து வெளி வரும் ஆவி நீக்கிய சாணம் நிலத்திற்கு நல்ல எருவாகப் பயன்படுத்தப்பட்டு நன்மை உண்டாகியுள்ளது. பாத்தி ரங்களிலும் வீட்டுச் சுவர்களிலும் கரி பிடிக்காமல் சுத்த மாகவும், சுகாதாரமாகவும் இருக்கின்றது என திருமதி. வள்ளி அம்மாள் பெருமையும் பூரிப்பும் அடைகிறார். இவர்களின் கலனைப் பார்த்து இவ்வூரில் மேலும் 8 கலன்கள் அமைத்துள்ளார்கள். ●

# நூல் நயம்

### இல்லமும் உள்ளமும்

ஆசிரியர்: டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி
விற்பனை உரிமை: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-108
விலை: ரூ.10 பக்கம்: 96

இலக்கியக் காட்சிகளை எத்துணை முறை எடுத்துச்சென்னாலும் கேட்போருக்கோ படிப்போருக்கோ அலுப்புத் தட்டுவது கிடையாது. இந்த உண்மையை இந்நூல் எடுத்துரைக்கிறது.

நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, பரிபாடல், கலித்தொகை ஆகிய நூல்களின் வரிகள் சிலவற்றை எடுத்துக்காட்டி, விரிவான விளக்கங்களை நூலாசிரியர் சுவையாக எழுதியுள்ளார். பல்வேறு இலக்கியங்களையும் மேற்கோளாகக் காட்டியிருப்பது - நூலாசிரியரின் புலமையை எடுத்துக் காட்டுகிறது. ஆற்றொழுக்கான நடை, நூலுக்குப் பெருமை சேர்க்கிறது.

### உள்ளங்கையில் உடல் நலம்

ஆசிரியர்: வி. எஸ். இராமநாராயணன்
வெளியீடு: 15, அனுமந்த ராயன் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று பாடினார் நாமக்கல் கவிஞர். அதுபோல, 'ஊசியின்றி மாத்திரையின்றி சிகிச்சையொன்று இருக்குது' என்று சொல்லும் முறை ஒன்று உருவாகியிருக்கிறது. விரல்களில் அழுத்தம் கொடுத்தே உடலில் ஏற்படும்நோய்களை நீக்க முடியும் என்பதை நூலாசிரியர் விவரித்திருக்கிறார். உள்ளங்கையை 15 பிரிவுகளாகப் பிரித்து எந்தெந்த நோய்க்கு எந்தெந்த விரலின் எந்தெந்தப் பகுதியை அழுத்த வேண்டும் என்ற விவரத்தைத் தெரிவித்துள்ளார். உணவு முறையும், எடை, வயது ஆகிய விவரங்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. விரல்களை அழுத்தும் முறை புகைப்படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. பயனுள்ள நூல் இது.

எஸ்.எஸ். சுந்தரம்

### எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம்

எழுதியவர்: நியூஸ் ஆனந்தன்
வெளியீடு: தனம்லெட்சுமிபதிப்பகம், 2-40, ஹால்ஸ்ரோடு, புது காலனி, கீழ்ப்பாக்கம், சென்னை-10.
விலை: ரூ.40 பக்கம்: 276

கடும் உழைப்பு-வெற்றிச் சரிதம் ஆகியவற்றின் வடிவமாகத் திகழ்ந்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர், திரைப்பட நடிகராக வாழ்க்கையைத் தொடங்கியதிலிருந்து பல லட்சக்கணக்கான மக்களின் நெஞ்சங்களில் இடம்பிடித்து, அரசியல் களத்தில் இறங்கி, தமிழக முதல்வராக அரசோச்சி, எதிர்பாராமல் மறைவெய்தி, ரசிகர்கள், ஆதரவாளர்கள் அனைவரின் கண்களில் கண்ணீர்க் குளத்தை உருவாக்கிய நிகழ்ச்சி வரை, சுருக்கமாக அதே நேரத்தில் தெளிவாக எழுதியுள்ளார் நூலாசிரியர்.

எம்.ஜி.ஆரைக் குறித்துத் தலைவர்களின் புகழுரைகள்-எம்.ஜி.ஆர். ஆற்றிய கடைசி உரை, அவரது கடைசி யாத்திரை ஆகியவையும் நூலில் இடம் பெற்றுள்ளன. எம்.ஜி.ஆர். நடித்த திரைப்படங்களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

பக்கத்துக்குப்பக்கம் எம்.ஜி.ஆரின் உருவப்படம் வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியரின் கடும் உழைப்புக்கு இந்நூல் சான்றாக விளங்குகிறது. முகப்புப்படம் அருமை; அற்புதம்.

### விந்தன் நாவல்கள் (ஓர் ஆய்வு)

ஆசிரியர் : மு. பரமசிவம்
வெளியீடு: உமா பிரசுரம், ஏ.பி. 362. 40வதுதெரு, 8-வது பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-78.
விலை ரூ. 16. பக் : 212

தமிழ் நாவல் களத்தில் விந்தனுக்குத் தனி இடம் உண்டு.

1948 முதல் 1975 வரை அவர் படைத்தளித்த 'கண் திறக்குமா', 'பாலும் பாவையும்', 'அன்பு அலறுகிறது', 'மனிதன் மாறவில்லை', 'காதலும் கல்யாணமும்,' 'சுயம்வரம்' என்ற ஆறு நாவல்களைக் குறித்துத் திறனாய்வு செய்துள்ளார் நூலாசிரியர்.

'விந்தன் கருத்துப் பரப்பு எழுத்தாளர் ஆவார்' என்று பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் சொல்லியுள்ள கருத்தைத் தமது செம்மையான திறனாய்வு முறையின் வாயிலாக நிறுவியுள்ளார் நூலாசிரியர்.

ஏழை எளிய மக்களின் துன்ப துயரத்தைக் காட்சிகளாக்கி, பிறர் மனதில் இரக்க உணர்வை உருவாக்குவதில் விந்தன் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை திறனாய்வு எடுத்துக் காட்டுகிறது. பல்வேறு அகச்சான்றுகளையும் புறச்சான்றுகளையும் மேற்கோள்களையும் வாரி இறைத்து, தமது ஆய்வு சரியானதுதான் என்பதை நிலைநாட்டுகிறார் நூலாசிரியர். இனிய சரளமான நடை - வாதத்திறமை இரண்டும் நூலுக்கு அணி சேர்க்கின்றன. ஆய்வுக்களத்தில் வெற்றி பெற்றுள்ளார் நூலாசிரியர் நூலின் ஒவ்வொரு பக்கமும் என்பதை உணர்த்திக்கொண்டே இருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

### மதுரையிலிருந்து மாஸ்கோ வரை

ஆசிரியர்: ப.நெடுமாறன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-98.
விலை: ரூ.6 பக்கம்: 104

இது பயணக் கட்டுரை நூல். சோவியத் நாட்டில் தான் கண்ட கேட்ட தகவல்களைச் சுவைபடக் கூறுகிறார் நூலாசிரியர்.

ரஷ்யப் புரட்சி பற்றியும், சோவியத் நாட்டில் தமிழாராய்ச்சி பற்றியும் விளக்கமாகக் கூறியுள்ளார் ஆசிரியர். தாகூர், பாரதியார் மீது சோவியத் மக்கள் வைத்துள்ள மதிப்பையும், அங்கு நடைபெறும் தமிழாராய்ச்சி பற்றியும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சோவியத் மக்களின் விருந்தோம்பல், பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலான தகவல்கள் படிக்கச் சுவையானவை. பெண்கள் முன்னேற்றம், மருத்துவம், நூலகங்கள் (3,30,00 நூலகங்கள்-அவற்றை 20 கோடி மக்கள் பயன்படுத்துகிறார்கள்) பற்றிய செய்திகள் எல்லாம் மனத்தை ஈர்க்கத் தக்கனவாகும். சோவியத் நாட்டைப்பற்றித்தெரிந்துகொள்ள உதவும் நூல்.

—பி. வி. கிரி

வெற்றிச் சரிதம்

# சான்றாக விளங்கும் சாதனைகள் இதோ....

**நல்லம்பள்ளி வட்டாரம், பாகலஅள்ளி கிராமத்தில்**

தர்மபுரியிலிருந்து சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நல்லம்பள்ளியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, பாகலஅள்ளி கிராமம்.

**பாகலஅள்ளி கிராமத்தில் ஆதிதிராவிடர்க்கு வீடுகள்**

பாகலஅள்ளி கிராமத்தின் தென்புறத்தில் தென்னை ஓலைவேய்ந்த 110 குடிசைகள் வசதிகள் ஏதும் இன்றி நெருக்கமாக உள்ளன. ஆதிதிராவிடர் குடும்பத்தினர் புறாக்கூண்டுகள் போன்ற இந்தக் குடிசைகளில் அடைந்து காலம் தள்ளி வந்தனர். இரண்டு கிணறுகள் இருந்தும் தண்ணீர் இல்லை. தெருவிளக்குகள் இல்லை, சாக்கடை வசதி இல்லை, சுகாதாரச் சூழல் இல்லை; இப்படி பல சிரமங்களுடன் காலம்தள்ளி வந்த இந்த மக்களை நல்ல வகையில் குடியமர்த்த வேண்டும் என்பதற்காக, நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதியில் 5 ஏக்கர் பரப்புள்ள தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து, 3 சென்ட் வீதம் 110 குடும்பத்தினருக்கும் வீட்டுமனைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பாதைக்காகவும், பொதுக் காரியங்களுக்காகவும், போதிய நிலம் ஒதுக்கப்பட்டது. நிலம் கிடைத்ததும், அதில் வீடுகட்ட இயலா நிலை இருந்தது. 11 குடும்பத்தினர் கூட்டுறவுச் சங்கம் மூலம் கடன் பெற்று தனியே வீடுகள் கட்டத் துவங்கினர். அவைகளும் முழுமையடையாது, சுவர்ப்பூச்சு இன்றியும், தரைப்பூச்சு இன்றியும் இருந்தன. இந்நிலையில் 1987-88ம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் இந்த கிராமம் வீடுகள் கட்ட, தேர்வு செய்யப்பட்டு, 88 மார்ச்சு மாதத்தில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

இங்கு முதல் கட்டமாக 34 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டுடன் இணைந்தவாறு கழிப்பிடமும் கட்டப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் புகையில்லாத அடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. புதியதாக 6 தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிற்கும் 'ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின்சார விளக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. வீடுகளின் மத்தியில் அமைந்துள்ள கிணற்றின் அருகில் குடிநீர்த்தொட்டி ஒன்று கட்டி, மின்இணைப்பு பெற்று குடிநீர் வினியோகிக்கப்படுகிறது. குடிநீர் வழங்கும் இந்தக் கிணறு கோடையிலும் வற்றாத ஊற்று உள்ளதாக அமைந்துள்ளது. நிலம் மட்ட நீர்த்தேக்கத்தின் எதிரே பாதையில் மறுபுறத்தில் சமுதாயக்கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத்திட்டத்தில் கட்டப்பட்ட 34 வீடுகளையும், நிலமட்ட நீர்த்தேக்கத் தொட்டியையும், சமுதாயக் கூடத்தையும் ஆளுநரின் ஆலோசகர் திரு ஆ.பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் 25.4.88 அன்று திறந்துவைத்தார். ஊராட்சியினால் வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியை சமுதாயக்கூடத்தில் இயக்கி வைத்தார். ஆறு தெரு விளக்குகளையும் ஏற்றி வைத்தார்.

கடந்த 20.6.88அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி அவர்கள் இக்குடியிருப்புகளைப் பார்வையிட்டதோடு, ஆதிதிராவிடர் குடும்பத்தினர் குறைகளைக் கேட்டறிந்தார்.

நெடுஞ்சாலை ஓரம் குடியிருப்புப் பகுதி துவங்கும் இடத்தில் நெடுஞ்சாலையையும், குடியிருப்பினையும் இணைக்க இரு சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. 70 மீட்டர் நீளம் கழிவு நீர்க் கால்வாய் கட்டி நெடுஞ்சாலை ஓரத்தில் மழை நீரால் குடியிருப்பு பாதிக்





காதவாறு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. 'இந்திரா நினைவுக் குடியிருப்பு' எனும் பெயர்ப் பலகை 15' உயரத்தில் அமைக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. ஒவ்வொரு வீட்டின் முன்புறம் இரு தென்னங் கன்றுகள் நடப்பட்டு, செழிப்பாக வளரத் துவங்கியுள்ளன. இந்தக் குடியிருப்பினை ஒட்டி கைக்குழாய் ஒன்றும் அமைந்துள்ளது. இதன் அருகில் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் உணவுப் பொருள்கள் வழங்கும் கடை அமைந்துள்ளது. குடியிருப்பின் கிழக்குக் கோடியில் சத்துணவு மையம் அமைந்துள்ளது. சத்துணவு மையத்திற்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் புதிய கட்டிடம் கட்டித் தரப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புக்காக 1987-88'ல் கீழ்க்கண்டவாறு மொத்தம் ரூ. 3.24 லட்சம் ஊரக நிலமற்றோர் வேலை உறுதி அளிப்புத் திட்ட நிதி செலவழிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1. 34 வீடுகள் ரூ.6,000 வீதம் | ரூ.2,04,000 |
| 2. 34 கழிப்பிடங்கள் ரூ. 1,200வீதம் | ரூ.40,800 |
| 3. நிலமட்ட நீர்த்தேக்கத்தொட்டி | ரூ.25,000 |
| 4. சமுதாயக்கூடம் | ரூ.30.000 |
| 5. கழிவுநீர்க்கால்வாய் | ரூ. 8,000 |
| 6. தொலைக்காட்சிப் பெட்டி | ரூ. 6,500 |
| 7. சிறுபாலங்கள் | ரூ.10,000 |
| | ரூ.3,24,300 |

இவை தவிர்த்து, தெருவிளக்குகள் அமைப்பதிலும், வீடுகளுக்கு 'ஒருவிளக்கு' அமைப்பதற்குமான செலவு மின்சார வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1986-87'ம் ஆண்டுத்திட்டத்தில் ரூ. 35000 செலவில் சத்துணவுமையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. மீதமுள்ள குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தரும் பணி நடைபெறுகிறது.


## தர்மபுரி வட்டார்ரம், கிருஷ்ணாபுரத்தில்

தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டாரத்தில் கிருஷ்ணாபுரம் கிராமம் தர்மபுரிக்கு 12 கிலோ மீட்டர் தொலைவில் தர்மபுரி -திருப்பத்தூர் பஸ் மார்க்கத்தில் அரியகுளத்திற்குக் கிழக்கே உள்ளது. இயற்கை வளம் சூழ்ந்த அழகிய கிராமம், கிருஷ்ணாபுரம். இது கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் அடங்கியுள்ளது.

இவ்வூராட்சியின் மக்கட் தொகை 3069. இதில் ஆதிதிராவிட மக்களின் எண்ணிக்கை 210. சமுதாயத்தில் மிகவும் பின்தங்கியுள்ள இம்மக்களில் 20 நபர்களுக்கு 1987-88ம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ் இலவசமாகக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ''இந்திரா நினைவுக் குடியிருப்புகள் எனப் பெயர் இடப்பட்டுள்ள இக்குடியிருப்பு ஒவ்வொன்றும் ரூ. 6,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு ரூ. 15,000 செலவில் குடிநீர்க்குழாய் இணைப்பும், ரூ. 16,100 செலவில் ஒரு சிறுபாலமும், ரூ. 7,900 செலவில் பாதை வசதியும், குடியிருப்பு தோறும் புகையில்லா அடுப்பும், ரூ. 1,200 செலவில் குளியல் வசதியுடன் நவீனக் கழிப்பிடமும் கட்டித் தரப்பட்டுள்ளன.

மேலும் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் பாரதவங்கி மற்றும் சென்ட்ரல் வங்கி மூலம் 1983-84ம் ஆண்டில் கிராமிய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நலிவடைந்த 15 மகளிர்களுக்கு பாய் நெசவுத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டது. பாய் முடைதல் மூலம் வருமானம் ஈட்டிக் கொள்ள நபருக்கு ரூ. 500 மான்யத்தில் ரூ. 1,500 கடன் உதவியும் வழங்கப்பட்டுள்ளது.





## தர்மபுரி வட்டாரம், வெள்ளோலை கிராமத்தில்

தர்மபுரி மாவட்டத்தைச் சார்ந்த, தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தில் தர்மபுரி-மொரப்பூர் சாலையில் 8 கிலோ மீட்டர் தொலைவில் எழில் மிகுந்த சூழ்நிலையில் வெள்ளோலை கிராமம் அமைந்துள்ளது.

இக்கிராமத்தின் மக்கட் தொகை 1839. இதில் ஆதிதிராவிட மக்களின் எண்ணிக்கை 168 ஆகும். சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதிதிராவிட மக்களில் 20 நபர்களுக்குத் தமிழக அரசு 0.80 ஏக்கர் தகுதியான இடத்தை நில ஆர்ஜிதம் செய்து குடும்பத்திற்கு 3 சென்ட் வீதம் வீட்டுமனைப்பட்டா வழங்கியது. அந்த மனைகளில் 1987-88ம் ஆண்டின் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 6,000 செலவில் இருபது குடியிருப்புகள் இலவசமாகக் கட்டித் தரப்பட்டுள்ளன. இப்பகுதிக்கு ரூ. 11,500 செலவில் ஒரு குழாய்க் கிணறும், ரூ. 10,000 செலவில் கழிவு நீர் வடிகால்வாயும், ரூ. 4,000 செலவில் பாதை வசதியும், ரூ. 1,200 செலவில் குளியல் வசதியுடன் நவீன கழிப்பிடமும், குடியிருப்பு தோறும் புகையில்லா அடுப்பும், மின்இணைப்பும் முற்றிலும் இலவசமாகச் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் வெள்ளோலை கிராமத்தில் இந்தியன் கிராம வங்கி மூலம் 1985-86ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ்-கிராமிய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்-20 ஆதிதிராவிட மகளிர்களுக்கு தலா ரூ. 3,000 வீதம் (தலா ரூ. 1,000 மான்யத்துடன்) கறவை மாடுகள் வாங்க உதவி செய்யப்பட்டுள்ளது.

## மாநிலத்தில் ஒரு மாதிரி ஆதிதிராவிடர் குடியிருப்பு

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம் வேவு அள்ளி ஊராட்சியில் உள்ள கரகூர் என்னும் கிராமத்தில் 1987-88ம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு 23 குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 17 குடியிருப்புகளில் 3 கன மீட்டர் அளவுள்ள கரிம வாயுக் கலன்கள் பாலக்கோடு இந்தியன் வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளன. இக் கலன்கள் அனைத்தும் கே.வி.ஐ.சி. மாடலில் நிறுவப்பட்டுள்ளன. ஒரு கலனின் மதிப்பு ரூ. 6900; இதில் அரசு மான்யம் ரூ. 2000 ஆகும். மீதமுள்ள 6 குடியிருப்புக்களில் வங்கி உதவி எதுவுமின்றி குடியிருப்போர் அரசு மானியத் தொகையுடன் தங்கள் சொந்த தொகை மூலம் கலன்கள் அமைப்புப் பணியினை முடித்துள்ளனர். இக் கலன்கள் ஆறும் ஜனதா மாடலில் கட்டப்பட்டுள்ளன.

மேலும் இந்த 23 கரிம வாயுக் கலன்களில் பயன்படுத்தப்படும் அடுப்புகள் குறைந்த செலவில் உள்ளூர் தொழில் நுட்பக் கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னெடுங்காலமாக குப்பை கூளங்களிலேயே அடுப்பு எரித்து அலுத்துவிட்ட இங்குள்ள ஆதி திராவிடர் குடும்பங்களில் உள்ள பெண்கள் இந்த சாண எரிவாயு அடுப்புகளை வரப் பிரசாதமாகக் கருதுகிறார்கள்.


## வட ஆர்க்காடு மாவட்டத்தில்

வடார்க்காடு மாவட்டம், மாதனூர் வட்டாரம் நொண்டிக்குப்பம் கிராமம் பழனி சொல்கிறார்.


நான் மாதனூர் ஒன்றியத்தினைச் சேர்ந்த நொண்



நொண்டிக்குப்பம் பழனி







பள்ளிக்குப்பம்
மாணிக்கம்மாள்

டிக்குப்பம் சிற்றுரைச் சேர்ந்தவன். நான் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தேன். என்னுடன் மூன்று நபர்கள் எங்கள் குடும்பத்தில் உள்ளோம். விவசாயக் கூலி வேலை செய்து பிழைத்து வந்த நாங்கள், கோழிப் பண்ணை அமைக்க மாதனூர் ஊராட்சி ஒன்றியத் தினைச் சேர்ந்த கால்நடை விரிவு அலுவலர் அவர்கள் ஆலோசனை வழங்கியதன் பேரில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் கோழிப்பண்ணை அமைக்க மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கடன் விண்ணப்பம் செய்தேன். எனக்கு மாதனூர் பாரத வங்கி ரூ. 5500 கடன் வழங்கியது. அரசாங்கமும் இதற்கு ரூ.1833 மான்யமும் அளித்தது. இதன் மூலம் கோழிப் பண்ணை அமைத்து இறைச்சிக்கோழிக் குஞ்சுகளையும் வாங்கி வளர்த்து உரிய பருவத்தில் இறைச்சிக் கோழிகளை விற்பனை செய்து, மீண்டும் அந்தப் பணத்தை முதலீடு செய்து, இறைச்சிக் கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்த்து வருகிறேன். ஒவ்வொரு முறையும் 100-150 கோழிக்குஞ்சுகள் வாங்குவதன் மூலம், எனக்கு மாதம் ரூ. 300 நிகர வருமானம் கிடைக்கிறது. இதன் மூலம் நான் என்னுடைய குடும்பத்தினை நல்ல முறையில் நடத்திச் செல்ல வாய்ப்பு உள்ளது. முன் இருந்த என்னுடைய வாழ்க்கைத் தரம், இந்த கோழிப்பண்ணை வருவாய் மூலம் மேலும் உயர்ந்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஊ**ரக வளர்ச்சித் திட்டப்பணியில் வடார்க்காடு மாவட்டம், மாதனூர் வட்டாரம், பள்ளிக்குப்பம் கிராமம் மாணிக்கம்மாள் சொல்கிறார்.

நான் மாதனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு குறுநில விவசாயி ஆவேன். எனக்கு 0. 65 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இவற்றில் நெல் கரும்பு சாகுபடி செய்து வருகிறேன்.

மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் என்னைச் சந்தித்து சமுதாயக் காடு வளர்ப்புத்திட்டத்தின் மூலம் பரவலாக்கப்பட்ட நாற்றங்கால் 10 சென்ட் நிலத்தில் அமைக்குமாறும், அதற்காக பாலிதீன் பைகள் மற்றும் விதைகள் வழங்குவதாகவும் தெரிவித்தார்கள். இந்தப் பணி நான் ஏற்கனவே செய்யாததால் முதலில் தயக்கமடைந்தேன். இதற்காக மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு வார காலம் பயிற்சி அளித்தனர்.


எங்கள் குடும்பத்தில் சிறுவர் சிறுமிகளுடன் சேர்த்து 6 நபர்கள் உள்ளோம். பாலிதீன் பைகளில் மண் மாட்டுத்தொழுவம் ஆகிய கலவையினைப் பைக்குள் நிரப்பி, அவற்றினை 10 பைகள் வரிசைக்கு 100 கொண்டவாறு அடுக்கி, கருவேலன் விதைகளை ஊன்றினேன் ஒரு வார காலத்திற்குள் நன்கு முளைத்தது. களை நீக்கி முதல் மாதத்தில் ஒரு நாளைக்கு பூவாளி கொண்டு இருமுறையும் இரண்டாம் மாதத்தில் ஒருமுறையும் தண்ணீர் ஊற்றி வருகிறேன்.

மாதனூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் எங்களுக்கு மலிவு விலையில் அரிசியும் கோதுமையும் வழங்கியுள்ளார்.

6 மாதங்கள் வளர்த்த பின்னர் ஒன்றியத்தில் சமுதாயக்காடு வளர்ப்பு மூலம் செடிகள் நட ஒரு செடி 57 பைசாவாக எடுத்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார். நான் 2500 நாற்றுகள் வளர்த்து எனது 10 சென்ட் நிலத்தில் 6 மாத காலத்தில் விதை, பை கிரயம் போக ரூ. 10,000 வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

ஒரு ஆண்டு முழுவதும் ஒரு ஏக்கர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்து ரூ. 6,000 லாபம் கிடைப்பதைவிட குறைந்த நிலப்பரப்பில் குறைந்த தண்ணீரைக் கொண்டு நாற்றங்கால் அமைத்து ரூ. 10,000 வருமானம் கிடைப்பதில் எனக்கு மகிழ்ச்சி.

நான் சமுதாயக் காடு வளர்ப்புப் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு அரசுக்கு ஒத்துழைப்பு தருவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



## வேலூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சமூகக் காடுகள் வளர்ப்பு

வடஆர்க்காடு மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம், சதுப்பேரி கிராம பொதுப்பணித்துறை ஏரியில் 1987-88ஆம் ஆண்டு சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ஊரக நிலமற்றோர் வேலை உறுதியேற்புத் திட்டத்தில் 23.5 எக்டேரிலும் (57 ஏக்கர்) தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 12 எக்டேரிலும் (30 ஏக்கர்) கருவேலன் செடிகள 1987-செப்டம்பர் திங்களில் நடவு செய்யப்பட்டன.

அப்படி நடவுசெய்யப்பட்டுள்ள கருவேலன் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிப் பராமரிப்புச் செய்வதற்கு முதல்ல் 4 ஏக்கருக்கு ஒரு பெண் ஆள்வீதம் மொத்தம் 20 ஆட்கள் நியமனம் செய்யப்பட்டு, பராமரிப்புப் பணிகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த நிலமற்ற விவசாயக் கூலிகள் ஆவர். ஆரம்பத்தில் பராமரிப்புப்பணி செய்பவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 56 ரூபாய் வீதமும், 1988- ஏப்ரல் திங்கள் முதல் (2ஆம் ஆண்டு) ஏக்கர் ஒன்றுக்கு 50 ரூபாய் வீதமும், பராமரிப்புத் தொகை வழங்கப்படுகிறது. பராமரிப்புத் தொகை ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதிக்குள் ரொக்கம், அரிசி மற்றும கோதுமையாக விநியோகம் செய்யப்படுகிறது.



சதுப்பேரி ஏரியில் நடவு செய்யப்பட்டுள்ள கருவேலன் செடிகளை ஒரு நபருக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் (640 செடிகள்) 88 நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கு 1988ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மர உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மர உரிமம் பெற்றுப் பராமரிப்புப் பணிகளைச் செய்துவரும் பயனாளிகள் அனைவரும் இத்திட்டத்தினைப் பெரிதும் வரவேற்கின்றனர். தவிர உற்சாகத்துடன் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தில் பங்கேற்றுப் பராமரிப்புப் பணிகளைத் திறம்படச்செய்து வருகின்றனர். நடப்பட்ட செடிகளில் தற்போது 80 விழுக்காடு கருவேலன் செடிகள் நல்ல நிலையில் உள்ளன.

## பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டாரத்தைச் சேர்ந்த கிட்டான் எனபவரின் சாதனை

நான் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன். நான் 5-வது வகுப்புவரை படித்துவிட்டு, சைக்கிள் கடை ஒன்றில் சேர்ந்து சைக்கிள் பழுது பார்க்கும் தொழிலினைக் கற்றேன்.


எனக்கு 23-வது வயதில் திருமணம் நடந்தது. என்னுடைய மாத வருமானம் ரூ.260. இதை வைத்துக் கொண்டு எனது குடும்பத்தை நல்ல முறையில் நடத்த இயலவில்லை.

இந்தச்சமயத்தில் பெருந்துறை வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து நான் வசிக்கும் பகுதியில் கணக்கெடுப்பு நடைபெற்றது. அதன் பிறகு, கமிட்டியில் என்னை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பய

னாளியாகத் தேர்ந்தெடுத்தனர். ஊர்நல அலுவலர் மூலம் வங்கிக்கும் கடன் விண்ணப்பம் அனுப்பினேன்.

பெருந்துறை பரோடா வங்கியில், பிளாஸ்டிக் ஒயர் பின்னுவதற்கும், சைக்கிள் கடை வைக்கவும், சிறிய பெட்டிக் கடை வைக்கவும் எனது குடும்பத்திற்கு கடன் வழங்கப்பட்டது. எனது குடும்பத்திற்கு வழங்கப் பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 7500;இதில் ரூ. 2499 அரசு மானியமாக வழங்கப்பட்டது.

மேற்கண்ட கடனுதவிகளால் தற்போது எனது குடும்ப வருமானம் ரூ. 1130 ஆக உயர்ந்துள்ளது. வங்கிக் கடனை நான் தவறாது திருப்பிச் செலுத்தி வருகிறேன். நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கி றேன். ஏனெனில் எனக்குக் கிடைக்காத அரிய செல்வ மாகிய கல்வியறிவினை எனது குழந்தைகளுக்கு என்னால் தற்போது அளிக்க முடிகிறது.




## தாராபுரம் வட்டாரம் திருமலைபாளையம் கிராமத்தில்

தாராபுரம் வட்டாரம், திருமலைபாளையம் கிரா மத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்த 15 பயன் தாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மண் பாண்டம் செய்யும் தொழிலைப் போதுமான நிதி வசதி இன்மையால் முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். எனவே 1987-88ஆம் ஆண்டில் இக்கிராமம் தேர்வு செய்யப்பட்டு, தளவாய்ப்பட்டினம் பஞ்சாப் நேஷனல் வங்கிக்கிளை மூலம் 15 பயன்தாரர் களுக்கும், தலா ரூ. 1800 வீதம் மண்பாண்டத் தொழி லைச் செய்யவும், செய்த மண்பாண்டங்களை வெளியில் கொண்டு சென்று விற்க ஒற்றை மாடும், வண்டியும் வாங்கவும், ரூ. 3500- கடனாக வழங்கப்பட்டது. இதில் மானியம் மட்டும் ரூ. 2650- ஆகும். இதன் மூலம் பயனாளிகள் வருமானம் கணிசமாகப் பெருகி யுள்ளது.

## திருமதி சுசீலா

இதன் தொடர்பாக திருமதி த.சுசிலாவை விசாரித்த பொழுது தனது குடும்பத்தில் மொத்தம் 8 நபர்கள் உள்ளதாகவும், கணக்கெடுப்பின் போது குடும்பத்தின் வருட வருமானம் ரூ. 3000-க்குக் குறைவாக இருந்த தாகவும், தினசரி ஜீவனத்திற்கே சிரமப்பட்டதாகவும், தொழிலை மேற்கொள்ளுவதற்கு அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டியிருந்ததாகவும், சாமான்களைக் கொண்டு செல்ல வண்டி வாடகை கொடுக்க வேண்டி யிருந்ததாகவும் தெரிவித்தார்.

தற்பொழுது வாரம் உற்பத்திச் செலவு போக ரூ. 250 -கிடைப்பதாகவும், மாதம் எப்படியும் ரூ 800-க்குக் குறையாமல் கிடைப்பதாகவும், குடும்பம் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் தெரிவித்து தனது நன்றி யினையும் தெரிவித்துக் கொண்டார்.



## அலங்கியம்-அமராவதி ஆற்றுப்புறப்போக்குப் பகுதிகளில் சமூகக்காடுகள் வளர்ப்பு

சமூகக் காடு வளர்ப்புத் திட்டமானது கிராம மக்களுக்குத் தடையின்றி எரிபொருள் கிடைக்கவும் காலநடைச் செல்வங்களுக்குத் தீவனம் கிடைக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் வறு மைக் கோட்டிற்குக் கீழ் உள்ள தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கவும் வழி வகை செய்கிறது. இது நாட்டிற்கும், தனி நபர் முன் னேற்றத்திற்கும் பேருதவியாக இருக்கிறது.

## அமராவதி ஆற்றின் இருகரைகளிலும்

1987-88ல் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ்,சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் பெரியார்.மாவட்டத்திலுள்ள தாராபுரம் வட் டாரத்தில் அலங்கியம் என்னும் கிராமத்திற்கு அருகே யுள்ள அமராவதி ஆற்றின் இருகரைகளிலும் உள்ள புறம்போக்கு நிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரு கிறது. அதன்படி அமராவதி ஆற்றின் இடது கரையில் 6 பயனாளிகளும், வலது கரையில் 4 பயனாளிகளும் தலா ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 4000 எண்ணிக்கையுள்ள சூபாபுல் மற்றும் கருவேல் செடிகளைக்கால்நடை தீவ னங்களுக்காகவும் எரிபொருளுக்காகவும் நட்டுப் பராமரித்து வருகின்றனர்.

இவைகளைப் பராமரித்து வருவதற்காக ஒரு பய னாளிக்கு ஒரு மாதத்திற்கு 8 மனிதசக்தி நாட்கள் என்று கணக்கிட்டு ரூ. 14.80 மதிப்புள்ள 8 கிலோ அரிசியும், ரூ. 6.80 மதிப்புள்ள 4 கிலோ கோதுமை யும், ரொக்கமாக ரூ. 58.40ம் மொத்தம் ரூ. 80 வீதம் அக்டோபர் 1987 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் வழங்கப்பட்டுள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் நடப்பட்டுள்ள மரங்களின் பலனைப் பயனாளியே அனு பவிக்க 2 சி மரப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது.

## திருமதி குஞ்சம்மாள்

இது குறித்து திருமதி குஞ்சம்மாள் என்ற பயனாளி தெரிவித்ததாவது : ''தற்போது மாதந்தோறும் எங்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கின்றது. அதிலும் எங்களுக்கு மர உரிமைப்பட்டா கொடுக்கப் பட்டதால், எங்களின் உழைப்பின் பலன் எங்களுக்கே கிடைக்க இருக்கின்றது என்கின்ற உணர்வு எங் களுக்கு ஏற்படுகின்றது.''

## காமராசர் மாவட்டப் பெருந்திட்ட வளாகக் குடிநீர்த் திட்டம்

**—சில செய்திகள்.**

- பெருந்திட்ட வளாகத்தின் மக்கள் தொகை 7,000.
- நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் நீர் என்ற முறையில் மொத்தம் நாள்தோறும் 5 இலட்சம் லிட்டர் குடிநீர் தேவைப்படுகிறது.
- குடிநீர்த் திட்டத்தைச் செயலாக்குவதற்காக அரசு ரூ. 25 இலட்சம் அனுமதித்துள்ளது.
- நிரந்தரமான நீர் ஆதாரம் கொண்ட ஆறுகளோ, நிலத்தடி நீரோ இந்தப் பகுதியில் இல்லாததால், சுண்ணாம்புக் கற்களைத் தோண்டிய பின்னர் உருவாகும் குவாரிகளில் மழைநீர் சேகரிக்கப்பட்டு, அதனை ஆதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
- பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு இரண்டு இலட்சம் லிட்டர்.
- 40 குதிரைத் திறன் கொண்ட நீர் மின்விசையால் 18.2 கி.மீ. நீளமுள்ள குழாய்களின் வழியாகக் குடிநீர், மேல்நிலை நீர்த்தேக்கத்தில் ஏற்றப்படுகிறது.
- நான்கு பொதுக்குழாய்களின் மூலம் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள பகிர்மானக் குழாய்களின் வழியாகத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**3 ஆம் பக்கத் தொடர்ச்சி**

சொல்கின்ற நேரத்திலே -இந்த விருதுநகரின் மைந்தன் காமராஜர் பிறந்த நாளிலே திறந்து வைக்கிறேன் என்பதை எண்ணிப் பெருமையடைகிறேன். நன்றி உணர்வுடன் அந்த மாமனிதரை நினைத்துப் பார்க்கிறேன். அவர் இந்த நாட்டுக்குச் செய்த மாபெரும் பணிகளை நினைத்துப் பார்த்து அவருக்கு நாம் மரியாதை செலுத்தவேண்டும்."

''வரலாற்றை நாம் நுணுகிப் பார்க்க வேண்டும். சென்னை, பம்பாய், கல்கத்தா, லக்னோ, அலகாபாத் போன்ற பற்பல நகரங்களைச் சேர்ந்த தலைவர்கள் நமது வரலாற்றில் சாதனை படைத்திருக்கிறார்கள். சி.ஆர். தாஸ், மோதிலால்நேரு போன்ற வழக்கறிஞர்கள் பெருந்தலைவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். அன்சாரி போன்ற பெரும் மருத்துவர்கள் தலைவர்களாக விளங்கியிருக்கிறார்கள். ஆசார்ய கிருபாளனி, ஆசார்ய நரேந்திர தேவ் போன்ற பேராசிரியர்கள் தலைவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். பெரிய நகரத்தைச் சேர்ந்தவர்கள் -பெரிய தொழில்களுக்குச் சொந்தக்காரர்கள் எல்லாம் இந்திய அரசியல் களத்தில் காட்சி தந்த போது, காமராஜர் ஒரு சிற்றூரில், எளிய குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி உள்ள குடும்பத்தில், பிறந்து இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, தலைசிறந்த பதவியை எய்தி இருக்கிறார்.

''காந்தியப் புரட்சியின் சரியான வடிவமாகக் காமராஜ் விளங்கினார். 1915ல் காந்தியடிகள் இந்திய விடுதலை இயக்கத்தில் பணி ஆற்றவந்த போது -இந்திய காங்கிரசின் வயது 30 ஆக இருந்தது. பெரிய நகராட்சிகளில் சில உணவுக் கூடங்களில் தலைவர்கள் சந்தித்து காங்கிரசின் தீர்மானங்களை நிறைவேற்றிய காலம் அது. ஆனால் மகாத்மா காந்தி அரசியலுக்கு வந்தபின்னர் தான் அரசியல் கருத்துக்கள் கிராமங்களுக்கும் பரவின. அதற்கு முன்பு அரசியல் என்பது மேட்டுக்குடியினருக்கு உரியதாக இருந்தது. மேலை நாட்டில் கூட அரசியல், சர்ச்சில், லாயிட் ஜார்ஜ் போன்ற பெரிய மனிதர்களுக்கு உரியதாகவே இருந்தது. ஆனால் இந்திய மண்ணில் காந்தியடிகள் தோன்றிய பின்னர் தான் அரசியல் சாதாரண மக்களுக்குப் பரவியது.

''அவரது அரசியல் -பேச்சாளர்களை மேடைகளிலிருந்து அப்புறப்படுத்துவதல்ல! அவரது அரசியல் நாடாளுமன்ற உறுப்பினர்களை மன்றத்திலிருந்து விரட்டுவதல்ல. மக்களுக்கு விழிப்பூட்டுவதே-மக்களுக்காகப் பாடுபடுவதே அவரது அரசியல். எதையும் எதிர்பார்க்காமல் மக்களுக்குச் சேவைசெய்வதே அவரது இலட்சியமாக இருந்தது. அந்த வழியில் தான்-அந்த நெறியில் தான் காமராஜர் சென்றார்.

''இன்று காமராஜரின் நினைவில்லத்திற்குச் சென்று பார்வையிட்ட போது ஒரு நிகழ்ச்சி என்னை ஈர்த்தது. அவர் கைப்பட எழுதி வைத்த வரவு செலவுக் கணக்கு விவரக் குறிப்பு ஒன்று அங்கே காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காசுக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் அவர் வரவு செலவுக் கணக்கு எழுதி வைத்திருக்கிறார். இந்தப் பண்பு தான் அவரது பெருந்தன்மைக்கு அடிப்படை; இந்தப் பண்புதான் அவரைத் தலைவராக உயர்த்தியது.

''தனது கொள்கையில் நம்பிக்கை உடையவராக விளங்கினார் காமராஜ். அவர்தான் காந்திய யுகத்தின் சான்றாகத் திகழ்ந்தார். உயர்ந்த கொள்கைகளும் சிறந்த குணங்களும் கொண்டிருந்தவர் காமராஜர்.''

விழா இறுதியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தீபக் ஜெய்ன் நன்றி நவின்றார்.

விழாத் தொடக்கத்தில் சிவகாசி அருப்புக்கோட்டை, சாத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து பள்ளிமாணவர்கள் தொடர் ஓட்டமாகப் புறப்பட்டு காமராஜர் ஜோதியை ஏந்திவந்து மேதகு ஆளுநர் அவர்களிடம் கொடுத்தனர்.

விழாவின் நினைவாக மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களுக்கு கிரேக்க மாவீரன் அலெக்சாண்டர் உருவச் சிலையையும், மாண்புமிகு மத்திய அமைச்சர்களுக்கு நீதி தேவதையின் உருவச் சிலைகளையும் நினைவுப்பரிசுகளாக மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

**—நமது செய்தியாளர்**

## அட்டைப்பட விளக்கம்

ஊரக வளர்ச்சித் திட்டங்களால், நமது கிராமப்புறங்கள் இன்று மகத்தான முன்னேற்றமடைந்து வருகின்றன. ஊரகப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியினால், வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்ந்த மக்களின் வாழ்வில் இன்று புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் போன்றவைகளால் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தினால் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. கைவினைப் பொருட்களைப் பெண்கள் தயார் செய்கின்றனர்.

இக்காட்சிகளை இந்த இதழின் அட்டைப்படம் சித்திரிக்கின்றது.

---

## தமிழரசு

**16-8-1988 இதழ்**

**விடுதலைநாள் சிறப்பிதழாக மலருகிறது....**

- ★ விடுதலை பெற்ற 40 ஆண்டுகளில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின் தொகுப்பு.
- ★ நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட தியாகிகளின் வரலாறு.
- ★ விடுதலை இயக்க நாடக மேடைப் பாடல்கள்.

மற்றும்

அரிய செய்திகள், புகைப்படங்கள்

---




1.7.88 இதழ் அட்டைப் படம் சிறப்பாக அமைந்திருந்தது. 'அறிவுச்சுடர்' தேனினும் இனிமையாக இருந்தது. கவியரசுவின் பிறந்த நாள் கவிதை படித்துச் சுவைத்தேன். பிற செய்திகள் அனைத்தும் வெகு சிறப்பாக இருந்தன.

மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

19-ஆம் ஆண்டில், வண்ணப்படங்களுடன் எண்ணக் குவியல்களைத் தாங்கிப் பீடுநடை போடும் 'தமிழரசின்' புகழ் தமிழகமெங்கும் பரவிவருவதைப் போற்றுகின்றேன்.

''இளைய மாவட்டத்தின் இணையற்ற முன்னேற்றம்'' கட்டுரை மற்ற மாவட்டங்களுக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

ஆர். அத்தியப்பன்,
மூணுசாவடி, பாச்சல்.

தமிழரசு செய்தி, கட்டுரை, துணுக்கு, படங்களுடன் பயனளிக்கும் வகையில் வெளிவந்து மகிழ்விக்கிறது.

எஸ்.எஸ். வாசன்
வந்தவாசி

பத்தொன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'தமிழரசு' பல்லாண்டு பல்லாண்டு தொடர்ந்து வளர வாழ்த்துகிறேன்.

ப. ஷேக்அலாவுதீன்,
திருநெல்லிக்காவல்.

1.7.88 இதழில் திருப்பூர்குமரன் துணைவியாரின் இறுதி ஆசை பற்றிய செய்தி படித்ததும் கண்களில் நீர் கொட்டியது. ஒருமைப்பாடு பற்றிய கவிஞர் கண்ணதாசன் கட்டுரை சிறப்பாக இருந்தது. புலவர் தமிழ்ப்பித்தன் நடையைப் போற்றுகிறேன்.

கவிஞர் கானதாசன்,
சென்னை-16.

'தமிழரசு' தமிழக அரசின் திட்டங்களை தெளிவாக அறிந்து கொள்ள உதவும் கலைப்பெட்டகமாக விளங்குகிறது. ஒவ்வொரு திங்களும் நடைபெறும் அரசின் திட்டப்பணிகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது. அரசு ஊழியர்களுக்கும், பாமர மக்களுக்கும் பயன்படும் நூலாக விளங்குகிறது.

ஆர். சுப்பாராஜு,
குருவிகுளம்.

1.7.88 இதழில், எங்களது மாவட்டமான பசும்பொன்முத்து ராமலிங்கம் மாவட்டத்தின்வளர்ச்சி குறித்த சிறப்புக் கட்டுரையைப் படித்தவுடன் ஆனந்தமும், ஆச்சரியமும் அடைந்தேன்.

எஸ். நாகரத்தினம்,
படமாத்தூர்.

பதினெட்டாண்டுகள் முடிந்து, பத்தொன்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'தமிழரசு' இதழுக்கு இதயங்கனிந்த பாராட்டுகள்.

கோவை விழாவில், திருப்பூர் குமரன் துணைவியார் ராமாயியம்மாள் விடுத்த வேண்டுகோள், உண்மையில் உருக்கமாகவும் உள்ளத்தில் ஒரு நெருடல் ஏற்படுத்துவதாயும் அமைந்திருந்தது.

—அரிமா. பூபாளம் ப. முருகேச பாண்டியன்,
கரப்பாடி.

மக்கள் - குறிப்பாக, கிராமப்புற மக்கள் - பாமரமக்கள் அரசின் சாதனைகளை - வளர்ச்சிப் பணிகளை அறிந்து கொள்ளச் செய்வது 'தமிழரசு' பத்திரிகை ஆகும்.

நாட்டு நடப்பு அரசின் நல்லபல திட்டங்கள் போன்றவற்றையும், அரசின் பல துறைகள் பற்றிய விரிவான செய்திகளையும் நாடறியச் செய்யும் ஏடு 'தமிழரசு'

—தேவி உபாசகர்,
சுவாமி இராமதாசர்
திருவேற்காடு.
சென்னை-77.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# ஊரக வளர்ச்சிப் பணிகள் தொகுப்பு - 2

